# தமி



16-10-1977 50

# அரசு — மிகவுயர்ந்த தரமான

# போர்ட்லேண்ட் சிமெண்ட் உங்களுக்குக் கிடைக்கிறது

அரசு சிமெண்ட் தரத்தில் தலைசிறந்து விளங்குவது; தரமே உருவானது. வலிமைக்கு மற்றொரு பெயரான அரசு, வலுவான கட்டுமானங்களுக்கு நேர் நிகரில்லாததாகும்.

அரசு சிமெண்டுக்குள்ள தனிச் சிறப்புத் தன்மைகள், அதனால் கட்டப்படும் எதையும் திண்மையும், நீர்க்காத திறனும் கொண்டு நெடுங்காலம் நீடித்து விளங்கச் செய்கின்றன.

அரசு ஒரு நவீன, விஞ்ஞான ரீதியான தயாரிக்கப்படும் போர்ட்லெண்ட் சிமெண்ட் குடியிருப்பு இல்லங்கள், பண்ணைக் கட்டிடங்கள், அலுவலக கட்டிடங்கள், தானியக் குதிர்கள், குழாய் அமைப்புகள், அணைகள், பாலங்கள், நீர்த்தொட்டிகள், நீர்த் தேக்கங்கள், நீச்சல் குளங்கள், அலங்கார அமைப்புக்கள் போன்ற எத்தனையோ கட்டுமான வேலைக்கு அரசு அருமையானதொரு சிமெண்ட்.

அரசு தமிழ்நாட்டிலேயே முதலாவதான ஒரே அரசினர் துறை சிமெண்ட் ஆலை




யால், கடுமையான தரக்கட்டுப்பாடுகளைக் கையாண்டு உற்பத்தி செய்யப்படுகிறது.

## தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்

ஆலங்குளம், இராமநாதபுரம் மாவட்டம்

## அரசு — வலிவும் வனப்பும் வாய்ந்தது

AC-16

அட்டைப் பட விளக்கம்



# கிழக்குக் கடற்கரையின் அரசி!

தரங்கம்பாடியில் உள்ள 'டான்ஸ்பர்க்' ( Donsborg ) கோட்டை, இந்த இதழின் மேலட்டையை அலங்கரித்துள்ளது.

தரங்கம்பாடி என்றால் 'அலை கிராமம்' ( Wave Village ) என்று மாவட்ட வரலாற்று நூலில் காணப்படுகிறது.

தரங்கம்பாடியில் கடல் அரிப்பினால் பாழடைந்துள்ள சிவன் கோவிலில் குலசேகரப் பாண்டிய மன்னனின் கல்வெட்டு ஒன்று காணப்படுகிறது. அக் கல்வெட்டில் தரங்கம்பாடியின் பெயர் 'சடங்கன் பாடி' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

கிழக்குக் கடலில், கி. பி. 1618-ஆம் ஆண்டில், கப்பல் உடைந்ததால், 'கேப்டன் ரோலண்ட் கிரேப்' (இவர் தன் இளமைக் காலத்தில், சிலகாலம் தஞ்சாவூரில் இருந்துள்ளார்) என்பவர், தஞ்சாவூரை ஆண்ட நாயக்க மன்னரிடம் சென்று பாதுகாப்புப் பெற்றார். நாயக்க மன்னரிடம் இருந்து 5 மைல் நீளமும், 3 மைல் அகலமும் உள்ள இடத்தை, ஆண்டிற்கு ரூபாய் 3,111 வாடகைக்குப் பெற்றார். அந்த இடத்தில் தான் 'கேப்டன் ரோலண்ட் கிரேப்', 'ஓவ் கெடி' ஆகிய இருவரின் கூட்டு முயற்சியால் டேனிஸ் குடியேற்றம் (செட்டில்மெண்ட்) அமைக்கப் பட்டது.

தரங்கம்பாடியில் உள்ள 'டான்ஸ்பர்க்' கோட்டை கி. பி. 1620-ஆம் ஆண்டில், டேனிஸ் நாட்டுக் கிழக்கு இந்தியக் கம்பெனிக்காக, 'ஓவ் கெடி' என்பவரால் கட்டப் பட்டதாகும். இக்கோட்டை 1624-ஆம் ஆண்டில் டென்மார்க் அரசரின் உரிமையாகியது. 1801-ஆம் ஆண்டில் இக்கோட்டை ஆங்கிலேயர்களின் கைவசமாகியது. இறுதியில் இக்கோட்டையை, 1845-ஆம் ஆண்டில் ரூபாய் 12.5 இலட்சத்திற்கு ஆங்கிலேயர்கள் வாங்கியதாகத் தெரிய வருகிறது. 1860-வரை தரங்கம்பாடியே தஞ்சை மாவட்டத்தின் தலைநகரமாக இருந்துள்ளது. அங்குதான் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகமும், மாவட்ட செஷன்ஸ் நீதிமன்றமும் இருந்துள்ளது.

'லெய்ப்ஷிக் லூத்தர்ன் மிஷன்' தலைமையகமும், 'ரோமன் கத்தோலிக்க மிஷனும்' தரங்கம்பாடியில் உள்ளன.

முதல் தமிழ்-ஆங்கில லெக்சிகன் அகராதி, 1779-ஆம் ஆண்டில், ஜெர்மன் நாட்டு லூத்தர்ன் மிஷனால், தரங்கம்பாடியிலேயே வெளியிடப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும். முதன் முதலாக அச்சு இயந்திரம் நிறுவப்பட்ட இடம் என்ற பெருமையைப் பெற்றதும் தரங்கம்பாடியே! முதன் முதலாகத் தமிழில் பைபிளை வெளியிட்ட பெருமையும் தரங்கம்பாடிக்கே உரியது!

வரலாற்றுப் புகழ்மிக்க தரங்கம்பாடியில் உடல்நலத்திற்கு உறுதுணை செய்யும் பருவநிலைமை தொன்று தொட்டே இருந்து வந்துள்ளது. உடலுக்கு வலிவும், உள்ளத்திற்கு உவகையும் அளிக்கக்கூடிய 'ஓசோன்' (Ozone) என்னும் ஒருவகைக் காற்று தரங்கம்பாடியில் நிறைந்துள்ளது. 'டான்ஸ் பர்க்' கோட்டையிலிருந்து கடலைப் பார்த்தால், கோட்டையின் முன்னே உள்ள கடற் பகுதி சிவந்த நிறமாகக் காட்சியளிக்கிறது. இது சிந்தைக்கு விருந்தாக உள்ளது. கோட்டையின் முன்னுள்ள கடற் பகுதியில் சுற்றுலாவரும் ஏராளமான பேர் அன்றாடம் குளித்துக் குதுகலமடைகின்றனர். எனவேதான், 'கிழக்குக் கடற்கரையின் அரசி' ( The Queen of the Coromandel Coast) என்ற சிறப்புப் பெயரைத் தரங்கம்பாடி பெற்றுள்ளது.

வரலாற்று முக்கியத்துவமும், சுற்றுலாப் பயணிகளின் உள்ளத்தைக் கவரக் கூடியதுமாக உள்ள தரங்கம்பாடி கோட்டையைப் பாதுகாக்கவும், அதில் நிலையான ஒரு பொருட்காட்சியை அமைக்கவும் இன்றைய தமிழ்நாடு அரசு திட்ட மிட்டுள்ளது.

—ஆர். எம்.


தமிழரசு

16 - 10 - 1977

மலர் : 8 • இதழ் : 8


இந்த இதழில் பக்க எண்


| | |
|---|---|
| கிழக்குக் கடற்கரையின் அரசி ! | 1 |
| சாலைகள் அமைப்போம்! பாலங்கள் கட்டுவோம்! | 2 |
| சுதேசி—காந்திஜியின் சித்தாந்தம் | 9 |
| உற்பத்தியைப் பெருக்கி, உழவர் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவோம்! | 12 |
| மாநிலக் கூட்டுறவு வங்கியின் மகத்தானப் பணிகள் | 18 |
| படமும் செய்தியும் | 21 |
| டான்சியின் புகழ்க் கோபுரம் | 27 |
| 'மோபெட்' மோட்டர் சைக்கிள் | 28 |
| தமிழ்நாட்டில் காந்தியடிகள் | 33 |
| கிராமங்கள் புத்துயிர் பெற உதவுவது ராட்டையே! | 35 |
| மீன்வளம் பெருக்குவோம்! மீனவர் நலங் காப்போம்! | 36 |
| சாணத்திலிருந்து சக்தி! | 42 |
| அண்ணல் காந்தியடிகள் அரைத்துண்டை ஆடையாக அணிந்தது ஏன்? | 47 |



# சாலைகள் அமைப்போம்! பாலங்கள் கட்டுவோம்!

வணிகத் துறையின் முன்னேற்றத்திற்குப் போக்குவரத்து வசதிகள் அதிலும் குறிப்பாக சாலைகள் மிக இன்றியமையாத இடத்தைப் பெறுகின்றன. தமிழ்நாட்டில் பெரியசாலைகளின் மேம்பாடுகள் தொடர்ந்து அடுத்து வரும் திட்டங்களில் போதிய அளவு கவனத்தில் கொள்ளப்பட்டன; ஆனால், கிராமப்புறச் சாலைகளின் தேவைகள் போதுமான கவனிப்பைப் பெறவில்லை. கிராமங்களையும் பெரிய சாலைகளையும் இணைக்கும் சாலைகள் ஒரு நிலையான கிராமப் பொருளாதார அடிப்படை அமைப்புக்கு அடி கோலுகிறது.

நடப்பு ஆண்டில், இம்மாதிரிக் குறைபாடுகளைத் தவிர்க்கும் பொருட்டு கிராமத் தேவைகளை மையமாகக் கொண்ட சாலைத் திட்டங்களைச் சீரமைக்கத் தமிழ்நாடு அரசு கருதியுள்ளது.

கிராமப்புறங்களில் அணுகு சாலைகளை அமைப்பதில் மாநில அரசுகளின் முயற்சிகளில் பண ஒதுக்கீடு செய்து பங்கேற்க மத்திய அரசு தற்போது முடிவு செய்துள்ளது. எனவே, தமிழ்நாடு அரசு கணிசமான நிதி ஒதுக்கீட்டினை மத்திய அரசிடம் இத்திட்டத்திற்காக எதிர் நோக்குகிறது.

மாநில அரசின் கீழுள்ள சாலைகளையும் பாலங்களையும் அமைத்தல், மேம்படுத்துதல், பராமரித்தல் ஆகியவற்றைக் கவனிக்கும் நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பணித் துறை, சாலைப் பணிகளைக் கவனித்து வருகின்றது. மத்திய அரசின் தேசிய நெடுஞ்சாலைகளின் பணிகளை நிறைவேற்றும் முகவராகவும் இத்துறை செயல்படுகிறது. மேலும், உள்ளாட்சி அமைப்புகளின் சாலைத் திட்டங்களில் தொழில் நுணுக்க மேற்பார்வைப் பணியினையும் ஆற்றுகிறது.

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்,

**திரு. சி. பொன்னையன்,**



### மாநில சாலைத் திட்டம்

மாநில சாலைத் திட்டத்தின் கீழ், பலம் குறைவான அமைப்புகளை இடப்பெயர்ச்சி செய்தல், விரைவான வாகனப் போக்குவரத்துக்கு ஏதுவாக முன்னேற்றங்கள் செய்தல், சாலை அமைப்புகளில் முன்னேற்றங்கள் செய்

தல் முதலிய பணிகள் எடுத்துக் கொள்ளப் படுகின்றன. திருச்சியில் உள்ள சென்னை — திருச்சி—திண்டுக்கல் சாலையில் காவேரியின் குறுக்கே புதுப்பிக்கப்பட்ட பாலம் (தேசிய நெடுஞ்சாலை—நகர்ப்புற எல்லை) ஒரு மாநில சாலைத் திட்டத்தின் கீழ் அமைந்த மாபெரும் திட்டமாகும். இதைச் செயல்படுத்தி முடிக்க ஆன செலவு ரூ. 102.50 இலட்சம் ஆகும். 1976-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 19-ஆம் நாளன்று போக்குவரத்திற்காக இப்பாலம் திறந்து விடப்பட்டது.

தூத்துக்குடியில் உள்ள 'ஸ்பிக்' உரத் தொழிற்சாலைகட்குத் தேவையான சாலைகளை மேம்படுத்துவதற்காக ரூ. 133·50 இலட்சம் பெறுமான பணிகள் ஒப்புதல் அளிக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

சேலம் எஃகுத் தொழில் திட்டத்திற்குத் தேவையான அடிப்படை அமைப்பினைச்செய்ய சூரமங்கலம்—தாரமங்கலம் சாலை மேம்பாடு செய்யப்பட்டு வருகிறது. இப் பணிகளின் மொத்தச் செலவு ரூ. 130.00 இலட்சம் ஆகும். இதன் முதல் படி முடியும் தறுவாயில் உள்ளது. ரூ. 31.70 இலட்சம் செலவில் ஆறு பணிகள் முறையே 1976—77ல் அங்கீகரிக்கப் பட்டது. 1977—78ல் இதற்கான மதிப்பீடு ரூ. 25 இலட்சம் ஆகும்.

## இதர சாலைத் திட்டம்

ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள சாலைகளை மேம்படுத்தவும் பாலங்கள் அமைக்கும் பணிகள் ரூ. 40,000ம் அதற்கும் மேற்பட்டால் அப்பணிகளை அரசு செய்ய இத் திட்டம் அடிகோலுகிறது. சாலைகள், பாலங்கள் வேலை முடிந்ததும் அவற்றின் பராமரிப்பு அந்தந்த ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களிடம் ஒப்படைக்கப்படும். ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்கள் நிதிப் பற்றுக் குறையினால் இப்பணிகளைச் செய்ய இயலாததால் அரசே இத்திட்டத்திற்கு உதவி செய்வது குறிப்பிடத் தக்கதாகும்.

1976—77—ஆம் ஆண்டில் பதினான்கு பணிகள் நிறைவேற்றப்பட்டன. 1977—78ல் மேலும் எட்டுப் பணிகள் நிறைவேற்றப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 1976—77ல் ரூ. 40.25 இலட்சம் செலவில் பன்னிரண்டு பணிகள் நிறைவேற்றப்பட்டன. 1977—78 ஆம் ஆண்டில் மேலும் எட்டுப் பணிகள் நிறை வேற்றப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 1977—78ல் இதற்கான மதிப்பீடு ரூ. 25.00 இலட்சம் ஆகும்.

## கடப்புப் பாதைகளை (Level Crossings) ஒட்டியமைக்கப் பெறும் மேம்பாலங்கள், சுரங்கப் பாதைகள்.

கடப்புப் பாதைகள், போக்குவரத்தை நிறுத்துவதால் மேம்பாலங்கள், சுரங்கப்பாதைகள் இவற்றைக் கொண்டு மாற்றியமைக்கப் படிப்படியாக நிறைவேற்றும் திட்டம் ஒன்றைச் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இம்மாநிலம் ஏற்கும் பங்குச் செலவு ரயில்வே பாதுகாப்பு நிதியிலிருந்து திருப்பித் தரப்படும். நான்காவது திட்டக் காலத்தில் இந்தத் திட்டம் கொண்டு வரப்பட்டது.

இந்த அமைப்பின் கீழுள்ள பதினாறு பணிகள், வெவ்வேறு கட்டங்களில் செயல்பாட்டில் உள்ளன.

## சில பணிகள், சில விவரங்கள்

ரூபாய் 46 இலட்சம் செலவில் திருச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட பாலக்கரைக்கு அருகிலுள்ள சுரங்கப் பாதை முடியும் தருவாயிலுள்ளது. மாயவரம் முத்துப்பேட்டை சாலையில், திருவாரூரில் ஒரு மேம்பாலமும், நாகை கூடலூர் சாலையில் திருவாரூரில் மற்றொரு பாலமும் கட்டப்பட்டு வருகின்றன.

ஒன்பது பணிகள் சென்னை மாநகரத்தில் வெவ்வேறு நிலைகளில் செயல்பாட்டில் உள்ளன. 1976—77ஆம் ஆண்டில் ரூ. 53.30 இலட்சம் செலவில் மூன்று வேலைத் திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்தது.

## தொடங்கப்பட வேண்டிய முக்கிய பணிகள்

1. கோட்டூர், டர்ன்புல்ஸ் சாலைகளுக்கு அருகே அடையாற்றில் குறுக்குப் பாலம் ஒன்று அமைத்தல்.

2. அடையாற்றில் உள்ள புற்றுநோய் ஆராய்ச்சி நிலையத்துக்கு அருகில் உள்ள பக்கிங்ஹாம் கால்வாயின் குறுக்கே பாலம் மீண்டும் கட்டப்புடுதல்.

3. லஸ்ஸூக்கும் அருகில் ராமகிருஷ்ண மடச் சாலையில் பக்கிங்ஹாம் கால்வாயின் குறுக்கேயுள்ள பாலத்தை அகலப்படுத்துதல்.

இத்திட்டத்தின்கீழ் நடப்பாண்டுக்கு மொத்தமாக ரூ. 20 இலட்சம் இப்பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## கிராமச் சாலைத் திட்டம்

மக்கள் தொகை 1500, அதற்கு மேலும் கொண்ட கிராமங்களை அருகில் உள்ள பெரிய சாலைகளுடன் இணைக்க தாரிட்ட மேற்பகுதியுடன் தேவையான இடங்களில் பாலங்கள், சிறு பாலங்கள் ஆகியவற்றுடன் எல்லாப் பருவ



காலத்திற்கும் ஏற்ற பாலங்கள், சாலைகளை அமைக்க 1972ல் தொடங்கிய இத் திட்டம் வகை செய்கிறது. இத்திட்டத்தின் கீழ் ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களின் சாலைகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, பணிகள் முடிவுற்றதும், அரசே அவற்றின் பராமரிப்பினை மேற்கொள்கிறது.

மக்கள் தொகை 1,500ம் அதற்கு மேலும் கொண்ட 1,194 கிராமங்கள் இத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதுகாறும் 1,220 கி.மீ. சாலைகள் மூன்று காலக் கட்டங்களில் ரூ. 1,468 இலட்சம் செலவில் செப்பனிடப்பட்டன.

நடப்பு ஆண்டிற்கு (1977-78) வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு ரூ. 208 இலட்சம் ஆகும்.

## சீர் பருவகாலச் சாலைத் திட்டம்

1974 ஆகஸ்ட் திங்களில் இத் திட்டம் தொடங்கப் பெற்றது. புதுச் சாலைகளை, மண்ணினைச் சீர் செய்து கருங்கல் மேற்பரப்புடன் எவ்வளவு மக்கள் தொகை கொண்ட கிராமங்களாயினும், அக்கிராமங்களில் சாலைகள் அமைக்கும் பணி இத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும். மழை காலம் தவிர, ஆண்டு முழுவதும் இவ்வாறு அமைக்கப்பட்ட சாலைகள் பயன்படும். சாலைகள் அமைக்கப்பெற்ற பின் இச்சாலைகள் ஊராட்சி ஒன்றியங்களின் பராமரிப்பின் கீழ்க் கொண்டு வரப்பெறும். ரூ. 390.00 இலட்சம் செலவில் 4,125 கி.மீ. சாலைகள் 3,225 கிராமங்களில் இத்திட்டத்தின் கீழ் இது வரை அமைக்கப் பெற்றுள்ளன.

வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் 1976—77 நிதி ஆண்டில் மட்டும் சீர் பருவச் சாலைகள் அமைப்பதற்காக ரூ. 250.42 இலட்சம் செலவிடப்பட்டது. நடப்பு நிதியாண்டில் ரூ. 98.76 இலட்சம் மதிப்பீடு கொண்ட மேற்படிச் சாலைகளை வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அமைக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது.

## மலைவாழ் பகுதி மேம்பாட்டுத் திட்டம் !

மலைவாழ் மக்கள் நலன் கருதி மத்திய அரசின் முழு நிதி உதவியுடன் இத்திட்டம் நீலகிரி மாவட்டத்தில் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளை மேம்படுத்த இந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 100 இலட்சம் ஒதுக்கப்பட்டது.

அனுமதியளிக்கப்பட்ட 101 கி.மீ. நீளமுடைய 21 வேலைகளில் 80 கி.மீ. நீளமுள்ள சாலை அமைக்கப்பட்டுள்ளது. 30—6—77 முடிய இத்திட்டத்திற்காக ரூ. 77.27 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

நடப்பு நிதியாண்டில் ரூ. 19.42 இலட்சம் ஒதுக்கப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

## மலைவாழ் மக்கள் நலனுக்காகத் துணைத் திட்டம்

மலைவாழ் மக்கள் பயனடையும்படி அவர்கள் வாழும் கிராமங்களைப் பிரதான சாலைகளோடு இணைக்கும் வண்ணம் அமைக்கப்பட்ட திட்டம் இச் சிறப்புத் திட்டமாகும். இத் திட்டத்தின் மூலம் வைத்திய, கல்வி, சமூக முன்னேற்ற நலன்களைப் பெற உதவியாக இருக்கும்.

தென்னார்க்காடு, சேலம் மாவட்டத்தில் உள்ள கல்ராயன் மலைப் பகுதியில் ரூ. 64.50 இலட்சம் மதிப்புடைய வேலைகளை எடுத்துச் செயலாற்ற அரசு அனுமதி வழங்கியுள்ளது. மேற்படி தொகையில் ரூ. 44.60 இலட்சம், சாலை அமைப்பு முதலிய வேலைகளுக்கு 1976—77ஆம் ஆண்டில் செலவிடப்பட்டுள்ளது.

நடைபெற்று வரும் முக்கிய வேலைகள் பின்வருமாறு :

| | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| அ. சின்னக் கல்ராயன் மலைப் பகுதியில் உள்ள சடையகவுண்டன் ஜாகீரை இணைக்கும் ஜீப் பாதை ( *Jeep Truck* ) (7 கி.மீ.) | 8.00 |
| ஆ. பச்சேரி - தம்பை வழியாக அரசம்மபட்டி-முத்தம்பட்டியை இணைக்கும் ஜீப் பாதை (10 கிமீ.) | 15.50 |
| இ. குருபு கவுண்டன் ஜாகீர் மார்க்கமாக ஆரியக் கவுண்டன் ஜாகீரில் உள்ள கீழ்க் காட்டை ரங்கப்பருனூடன் இணைக்கும் ஜீப் பாதை (32 கி.மீ.). | 31.00 |

இறுதியாகக் குறிப்பிடப்பட்டுள்ள சாலைக்கு மைய சாலை நிதியிலிருந்து நிதியளிக்கப்பட்டுள்ளது.

## மேற்குத் தொடர்ச்சி மலை வளர்ச்சித் திட்டம்

மேற்குத் தொடர்ச்சி மலை வளர்ச்சித் திட்டத்தில் ரூபாய் 15.00 இலட்சம் மதிப்பில் மதுரை மாவட்டத்தில் உள்ள சிறுமலைச் சாலையை மேம்படுத்திட அரசு ஒப்புதல் அளித்துள்ளது. சிறுமலைச் சாலையில் சுமார் 13 கிலோ மீட்டர் நீளமுடைய சாலைகள் மேம்படுத்தப்பட்டு, வேலைகள் முன்னேற்றமடைந்து வருகின்றன.

## உலக வங்கித் திட்டப் பணிகள்

சென்னை மாநகரில் போக்குவரத்தை எளிதாக்கவும் பாதசாரிகள், மிதி வண்டியாளர் இவர்களுக்குப் பயனளிக்கும் வகையில் அண்ணாசாலை, பூவிருந்தவல்லி நெடுஞ்சாலை போன்ற நகரின் பிரதான சாலைகளை மேம்படுத்தவும் தேசிய நெடுஞ்சாலைகள் 4, 5, 45 ஆகிய சாலைகளை இணைக்கும் வண்ணம் சென்னை நகர் உள் வளைவுச் சாலை அமைந்திடவும், நகரத் தெருக்களை மேம்படுத்தவும்

உலக வங்கியின் நிதி உதவியுடன் இத்திட்டம் தொடங்கப்பட்டது. இதைத் தவிர இத்திட்டம் சென்னை மாநகரில் மாநகராட்சிப் பகுதியில் பாதசாரி சுரங்கப்பாதை, மிதி வண்டிப் பாதைகள் முதலியன அமைத்துச் சாலைகளை மேம்படுத்தவும், உதவுகிறது. அரசுச் சாலைகளை மேம்படுத்த ரூபாய் 400.80 இலட்சமும், மாநகராட்சிச் சாலைகளை மேம்படுத்த ரூபாய் 317.833 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது. இவ் வேலைகள் மூன்று ஆண்டு காலக் கட்டத்தில் மேற்கொள்ளப்படும். முதலாண்டு வேலைக்கு ரூபாய் 125 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. வேலைகளுக்கான மதிப்பீடுகள் ஒப்புதலளிக்கப்பட்டு அதற்கான ஒப்பந்தப் புள்ளிகள் பேசித் தீர்க்கப்பட்டு வருகின்றன.

## கருவிகளும், இயந்திரங்களும்

சாலை அமைப்பு, பாலம் அமைப்பு போன்ற பணிகளுக்குத் தேவைப்படும் பொறிகளும் மற்றும் கருவி, இயந்திரங்களும் தளவாடங்களும், நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்திற்குத் தேவைப்படும் விஞ்ஞானச் சாதனங்களும் வாங்குவதற்கு 1977—78 நிதியாண்டின் வரவு-செலவுத் திட்டத்தில் சுமார் ரூபாய் 10.00 இலட்சம் செலவில் ஒதுக்கப்பட்டுள்ளது.

## பராமரிப்பு

நெடுஞ்சாலைத் துறை பராமரிப்புக்குட்பட்ட பல்வேறு வகையான சாலைகள் (நிழற் சாலைகள் உட்பட) கட்டடங்கள் பராமரிப்பதற்கென்று நடப்பு நிதி ஆண்டில் ரூபாய் 975 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. துறை இயந்திரங்களைப் பராமரிப்பதற்காக ரூபாய் 144.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## தேசிய நெடுஞ்சாலை

தமிழகத்தில் உள்ள தேசிய நெடுஞ்சாலைகள் மேம்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. தேசிய நெடுஞ்சாலை 47ல் குமாரபாளையம்—பவானி மாற்று வழியில், காவிரி நதியின் குறுக்கே ஒரு பிரதான பாலம் 1976-77 ல் ரூபாய் 80 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுப் போக்குவரத்துக்குத் திறக்கப்பட்டுள்ளது.

தேசிய நெடுஞ்சாலை 45ல் கொள்ளிடம் நதியின் குறுக்கே ரூபாய் 64.116 இலட்சம் செலவில் பெரும் பாலம் ஒன்று கட்டும் வேலை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தமிழ் நாடு அரசு 1977—78ல் தேசிய நெடுஞ்சாலை வேலைகளுக்காக மொத்தமாக ரூபாய் 420 இலட்சம் மதிய அரசிடமிருந்து கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத் தொகையில் ரூபாய் 142.67 இலட்சத்தை ஏற்கெனவே மத்திய அரசு வழங்கிவிட்டது.

## மையச் சாலை நிதி வேலைகள்

மத்திய அரசால் வசூலிக்கப்படும் ஆயத் தீர்வையில் ஒரு லிட்டர் மோட்டார் எண்ணெய்க்கு 3.5 பைசாக்கள் வீதம் வசூலிக்கப்படும் தொகையிலிருந்து மையச் சாலை நிதிக்கு வருவாய் கிடைக்கிறது. மொத்த வருவாயில் 80 சதவிகிதம் இத்திட்டத்தின் கீழ் உள்ள வேலைகளுக்கென்று மாநில அரசுகளுக்கும் ஒதுக்கப்படுகிறது. 20 சதவீதத்தை மத்திய அரசு 'வைப்பு நிதியாக' நிறுத்தி வைத்துக் கொள்கிறது. இம்மாநிலத்தில் செலவழிக்கப்படும் டீசல் (*Diesel*) மீது வசூலிக்கப்படும் ஆயத் தீர்வையிலிருந்தும் இம்மாதிரியான ஒதுக்கீட்டை அளிக்குமாறு மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் மலைவாசிப் பகுதிச் சாலைகளும், பின்தங்கிய பகுதிகளில் பால வேலைகளும் எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

## கீழ்க்கண்ட பாலவேலைகள் இத்திட்டத்தின் கீழ் எடுத்து முடிக்கப்பட்டன

| | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 1. காய் களத்தூர் பெரிய வடகரை ரோடில் கி.மீ. 11-6ல் கல்லாற்றுக்குக் குறுக்கே பாலம் அமைத்தல் | 6.12 |
| 2. எடையகாத்தூர் அருகே வைகை ஆற்றின் குறுக்கே தரைப்பாலம் அமைத்தல் | 13.78 |
| 3. அச்சரப்பாக்கம் — வந்தவாசி சாலை-கி.மீ. 46-40 சுகா நதிக்குக் குறுக்கே பாலம் அமைத்தல் | 6.50 |
| 4. அரவக்குருச்சி—சின்ன தாராபுரம் சாலை கி.மீ. 3-2ல் அமராவதி ஆற்றின் குறுக்கே தரைப் பாலம் அமைத்தல் | 13.20 |

இத்திட்டத்தின் கீழ் எடுத்து முடிக்கப்பட்ட மிகப் பெரிய திட்டம் ரூபாய் 135



இலட்சத்தில் கோடைக்கானலையும் பழனியையும் இணைக்கும் மலைச் சாலைத் திட்டமாகும். இதனால் கோடைக் கானலுக்கும் பழனிக்கும் உள்ள தூரம் 135 கிலோ மீட்டரிலிருந்து, 66 கிலோ மீட்டராகக் குறைக்கப்பட்டுள்ளது.

**கீழ்க்கண்ட மலைவாசிப் பகுதிச் சாலைத் திட்டங்கள் சமீபத்தில் முடிவு பெற இருக்கின்றன.**

| | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 1. ஆதலூரிலிருந்து பண்ணைப்பட்டி பாச்சலூரிலிருந்து 12-0 மைலுக்கு அருகேதாண்டிக் குடிமலைச்சாலையை இணைக்கும் சாலைத் திட்டம் | 33.60 |
| 2. பாச்சலூரிலிருந்து வடுக்காடுக்கும் அங்கிருந்து ஒட்டன்சத்திரத்திற்கும் ஒரு மலைப்பாதை அமைத்தல் | 48.40 |

ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் மத்திய அரசு ரூபாய் 254.70 இலட்சம் மதிப்பில் 13 வேலைகளுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. இந்த ஆண்டிற்கு ரூபாய் 83.55 இலட்சம் இவ்வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனினும், மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ள திட்டங்களுக்கு இது வரை ரூபாய் 55.65 இலட்சத்திற்குத்தான் இத்திட்டத்திற்கு அனுமதி கொடுத்திருக்கிறது.

**இவைகளில் முக்கியத்துவம் உள்ள பணிகளாவன :**

| | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 1. பாளையம்கோட்டை—நாகலாபுரம் ரோட்டில் சிவலப்பேரி என்னும் இடத்தில் தரைப்பாலம் அமைத்தல் | 20.00 |
| 2. சேலத்தின் அருகே பெண்ணகரம் -பெரும்பலா ரோட்டில் தொப்பையாற்றின் குறுக்கே தரைப் பாலம் அமைத்தல் | 14.50 |
| 3. சென்னை நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில் சோதனைப் பாதை அமைத்தல் | 22.00 |

**பாம்பன் பாலத் திட்டம்**

இத் திட்டம் தேசிய நெடுஞ்சாலை எண் 49ல் 7,692 அடி (1.46 மைல்) நீளமுள்ள ஒரு பாலமும், மண்டபம் பக்கம் 6 கிலோ மீட்டர் பாம்பன் பக்கம் (தீவுப் பகுதி) 2 கிலோ உள்ள அணுகு சாலைகளையும் கொண்டது. ஆகையினால் இத்திட்டத்திற்காக ஆகும் மொத்தச் செலவும் மத்திய அரசினால் ஏற்றுக் கொள்ளப்பட்டு மாநில அரசினால் நடத்தப் பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு தொகை ரூபாய் 532.87 இலட்சங்களாகும். இதில் ரூ. 60 இலட்சம் இரு பக்மும் அணுகுசாலை அமைப்பதற்கான மதிப்பீடு ஆகும். இத்திட்டத்திற்கு 1972-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் ஒப்புதல் அளிக்கப்பட்டது. இப்பாலத்தில் 76 பாலக் கண்கள் உள்ளன. அவை ஒவ்வொன்றும் 89 அடி அகலம் உள்ளதாகும். மத்தியில் கப்பல் போக்குவரத்து வசதிக்காக 378 அடி அகலம் உள்ள ஒரு பாலக் கண்ணும், 225 அடி உள்ள இரு பாலக் கண்களும் அமைந்திருக்கும். தங்கு தடையற்ற கப்பல் போக்குவரத்திற்காகப் பாலத் தளத்தின் கீழ் மட்டம் உயர்ந்த அலை மட்டத்திலிருந்து சுமார் 55 அடி உயரத்தில் உள்ளது. இத்திட்டம் பல விதங்களில் தனித் தன்மை கொண்டது.

அஸ்திவாரமும் இரு புறமும் சார்புச் சுவர்களும் மற்றும் 17 பாலத் தூண்களும் முடிக்கப் பெற்றது. அணுகு சாலைகளும் கட்டட வேலைகளும் நடைபெற்று வருகின்றன. 31-3-1977 முடிய ரூபாய் 250.62 இலட்சமும், 30-6-1977 முடிய ரூபாய் 270.40 இலட்சமும் செலவிடப் பட்டுள்ளது. தேசிய நெடுஞ்சாலைகள் மொத்த ஒதுக்கீடான ரூபாய் 4.20 இலட்சத்தில் இத் திட்டத்திற்கு ரூபாய் 1.28 இலட்சம் மானியம் 1977-78ஆம் ஆண்டுக்கான மத்திய அரசிடம் கோரப்பட்டுள்ளது.

இத்திட்டம் 1979 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**மாநிலத் தொடர்பு மற்றும் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த திட்டப் பணிகள்**

இத்திட்டம் மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்டு நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலிருந்து செயல்பட்டு வருகிறது. இத் திட்டத்திற்கு மத்திய அரசு செலவுத் தொகை அனைத்தையும் முழுக் கடன் தொகையாக அளிக்கிறது. தவிர, இத்திட்டத்தின் கீழ் மத்திய அரசு தேர்ந்தெடுக்கப்பட்ட மாநிலத் தொடர்பு மற்றும் பொருள்தாரப் போக்கு



வரத்துத் திட்டங்கள் சிலவற்றுக்கு ஆண்டு தோறும் உதவி வழங்கி வருகிறது. இத்திட்டத்தின்கீழ், குறிப்பிட்ட சில பணிகள் மட்டும் மத்திய அரசால் ஒப்புதல் அளிக்கப்படும்.

**கீழ்க்காணும் வகையினைச் சார்ந்த சாலைகள் மற்றும் பால வேலைகள்**

(அ) மாநிலங்களை இணைக்கக் கூடிய நேரடிப் போக்குவரத்துச் சாலைகள்.

(ஆ) சமீப எதிர் காலத்தில் இருப்புப் பாதைகள் அமைக்க முடியாத இடங்களில் புறப் பகுதிகளை இணைக்கும் சாலைகள் மற்றும் பாலங்கள்.

இத்திட்டத்தின்கீழ் முதன்மையாகக் கருதப்படும் பணி, திருச்சி மாவட்டத்தில் மணப்பாறை—துறையூர் சாலையில் முசிறியையும், குளித்தலையையும் இணைக்கக் காவிரி ஆற்றின் குறுக்கே கட்டப் பெற்று வரும் பாலமாகும். இதன் மதிப்பீட்டுத் தொகை ரூபாய் 1.39 இலட்சம் ஆகும். இத்திட்டம் 1977-78ஆம் ஆண்டுக் காலத்தில் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.



(இ) உயர் ரக தாது வளம், தாவரங்கள் மற்றும் இதர வளம் கொண்ட மலைப்பாங்கான மற்றும் சாதாரணப் பகுதிகளை இணைத்துப் பொருளாதார முன்னேற்றத்திற்குப் பயன்படும் சாலைகள் மற்றும் பாலங்கள் போன்றவைகள்.

நான்காவது திட்டக் காலத்தில் ரூபாய் 261.00 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் சென்னையிலிருந்து கன்னியாகுமரி வரையில் உள்ள கிழக்குக் கடற்கரைச் சாலையில் 38 பாலங்கள் கட்ட மத்திய அரசு அங்கீகாரம் அளித்தது. இதில் ரூபாய் 2.61 இலட்சம் போக மேற்கொண்டு ஆகும் செலவை மாநில அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும் என்னும் நிபந்தனைக்குட்பட்டது. இது வரை பாலங்களில் 38-ல் 32 பாலங்கள் முடிவு பெற்றுள்ளன. இதில் 31.3.1977 வரை ரூபாய் 3,54.34 இலட்சம் செலவிடப்பட்டது. இதில் மத்திய அரசு 31.3.1977 வரை மாநில அரசுக்கு வழங்க வேண்டிய ரூபாய் 2,43.35 இலட்சம் கடனுதவி அளித்துள்ளது. நடப்பு ஆண்டில் மூன்று பால வேலைகளை முழுமையாகக் கட்டி முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் எட்டுப் பால வேலைகள் கூடிய வரை முடிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கீழ்க்காணும் இரு வேலைகளுக்கு மத்திய அரசு ரூபாய் 60.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்புதல் அளித்துள்ளது.

| | | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | சென்னை-திருத்தணி சாலையை கி.மீ. 47-0 முதல் கி.மீ. 85-6 வரை செப்பனிடவும், அரக்கோணம்-ரேணிகுண்டா சாலையில் கி.மீ. 13-8 முதல் கி.மீ. 23-2 வரை உள்ள பகுதியை தேசிய நெடுஞ்சாலைத் தரத்திற்குக் கொண்டு வருதல். | 40.00 |
| 2. | மார்த்தாண்டம்-பணிச்சமொடு ரோடில் கி.மீ. 1-6ல் குழித்துறை ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுதல் ... | 20.00 |

இத்திட்டத்திற்கு 1977—78ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூபாய் 44.91 இலட்சம் தனியே ஒதுக்கப்பட்டு உள்ளது.

**[தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவையில் அளிக்கப்பட்ட நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித் துறைக்கான மானியக் கோரிக்கைக் கொள்கைக் குறிப்பிலிருந்து தொகுக்கப்பட்டது.]**

# ஒரே ஒரு ரூபாய்...




# கிராமப் பகுதிகளுக்கு குடிநீர் வழங்க உதவிடும்!

தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம் ஒரு நல்வாழ்வுத் திட்டம். இதன் வருவாய் கிராமப் பகுதிகளின் மேம்பாட்டுக்கு — குடிநீர் வழங்க பயன்படுத்தப்படுகிறது! உங்களுக்கும் பரிசு பெற வாய்ப்புண்டு — மற்றவர்களுக்கும் பயனுண்டு!

## இன்றே வாங்குங்கள்

# தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு

**2 முதல் பரிசுகள் ரூ. 50,000**

வீதம் ஒவ்வொரு வரிசைக்கும்

அதிக நபர்களுக்கு அதிகப் பரிசுகள்

ஒரு வரிசைக்கு வழங்கப்படும் பரிசுகள் விவரம்

| பரிசு | தொகை ரூ | பரிசுகளின் எண்ணிக்கை | மொத்தத் தொகை ரூ |
|---|---|---|---|
| I | 50,000 | 2 | 1,00,000 |
| II | 10,000 | 3 | 30,000 |
| III | 5,000 | 5 | 25,000 |
| IV | 1,000 | 25 | 25,000 |
| V | 500 | 100 | 50,000 |
| VI | 100 | 500 | 50,000 |
| VII | 50 | 2000 | 1,00,000 |
| ஆறுதல் பரிசுகள் | | | |
| I | 1,000 | 4. | 4,000 |
| II | 500 | 6 | 3,000 |
| III | 300 | 10 | 3,000 |
| | மொத்தம் | 2655 | ரூ 3,90,000 |

**சீட்டு ஒன்றின் விலை ரூ. 1/- மட்டுமே**

**குலுக்கல் நாள்: 19.10.1977**




வெளியீடு: இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம், சென்னை-600 002

# "சுதேசி"-
# காந்திஜியின் சித்தாந்தம்

—திரு. பியாரே லால்

விடுதலைக்காகப் போராடிய எந்த ஒரு நாட்டிலும், உள்நாட்டுப் பொருட்கள் மீதான பற்று, அல்லது உள்நாட்டுப் பொருட்களையே உபயோகிக்க வேண்டும் என்ற சுதேசி உணர்வு, போராட்டத்தின் ஒரு முக்கிய அம்சமாக இருந்து வந்திருக்கிறது.

1776-ஆம் வருடம் 'ஸ்டாம்ப்' சட்டம் விலக்கு சம்பந்தமான கேள்விகளுக்குப் பதிலளிக்கும் வகையில் மக்கள் சபைக் கமிட்டியின் முன்னல் பெஞ்சமின் ஃபிராங்க்ளின் ஆஜரானுர். ''அமெரிக்கர்களுக்கு முன்பு பெருமை அளித்த விஷயம் எது?' என்று அப்போது அவரிடம் கேட்கப்பட்டது.

அதற்கு பெஞ்சமின், ''பிரிட்டனின் மோஸ்தரைப் பின்பற்றி, அதன் பொருட்களைப் பயன்படுத்துவதுதான் அமெரிக்கர்களுக்குப் பெருமையாக இருந்தது'' என்று பதிலளித்தார்.

''இப்போது அவர்களுக்குப் பெருமை அளிப்பது எது?'' என்ற வினு மீண்டும் பெஞ்சமினை நோக்கி எழுந்தது.

''ஆடைகளை நாங்களே தயாரித்து அணியும் வரையில், மீண்டும் மீண்டும் பழைய துணிகளை அணிந்து கொள்வதுதான்'' — இது பெஞ்சமின் அளித்த பதில்!

ஜார்ஜ் வாஷிங்டனின் ராணுவத்தை ''உள்நாட்டுத் துணிகள்' என்று கேலியாக அழைப்பதுண்டு. அதை அவர்கள் ஒரு கௌரவமாகவே பெருமையுடன் மதித்தார்கள். ஜார்ஜ் வாஷிங்டன் அமெரிக்க ஐக்கியநாடுகளின் முதல் ஜனதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர். அவர், ஜனதிபதியாக பதவிப் பிரமாணம் ஏற்க வந்தபோது—தலை முதல் கால் வரை அமெரிக்காவில் தயாரான ஆடைகளையே அவர் அணிந்திருந்தார் என்று கூறப்படுவதுண்டு.

## சுதேசி இயக்கத்தின் உதயம்

நம் நாட்டில், சுதேசி இயக்கம் வங்கப் பிரிவினைக்கு அடுத்தாற்போல் துவங்கியது. அதுவே நம் பொன்னுன திருப்பு முனையாக அமைந்தது. விஸ்வநாத் நாராயண் மாண்ட்லிக்-புகழ்பெற்ற சட்ட நிபுணர். அதுமட்டுமல்ல-வைசராய் கவுன்சிலில் ஒரு நியமன உறுப்பினர். லண்டனின் வற்புறுத்தலையொட்டி லங்காஷைர் துணிகளுக்கான இறக்குமதித் தீர்வையை ரிப்பன் பிரபு தள்ளுபடி செய்ததற்கு ஆட்சேபம் தெரிவிக்கும் வகையில்—விஸ்வநாத் நாராயண், முரடான



உள்நாட்டு ஆடைகளை அணிந்தே கவுன்சில் கூட்டத்தில் ஆஜரானுர்.

இதே போல-கல்கத்தாவில் உள்ள கல்லூரி மாணவர்கள், பரிட்சையில் கேள்விகளுக்கு விடையளிக்க வழங்கப்பட்ட தாள்களை ஏற்க மறுத்து விட்டனர். காரணம் அந்த விடைத்தாள்கள் வெளிநாட்டுக் காகிதத்தில் தயாரானவை. உள்நாட்டுக் காகிதத்தில் தயாரிக்கப்பட்ட தாள்களே தங்களுக்கு விடை எழுத விநியோகிக்கப்பட வேண்டும் என்று அந்த மாணவர்கள் கோரினுர்கள். இப்படி சுதேசிச் சுடரை ஒளி வீசச் செய்தனர் மாணவர்கள். தங்களுக்குப் பிறந்த நாள் பரிசாக வந்து குவியும் வெளிநாட்டு விளையாட்டுப் பொம்மைகளை ஏற்கக் குழந்தைகள் மறுக்கத் தொடங்கினர். வெளிநாட்டில் தயாரான காலணிகளைப் பயன்படுத்துவதையும் நிறுத்தினர். இதனைத் தொடர்ந்து காலஞ்சென்ற லோகமான்ய திலகர்—உள்நாட்டுப் பொருட்களை உபயோகிக்க வேண்டும் என்று எடுத்தியம்பி, செயல்படுத்திய நடவடிக்கைகள் மகாராஷ்ட்ர மாநிலத்தில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தின. லோகமான்யரின் இந்த இயக்கத்தில் பி. சி. பால், லாலா லஜபதிராய் ஆகியோரும் ஓடோடி வந்து உறுதுணையாக நின்றனர். இந்த மூவரின் அயராத உழைப்பு—இயக்கத்தின் வளர்ச்சிக்கு விறுவிறுப்புக் கூட்டியது. சுதேசி இயக்கம் நல்வளர்ச்சி பெற வேண்டும் என்ற துடிப்பில் அரவிந்த கோஷ் ஒரு பிரச்சாரக் குழுவை அமைத்தார்.

## பிரிட்டிஷ் துணிகள் பகிஷ்காரம்

பிரிட்டிஷ் துணிகளை அவசியம் பகிஷ்காரம் செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் வங்காளத்தில் 'பங்கா லட்சுமி டெக்ஸ்டைல் மில்' துவக்கப்பட்டது. பொது

நிதியைக் கொண்டு இந்த மில் அமைக்கப்பட்டது. இலட்சிய உணர்வின் முதல் துடிப்புக்குப் பிறகு மில் உரிமையாளர்கள் அதிக இலாபத்தின் ஆசைப் பிடிக்குள் சிக்கினார்கள், நாட்டுப் பற்று உணர்வு பின் வாங்கியது. கொஞ்சம் கொஞ்சமாக 'சுதேசி' உணர்வும் துடிப்பை இழந்தது.


சென்னையில் பெண்கள் கூட்டத்தில் காந்தியடிகள்.

### காந்தியடிகளின் சுதேசிக்கோட்பாடு

உள்நாட்டுத் தொழில்களின் மறுமலர்ச்சிக்குப் பாதுகாப்பு அளிக்கும் ஒரு நடவடிக்கையாக சுதேசி இயக்கம் துவங்கியது. பிரிட்டிஷ் பொருட்களைப் பகிஷ்கரிப்பதன் மூலம் பிரிட்டிஷ் அதிகாரத்தை அடியோடு அகற்றுவதற்கான போர்க்கருவியாகவும் அது கருதப்பட்டது.

சுதேசி இயக்கத்திலிருந்து அளவு கடந்த தன்னாட்டுப் பற்று என்னும் அம்சத்தை அகற்றி, மனிதப் பண்பு, ஆன்மிகம் என்ற புதிய அம்சங்களைச் சேர்த்து அதற்குப் புத்துணர்வூட்டினார் காந்தியடிகள். ''சுதேசி இயக்கத்தில் சுயநலத்துக்கு இடமில்லை. பிறர் அனைவரின் நலனுக்கான சேவையின் கருவூலம் சுதேசி. இந்த இயக்கத்தில் உண்மையான பற்றுள்ளவர்கள் மற்ற எவருக்கும் எதிரியாகச் செயல்படமாட்டார்கள். பகை உணர்வை வளர்க்கும் கலையல்ல சுதேசியம். மிகத் தூய்மையான அகிம்சையில் வேரூன்றி நிற்கும் தன்னலமற்ற சேவை சித்தாந்தமே சுதேசி இயக்கம்'' என்று விளக்கமளித்தார் காந்தியடிகள்.

முன்பெல்லாம், இங்கு குடியேறாத ஐரோப்பியர்கள் மூலதனத்தையும், தேர்ச்சி பெற்ற ஆட்களையும், இயந்திர சாதனங்களையும் வெளிநாட்டிலிருந்து கொண்டு வந்து அமைத்து, நடத்தி வந்த ஆலைகள் இந்தியத்தொழில் சாலைகள் எனக் கருதப்பட்டன. பெருவாரியான மக்களுக்கு தீங்கு விளைவிப்பதாக அந்த ஆலைகள் இருக்கின்றன என்று நிரூபிக்கப்பட்டாலும் கூட, அவை இந்திய ஆலைகள் என்றே கருதப்பட்டன. ஆனால் காந்தியடிகளின் கருத்துப்படி ஒரு தொழில் இந்தியத் தொழில் என்று கூறப்பட வேண்டுமென்றால், அது மக்களின் நலனுக்கு உதவுவதாக இருக்க வேண்டும். அதன் மூலதனமும், இயந்திர சாதனங்களும் இந்தியாவினுடையதாக இருக்க வேண்டும். அதில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு நல்ல ஊதியமும், சௌகரியமான வீடு வசதியும் கிடைக்க வேண்டும்; அவர்களுடைய குழந்தைகளின் நல்வாழ்வுக்குத் தொழிலதிபர்கள் உத்தரவாதமளிக்க வேண்டும். அப்போதுதான் அதனை ஓர் இந்தியத் தொழிலாகக் கருத முடியும் என்றார் காந்தியடிகள்.

மூலதனமும், தொழிலாளரும் வெளிநாட்டினதாக இருந்த போதிலும் கூட, இலட்சக்கணக்கான மக்களின் நலனுக்குப் பயன் அளிக்கக் கூடிய எந்தப் பொருளும் சுதேசிப் பொருள் ஆகும் என்ற புதிய விளக்கம் தோன்றலாயிற்று. இப்படிப் பார்த்தால், வெளிநாட்டு மூலதனத்துடன் வெளிநாட்டு நிபுணர்களை இயக்கி ஆனால் இந்தியரின் கட்டுப்பாட்டில் செயல்படுமானால் கூட கதர்த் தொழில் சுதேசித் தொழிலேயாகும். மாறாக, ரப்பர் அல்லது காலணி தயாரிப்புத் தொழிலை யார் நடத்தி வந்தாலும், அதில் வேலை செய்பவர்கள் இந்தியர்களாகவும், அதன் மூலதனம் அனைத்தும் இந்தியாவினுடையதாகவும் இருந்தாலும் கூட அத்தொழில் அந்நியத் தொழில்தான். இன்னும் சொல்லப் போனால், அது இருமடங்கு அந்நியத் தொழில் என்றே கூற வேண்டும். ஏனெனில் அத்தொழில் அந்நியர்களின் ஆதிக்கத்தில்தான் இருக்கும்; அது தயாரிக்கும் பொருள் எவ்வளவு மலிவாக இருந்தாலும், நம் கிராமத்துச் செருப்புத் தொழிலாளியின் வாழ்க்கையை அது நசித்து விடச் செய்யும் என்பதே அதற்குக் காரணம்.

வெளிநாட்டுப் பொருட்களின் போட்டியிலிருந்து உள்நாட்டுத் தொழில்கள் மூலம் தயாராகும் பொருட்களுக்குப் பாதுகாப்பு அளித்து, எப்படி முன்னுரிமை வழங்க வேண்டும் என்று உள்ளதோ, அதே போல இயந்திரங்கள் மூலம் அவை வெளி நாட்டைச் சேர்ந்ததாயினும் அல்லது உள்நாட்டு இயந்திரங்களாயினும் அவற்றின் மூலம் தயாரான பொருட்களின் போட்டியிலிருந்து குடிசைத் தொழில்களுக்கும், கிராமத் தொழில்களுக்கும் பாதுகாப்பான முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்பதை காந்தியடிகள் வலியுறுத்தி வந்தார். நகரங்கள் கிராமப்பகுதியைச் சுரண்டுவதற்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும் என்றாரவர்.

இடைக்கால அரசைக் காங்கிரஸ் அமைத்து மாகாணங்களில் நிர்வாகப் பொறுப்பை ஏற்ற போது அமைச்சர்களிடம் காந்தி இவ்வாறு கூறினார்:

''நாட்டு மக்களின் பாதுகாவலர்களாக, மக்களின் நலன்களைக் கருத்தில் கொண்டு செயல்படும் பிரதிநிதிகளாக நீங்கள் உங்களைக் கருதுவீர்களானால் இந்திய மக்களில் 80 சதவீதமாயுள்ள கிராம மக்களின் நலனில் அக்கறை காட்டுங்கள். நீங்கள் செய்யும் ஒவ்வொரு காரியமும் அந்த மக்களின் நலனில் அக்கறை கொண்டதாக இருக்க வேண்டும்'' என்று வலியுறுத்தினார்.

மெல்லிய ரகத்துணி நூலிழையோடு மட்டுமே தங்கள் உற்பத்தியைக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும். அதேநேரத்தில் தொழிலாளர்களுக்கு மோட்டா ரகம் தேவையாகையால், அந்த ரகத்தில் துணி, நூலிழை உற்பத்தியைக் கையால் நூற்பவர்களுக்

கும், கைத்தறி நெசவாளர்களுக்கும் விட்டுக் கொடுக்க வேண்டும் என்று ஜவுளி ஆலை உரிமையாளர்களிடம் அமைச்சர்கள் அவசியம் எடுத்துரைக்க வேண்டும். அல்லது-மோட்டா ரகத்திலோ, நடுத்தர ரகத்திலோ துணியையும், நூலிழையையும் உற்பத்தி செய்ய வேண்டும் என்றால், அவை தேவைப்படும் அண்டை நாடுகளுக்கு ஏற்றுமதிக்காக மட்டுமே இருக்க வேண்டும். நிர்ணயிக்கப்படும் ஒரு குறிப்பிட்ட கெடு தேதிக்குப் பின்னர்-ஜவுளி ஆலைகளிலிருந்து எந்த ஒரு துணியும் அவர்களுக்கு வழங்கப்பட மாட்டாது. அல்லது அவர்களிடம் விற்பனைக்கு அனுமதிக்கப்படமாட்டாது என்று கிராமத் தொழிலாளர்களுக்கு மந்திரிகள் முன்னறிவிப்புச் செய்து விட வேண்டும். இதன் மூலம், நிர்ணயிக்கப்படும் கெடு தேதிக்குள்ளாகவே-கிராமக் கைத்தறி, நூற்புத் தொழிலாளர்கள் துணி, நூலிழை விநியோகத்தைப் பொறுத்த மட்டில் தற்சார்புடையவர்களாகத் தங்களை ஆக்கிக் கொள்ள வேண்டும் என்று காந்தி எடுத்துரைத்தார். அத்துடன்-கிராம மக்களுக்குக் கடன், கருவிகள், கச்சாப் பொருட்கள், விற்பனைக் கழகம், நிபுணர்கள் யோசனை போன்ற பல வசதிகளை அரசாங்கம் செய்து தர வேண்டும். கைக்குத்தல் அரிசி, கால்நடை இழுக்கும் செக்குகளின் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட சமையல் எண்ணெய்கள், நாட்டுச் சர்க்கரை போன்ற கிராம கைவினைப் பொருட்களோடு போட்டி போடும் வகையில் மின்சாரத்தில் இயங்கும் இயந்திரங்களையோ, அல்லது அந்த இயந்திரங்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட பொருட்களையோ கிராம மக்களின் மத்தியில் நடமாடச் செய்யும் எண்ணம் இருக்கக் கூடாது என்றும் காந்தி வலியுறுத்தினார்.

ஆளும் வர்க்கத்தினர் தங்களது சொந்த வாழ்வில் 'சுதேசி'ப் பற்றைக் கைக் கொண்டு முன்னுதாரணமாகத் திகழ்வார்களானால்—ஜனநாயகத்தின் அஸ்திவாரமாகத் திகழும் சுய உதவி, சுய தேவைப் பூர்த்தி என்னும் இலக்குகளை நாட்டு மக்கள் அடையச் செய்யும் விதத்தில் 'சுதேசிப்பற்று'ச் சித்தாந்தத்தை ஊக்குவிக்கும் பணியில் இளைஞர்களின் சக்தி திரட்டப்படுமானால், குறுகிய கால கட்டத்துக்குள் நம் நாட்டில் உள்ள இலட்சோப இலட்சம் மக்கள் மத்தியில் புது வாழ்வு மலரும்—ஒளிமயமான எதிர்காலம் உதயமாகும்; இப்படிப்பட்ட தொரு பொற்காலத்தில், இந்திய மக்களில் பரம்பரை உரிமையை இழந்து நிற்கும் பிரிவினர், விதியை மாற்றி அமைத்த மன்னர்களாகத் தங்களை நினைத்துப் பெருமிதம் காணும் நிலையை அடைந்து விடுவோம் என்று அண்ணல் காந்தி அன்றே கணித்து விட்டார். அந்தச் சவால் இன்னமும் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

## மீனாட்சி கோவிலில் மகாத்மா

1946 ஆம் ஆண்டு! காந்தியடிகள் தமிழகத்தில் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டிருந்தார். மதுரைக்குச் சென்றிருந்தார். அங்கே புகழ்பெற்றுத்திகழும் மீனாட்சியம்மன் ஆலயத்திற்குச் சென்றார். பூஜை முறைகளை கவனமாகப் பார்த்தபடி வந்த காந்தி, இடையிடையே தமக்கு எழுந்த சந்தேகங்களையும் கேட்டுத் தெளிவு செய்து கொண்டார். கோவிலில் உள்ள வாகனாதிகளையும் பார்வையிட்டார்; கோவிலை விட்டுப் புறப்படும் போது, கோவில் தர்மகர்த்தா, பார்வையாளர் பதிவுப் புத்தகத்தை காந்தியிடம் நீட்டினார். அதனை வாங்கிய மகாத்மா ''எனது வாழ்க்கையில் நான் முக்கியமாகக் கருதிய ஒரு காரியம் இன்றுதான் கைகூடியது'' என்று எழுதிக் கையொப்பமும் இட்டார்.



## நேரம் தவறாத காந்தி



1927 ஆம் ஆண்டு! அகமதாபாத்தில் உள்ள குஜராத் வித்யா பீடத்தில் உரை நிகழ்த்துவதற்காக காந்திஜி சென்றிருந்தார். நிகழ்ச்சி முடிவுற்றது. அதன் பின் சபர்மதி ஆசிரமத்திற்குச் சென்று, அங்கு மாலைப் பிரார்த்தனையில் கலந்து கொள்ள வேண்டியிருந்தது. காந்தியடிகளை அகமதாபாத்துக்கு அழைத்து வந்த கார் வேறு எங்கேயோ போயிருந்தது. அது வருவதற்கு நேரம் ஆகும் போல் தெரிந்தது. குறித்த நேரத்தைக் கோட்டை விடக்கூடாது என்பதில் மிகுந்த அக்கறை கொண்ட காந்தி, சபர்மதி ஆசிரமத்துப் பிரார்த்தனைக் கூட்டத்தைத் தவறவிட விரும்பவில்லை.

எனவே, குஜராத் வித்யா பீடத்திலிருந்த நண்பர் ஒருவரின் சைக்கிளை இரவல் கேட்டு வாங்கிக் கொண்டார். சைக்கிள் விடுவதில் சரியான பழக்கம் இல்லாவிட்டாலும் முயன்று ஒன்றரை மைல் தூரத்திலிருந்த ஆசிரமத்தைக் குறித்த நேரத்தில் சென்று அடைந்தார்; பிரார்த்தனைக் கூட்டத்திலும் குறித்த நேரத்தில் கலந்து கொண்டார்!



# உற்பத்தியைப் பெருக்கி உழவர் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவோம்!

**வே**ளாண்மை உற்பத்தியைப் பெருக்கிக் குடியானவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த உழவியல் ஆய்வு முடிவுகளையும் தொழில் நுட்ப ஆலோசனையையும் அவர்களுக்கு வழங்குவது வேளாண்மைத்துறையின் தலையாய பணி. பயிர் செய்வதில் உள்ள பிரச்சினைகளைப் போக்கிட ஆராய்ச்சியும், தனியார் துறை மற்றும் அரசுத்துறையின் மூலம் பயிர் செய்வதற்கு வேண்டிய இடுபொருட்களை வழங்குவதும், குறிப்பாக உழவர்களுக்குத் தேவைப்படும் உற்பத்திச் சாதனங்களான விதைகள், உரங்கள் மற்றும் பூச்சி மருந்துகள் ஆகியவைகளை உரிய காலத்தில் கிடைப்பதற்கான வழிவகைகளை இத்துறை கவனித்துக் கொள்கிறது.

தொழில்நுட்ப அறிவுரை வழங்குவதுடன் நிலத்தைப் பண்படுத்தவும் மற்றும் நிலத்தடி நீரை வெளிக்கொண்டு வந்து பயன் பெற்றிடவும், வேண்டிய இயந்திரங்களையும் இதர கருவிகளையும் வாடகைக்கு இத்துறை வழங்குகிறது. விதை, உரம் மற்றும் பூச்சி பூசண மருந்துகள் போன்ற இடுபொருட்களின் தரத்தினைப் பாதுகாத்தல், வேளாண்மை விளைபொருட்களின் தரத்தினைப் பாதுகாத்தல், வேளாண்மை விளைபொருட்களை ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மூலமாக விற்பனை செய்வதற்கு உழவர்களுக்கு உதவுதல் போன்றவை வேளாண்மைத் துறையின் இதர பணிகளாகும்.



மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்
**திரு. ப. குழந்தைவேலு**

## 1977-78-ஆம் ஆண்டிற்கான குறிக்கோளும் மேற்கொள்ளவிருக்கும் திட்டங்களும் :

1977-78-ஆம் ஆண்டுக்கான திட்டமிடப்பட்டுள்ள பயிர் உற்பத்திக் குறியீடுகள் பின்வருமாறு உள்ளன.

| | | இலட்சம் டன் |
|---|---|---|
| 1 | நெல் | 62.00 |
| 2. | சிறுதானியங்கள் | 19.00 |
| 3. | பயறுவகைகள் | 3.00 |
| 4. | எண்ணெய்வித்துப் பயிர்கள் | 14.90 |
| 5. | கரும்பு (வெல்லம்) | 14.00 |
| 6. | பருத்தி | 4.00 (இலட்சம் பேல்கள்) |

மேற்குறித்த உற்பத்திக் குறிக்கோள்களை அடைவதற்கான வழிவகைகள் வருமாறு:—

### (அ) நெல்

உயர் விளைச்சல் தரவல்ல இரகங்கள் 22 இலட்சம் எக்டேரில் பயிரிடத் திட்டமிடப்பட்டுள்ளன. அதிக விளைச்சல் பெற்றிட குறிப்பாக ஐ. ஆர். இரகங்கள் அதிக அளவில் பயிரிடப்படும். குறுகிய வயதுள்ள ஆடுதுறை 31 மற்றும் டி. கே. எம். 8 ஆகிய இரகங்கள் அதிக அளவில் பயிரிடத் தனி முயற்சிகள் மேற்கொள்ளப்படும். சம்பாப் பருவத்திலும், செங்கல்பட்டு, இராமநாதபுரம் புதுக்கோட்டை, கன்னியாகுமரி மாவட்டங்களில் உள்ள புழுதி நெல் சாகுபடி செய்யப்படும் பகுதிகளிலும், உயர் விளைச்சல் இரகங்கள் பயிரிட வழிவகைகள் செய்யப்படும். காவிரி டெல்டாவில் சம்பாப் பருவத்தில் பயிரிடுவதற்கு ஏற்புடைய சிறந்த கோ. 40 ரகத்தை தஞ்சை மாவட்டத்தில் அதிக அளவில் பயிரிட வழிவகைகள் செய்யப்படும். ஆந்திரப் பிரதேச இரகமான என். எல். ஆர். 9672 என்ற சன்ன இரகம் சம்பாப் பருவத்தில் பெருமளவு பயிரிட ஏற்றதா எனச் சோதனை செய்யப்படும். இவ்வாண்டு 9,500 மெட்ரிக் டன்கள் சான்றிதழ் பெற்ற உயர் விளைச்சல் இரக விதைகள் விநியோகம் செய்ய வேளாண்மைத் துறை நடவடிக்கை எடுத்துள்ளது.

### (ஆ) சிறு தானியங்கள்

சிறு தானிய உற்பத்தியைப் பெருக்க உயர் விளைச்சல் ரகங்களைப் பயிரிட வழிவகை செய்யப்படும். 1.20 இலட்சம் எக்டேர் பரப்பளவில் சோளமும், 1.80 இலட்சம் எக்டேர் பரப்பளவில் கம்பும், 1.40 இலட்சம் எக்டேர் பரப்பளவில் கேழ்வர

கும், 0.70 இலட்சம் எக்டேரில் மக்காச் சோளமும் உயர் விளைச்சல் ரகங்களைக் கொண்டு பயிரிடப்படும். ஐ. எஸ். 3541, கோவில்பட்டி நெட்டை, சி.எஸ் எச். 1, சி. எஸ். எச். 5 சோளம், கே. எம். 1, கே. எம். 2 கம்பு, போன்ற ரகங்கள் மானாவாரிப் பகுதிகளில் உழவர்களால் பெருமளவில் விரும்பப்படுகின்றன. மானாவாரி நிலங்களில் இந்த ரகங்களை அதிக அளவில் பயிரிட வகைகள் மேற்கொள்ளப்படும். உயர் விளைவு இரகங்களைப் பயிரிட்டு அதிக விளைச்சல் பெற்றிடத் தகுந்த உழவியல் முறைகளும் மேற்கொள்ளப்படும். கீழ்க் கண்ட அளவில் சிறுதானிய வித்துக்களை உழவர்களுக்கு வழங்க வேளாண்மைத்துறை திட்டமிட்டுள்ளது.

| | மெட்ரிக் டன் |
|---|---|
| 1 கம்பு | 150 |
| 2 சோளம் | 400 |
| 3 கேழ்வரகு | 175 |
| 4 மக்காச் சோளம் | 315 |
| மொத்தம் | 1,040 |

## (இ) பயறு வகைப் பயிர்கள்

கோடையில், நெல்லை அடுத்து, கூடுதல் பரப்பு பயிரிடுவதன் மூலமாகவும், கலப்புப் பயிர் முறை மூலமாகவும் பயறு வகைப் பயிர்கள் பயிர் செய்யப்படும் பரப்பளவு, 9.70 இலட்சம் எக்டேரிலிருந்து 10.40 இலட்சம் எக்டேராக அதிகரிக்கப்படும்.



நிலக்கடலை, பருத்தி போன்ற பயறு வகைப் பயிர்களை கலப்புப் பயிராகப் பயிரிடும் முறை தீவிரப்படுத்தப்படும். நுண்ணுயிர் ஊட்டுதல், மணிச் சத்து உரங்களைப் பயன்படுத்துதல், பயிர்ப் பாதுகாப்பு முறைகள் மேற்கொள்ளுதல் போன்ற வழிமுறைகள் பயறு உற்பத்தியைப் பெருக்க பரந்த அளவில் மேற்கொள்ளப்படும். 1,600 மெட்ரிக் டன் தரமான விதைகளை விநியோகிக்க இத்துறை குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

## (ஈ) எண்ணெய் வித்துப் பயிர்கள்

நிலக்கடலை, எள் மற்றும் சூரியகாந்தி போன்ற எண்ணெய் வித்துப் பயிர்கள் உற்பத்தியையும் உற்பத்தித் திறனையும் அதிகப்படுத்தத் தனி முயற்சிகள் மேற்கொள்ளப்படும். இறைவைப் பருவத்தில் அதிகப் பரப்பளவில் நிலக்கடலை பயிரிடவும், மானாவாரிப் பருவத்தில் திருந்திய உழவியல் முறைகளை மேற்கொள்ளவும், சிறப்பான கவனம் செலுத்தப்படும். சுமார் 15,000 எக்டேர் கூடுதல் பரப்பளவில் நிலக்கடலை பயிரிடத் திட்டமிடப்பட்டுள்ளது. இதனால் இவ்வாண்டின் நிலக்கடலை சாகுபடிப் பரப்பளவு 11 லட்சம் எக்டேராக இருக்கும். மானாவாரி நிலக்கடலைப் பயிருக்கு உரமிட குடியானவர்களை ஊக்குவிப்பதுடன், விவசாயத்துறை புதிதாகக் கண்டு பிடித்துள்ள நுண்ணூட்டக் கலவையைப் பயன்படுத்துதல், ஜிப்சம் இடுதல் போன்ற புதிய முறைகளைச் சுமார் ஒரு லட்சம் எக்டேர் பரப்பளவில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். 1,08,000 மூட்டை நிலக்கடலை விதை இத்துறையின் மூலம் விநியோகிக்கப்படும்.

சூரியகாந்திப் பயிர் 25,000 எக்டேரில் கூடுதலாகப் பயிர் செய்யப்படும். இதன் மூலம் சூரியகாந்தியின் மொத்தப் பரப்பளவு 1.75 இலட்சம் எக்டேர் அளவுக்கு எட்டும். வேளாண் தொழில் சார்ந்த தொழிற்சாலைகளுக்கு உறு துணையாக இருப்பதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் 900 மெட்ரிக் டன் சூரியகாந்தி விதைகள் விநியோகம் செய்யப்படும்.

## (உ) பருத்தி

கூடுதலாக 7,000 எக்டேர் பரப்பளவில் இறவைப் பருத்தியும் 20,000 எக்டேர் பரப்பளவில் மானாவாரிப் பருத்தியும் பயிரிட முயற்சி எடுத்துள்ளோம்.




12,000 எக்டேர் பரப்பளவில் வீரிய ஒட்டு இரகமான 'வரலட்சுமி' பருத்தி பயிர் செய்யப்படும். பஞ்சாயத்து யூனியன் டிப்போக்கள் மூலமாக 1,750 மெட்ரிக் டன் பருத்தி விதைகள் வழங்க வழிவகைகள் மேற்கொள்ளப்படும். இராமநாதபுரம் மாவட்டத்தில் மத்திய அரசினர் உதவியுடன் மேலும் ஒரு தீவிர பருத்தி மேம்பாட்டுத் திட்டம் துவக்கப்படும். இந்த ஆண்டு 25 மெட்ரிக் டன் வரலட்சுமி விதைகள் நமது மாநிலத்திலேயே உற்பத்தி செய்யும் திட்டம் ஒன்று மேற்கொள்ளப்படும்.

## (ஊ) கரும்பு

தஞ்சாவூர், பெரம்பலூர் மற்றும் பாலக்கோடு சர்க்கரை ஆலைப்பகுதிகளில் கூடுதலாக 9,000 எக்டேர் பரப்பளவில் கரும்பு சாகுபடி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. உயர் விளைச்சல் தரும் கரும்பு இரகங்கள் பயிரிடுவது பரவலாக்கப்படும். 24,000 எக்டேர் பரப்பளவுக்கு விதைக்கரணைகள் வழங்கப்படும்.

**சர்க்கரை ஆலைச் சாலை அபிவிருத்தித் திட்டம்:** சர்க்கரை ஆலைப்பகுதிகளில், கரும்பு போக்குவரத்தை எளிதாக்க, புதிய சாலைகள் அமைக்கவும், பழைய சாலைகளைச் செப்பனிடவும் இத் திட்டம் வகை செய்கிறது.

1977-78-ம் ஆண்டு புதிய சாலைகள் அமைக்கவும், பழைய சாலைகளைச் செப்பனிடவும், ரூ. 85 இலட்சமும், பழைய சாலை

களைப் பராமரிக்க ரூ. 15 இலட்சமும், ஆலைப்பகுதிகளில் மத்திய அரசு உதவித் திட்டத்தில் இணைப்புச் சாலைகள் அமைக்க ரூ. 5 இலட்சமும் ஆக மொத்தம் ரூ. 105 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



## (எ) காய்கறிப் பயிர்கள்

காய்கறி அபிவிருத்தித் திட்டத்தைத் தீவிரப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் 50,000 எக்டேர் பரப்பளவில் 6.88 இலட்சம் டன்கள் அளவுக்குக் காய்கறி உற்பத்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. சென்னை நகரிலும், இம்மாநிலத்தின் மற்ற பெருநகர்ப் பகுதிகளிலும் வீட்டுக் காய்கறித் தோட்டங்கள் அமைப்பது தீவிரப்படுத்தப்படும்.

## (ஏ) இடு பொருள் தொடர்பு நடவடிக்கைகள்

**1. விதைகளும், நாற்றுகளும் :** நெல், சிறுதானியம் மற்றும் பயறு வகைகளில் தரமான விதைகளை உற்பத்தி செய்வதற்கென வேளாண்துறை 49 மாநில விதைப்பண்ணைகளை நிறுவியுள்ளது. நிலக்கடலை விதை உற்பத்தி 4 மண்டல விதைப்பண்ணைகளில் செயல்படுகிறது. தென்னங்கன்றுகள் 24 தென்னை நாற்றங்கால்களிலும், பழக்கன்றுகள் மற்றும் காய்கறிப் பயிர்கள் 19 மாதிரிப் பழத்தோட்டங்களிலும் இதர அரசுப் பண்ணைகளிலும் உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்தப் பண்ணைகள் யாவும் லாபகரமாக, மாதிரிப் பண்ணைகளாக அமைய நடவடிக்கை எடுக்கப்படும். சுமார் 12 இலட்சம் நெட்டை இரக தென்னைக் கன்றுகளும், 25,000 நெட்டை X குட்டை வீரிய ஒட்டுக்கன்றுகளும், 7 இலட்சம் பழக்கன்றுகளும் நடப்பு ஆண்டில் மேற்கூறிய பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்படும். 48 மெட்ரிக் டன் காய்கறி விதைகள் விநியோகிக்கப்படும். விதை அபிவிருத்திக்காக, 8,000 மெட்ரிக் டன் அளவுள்ள விதைகள் சுத்திகரிக்கும் திறன்கொண்ட 5 விதை மையங்களும் அமைக்கப்பட்டுள்ளன. நல்ல தரமான, சான்றிதழ் பெற்ற விதைகளை உற்பத்தி செய்து, உரிய காலத்தில் விவசாயிகளுக்கு கிடைக்கச் செய்வதே இத்துறையின் பெரு நோக்கமாகும். புதுக்கோட்டை மாவட்டம் குடுமியான் மலையில் உள்ள அன்னை பண்ணையில், வீரிய ஒட்டு விதை உற்பத்தி பற்றிய பயிற்சி, விருப்பமுள்ள உழவர்களுக்கு அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. உழவர்களுக்கு பெருமளவில் சான்றிதழ் பெற்ற விதைகளை விநியோகிக்க, இத்துறையைச் சார்ந்த ''விதைச் சான்றிதழ் அளிக்கும் பிரிவு'' விரிவுபடுத்தப்படும்.

**இரசாயன உரங்கள் :—** புதிய புதிய இரகங்களின் மூலம் உற்பத்தியை அதிகப்படுத்தும் எந்த திட்டத்திலும் சீராக உரமிடுதலையும் தீவிரப்படுத்துதல் அவசியம். இதனைக் கருத்தில் கொண்டு 1977-78-ஆம் ஆண்டு 2.75 இலட்சம் டன் தழைச்சத்து உரத்தையும், 0.70 இலட்சம் டன் மணிச்சத்து உரத்தையும், 0.70 இலட்சம் டன் சாம்பல்சத்து உரத்தையும் விநியோகிக்க வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன. மாநிலத்திற்குத் தேவையான அளவு இவ்வுரங்களை பெறுவதற்கு உரிய ஏற்பாடுகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. இவை 12,000 தனியார் மற்றும் கூட்டுறவுத் துறை விற்பனை மையங்கள் மூலமாக உழவர்களுக்கு விநியோகிக்கப்படும். மேலும் தகுந்த அளவில் உரமிடுதல் பற்றிய தீவிரப் பிரச்சாரமும் அதே சமயத்தில் மேற்கொள்ளப்படும். இயற்கையாக கிடைக்கும் தழைச்சத்து உரமான நீலப்பாசியின் உற்பத்தியையும், உபயோகத்தையும் விவசாயிகளுக்கு விளக்கும் பொருட்டும் விவசாயிகளே உற்பத்தி செய்து கொள்ளும் பொருட்டும் அதிக அளவில் விளக்கப் பண்ணைகள் ஏற்படுத்தப்படும்.

**பயிர்ப் பாதுகாப்பு :—** போதுமான அளவு பயிர்ப்பாதுகாப்பு மருந்துகள் உள்ளன. பயிர்ப்பாதுகாப்பு கருவிகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டில் 1,000 புதிய விசைத் தெளிப்பான்கள் வாங்கி உழவர்களுக்கு குறைந்த வாடகைக்கு விடப்படும். நெற் பயிரில் தோன்றும் தண்டு துளைப்பான், நிலக்கடலையில் தோன்றும் சிவப்புக் கம்பளிப்புழு போன்ற பூச்சிகளும் மற்றும் நோய்கள் தாக்குதலில்



இருந்து காப்பாற்ற சுமார் 60,000 எக்டேர் பரப்பளவில் மருந்து தெளிப்பு மேற்கொள்ளப் படும்.

புகையான் தாக்குதலைத் தவிர்ப்பதற்கென சுமார் 20,000 எக்டேர் பரப்பளவில் குறைந்த செலவில் மருந்து தெளிப்பதற் கான ஏற்பாடுகள் செய்யப்படும். பூச்சி தாக்குதலைப் பற்றிய 'கண் காணிப்பு முறை' சீரமைக்கப் படும். பயிர்களைத் தாக்கும் பூச்சிகள் பற்றிய எச்சரிக்கைச் செய்திகள் அகில இந்திய வானொலியின் வாயிலாக உழவர் களுக்கு தொடர்ந்து அறிவிக்கப் படும். பூச்சிகள் மற்றும் நோய்கள் தாக்குதல் குறித்து, காலத்தே உழவர்களுக்கு எச் சரித்திட, பயிற்சி பெற்ற பள்ளி ஆசிரியர்களின் பணி சிறந்த முறையில் பயன்படுத்தப்படும்.

## ஆராய்ச்சிப் பணிகள்

உயர் விளைச்சல் ரகங்கள், குறிப்பாக மானாவாரி மற்றும் புழுதி விதைப்புப் பகுதிகளுக்கு ஏற்ற பயிர் ரகங்களைசோதனைகள் மூலம் தேர்ந்தெடுக்கும் பணி தொடரப்படும். 31 நெல் ரகங்கள் பல்வேறு நிலையில் ஆய்வில் உள்ளன. புழுதி நிலப் பகுதிகளுக்கு ஏற்ற 3 இரகங் களும், களர் மற்றும் உவர் நிலங் களுக்கு ஏற்ற நான்கு இரகங் களும் இவற்றில் சேரும். இவ் ஆய்வின் முடிவுகள், கன்னியா குமரி, இராமநாதபுரம், புதுக் கோட்டை மற்றும் செங்கல் பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த உழவர்களுக்கு மிகப் பெரிய அளவில் பயனுடையதாய் இருக் கும். ''பயிர் உணர்வு ஆய்வு களின்'' அடிப்படையில் மண் பரிசோதனையும் உரப் பரிந்துரை களையும் ஒவ்வொரு பகுதிக்கும் ஏற்றவாறு அமைக்கப்படும். மானாவாரிப் பகுதிகளின் தேவை களுக்கு சிறப்பான கவனம் செலுத்தப்படும். இதற்காக மானாவாரி சாகுபடி முறைகளை பற்றிய ஆய்வும், நீர் சேகரிப்பு நுட்ப முறைகள் பற்றிய ஆய்வும் மேற்கொள்ளத் திட்டமிடப்பட் டுள்ளது.

## சிறப்புத் திட்டங்கள்

**மலைப்பகுதித் திட்டம்:—** நீலகிரி மாவட்டத்தின் தனித் தேவை களை பூர்த்தி செய்வதற்காக ஏற் படுத்தப்பட்டுள்ள மண்வளப் பாதுகாப்பு, விதை உற்பத்தி, சிறிய விவசாயிகளின் தேயிலை மற்றும் காப்பி தோட்டங்களை அபிவிருத்தி செய்தல் ஆகிய திட் டங்களுக்காக ரூ. 84.80 இலட் சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட் டுள்ளது. இத்திட்டத்தில் தோடர்கள் மற்றும் மலைவாழ் மக்களின் தேவைகளையும் நிறைவு செய்ய வகை செய்யப்பட்டுள் ளது.

**ஒருங்கிணைந்த மானாவாரி மேம் பாட்டுத் திட்டங்கள் :—** புதுக் கோட்டை, கோவில்பட்டி பகுதி களில் செயல்படுத்தப்படும் முன் னோடி மானாவாரி மேம்பாட்டுத் திட்டங்களுக்காக ரூ. 14.16 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட் டுள்ளது.

**வாழையில் முடி கொத்து நோய்த் தடுப்பு :—** மலைவாழை மிகுந்த பரப்பளவில் பயிரிடப் படும் கொடைக்கானல் பகுதியில் கடுமையான அளவில் முடிக் கொத்து நோய் காணப்பட்டது. இந்நோய் பரவுதலைத் தடுக்கவும், பாதிக்கப்பட்ட பகுதிகளில் வாழை சாகுபடியை சீராக்கவும் மாநில அரசு உரிய பாதுகாப்பு முறைகளை மேற்கொண்டுள்ளது. இந்நோயைக் கட்டுப்படுத்த, முறையான மருந்து தெளிப்பு முறைகளை தீவிரப்படுத்துவ துடன், சமச்சீர் உரமிடுதல் போன்ற உழவியல் முறைகளை யும் பரிந்துரை செய்து, நோய் தாக்கப்பட்ட தோட்டங்கள் மீண்டும் வளம் காண வழி வகைகள் செய்யப்படும். இந்த ஆண்டில் 36,000 ஏக்கர் பரப் பளவில் இத்திட்டம் செயல் படுத்தப்பட்டு வருகிறது.

## இந்திய ஜெர்மானிய நீலகிரி மாவட்ட அபிவிருத்தித் திட்டம்

1977-78-ம் ஆண்டில் 1,200 மெ. டன் நோய் தாக்காத விதை உருளைக் கிழங்குகள் விநியோகம் செய்யப்படும். 100 எக்டேரில் நூல்புழுவை கட்டுப்படுத்தும் திட்டம் மேற்கொள்ளப்படும். உயர் விளைச்சல் தரும் காய்கறி விதைகள் 19 மெ. டன் விநி யோகம் செய்யப்படும். கூடுத லாக 20 எக்டேரில் பழக்கன்று களும், 120 எக்டேரில் மரவள்ளி யும், 800 எக்டேரில் உயர் விளைச் சல் தரும் இஞ்சியும் மற்றும் 40 எக்டேரில் வாசனைத் திரவியப் பயிர்களும் பயிர் செய்யப்படும்.

## பயிற்சித் திட்டம்

உழவர்களுக்கு பயிற்சி அளிக்க இம்மாநிலத்தில் ஒன்பது உழவர் பயிற்சி நிலையங்கள் இதுவரை நிறுவப்பட்டுள்ளன. நடப்பு, ஆண்டில் கன்னியாகுமரி மாவட் டத்தில் ஒன்றும், தர்மபுரி மாவட் டத்தில் ஒன்றும், ஆக இரண்டு உழவர் பயிற்சி நிலையங்கள் புதி தாக நிறுவப்படும். இம்மாநிலத் தில் 13 விவசாயப் பள்ளிகள் இயங்கி வருகின்றன. இதன் மூலம் ஒவ்வொரு ஆண்டும் வேளாண் குடும்பத்தைச் சார்ந்த 390 இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்த நட வடிக்கை தொடர்ந்து நடத்தப் படும்.



## விற்பனையும் தரக்கட்டுப்பாடும்

நல்ல விற்பனை முறைகள் மூலம் விவசாயிகளின் வருவாயை அதிகமாக்கும் வகையில்வேளாண் துறையின் விற்பனைப் பிரிவு, பருத்தி தரம் பிரித்தல் மற்றும் எண்ணெய், நெய் போன்ற வேளாண் விளை பொருட்களின் தரம் பிரித்தல் போன்றவைகள், பரவலாக்க பிரத்தியேகமான கவனம் செலுத்தப்படும். 1977-78-ஆம் ஆண்டில் மேலும் இரண்டு ''அக்மார்க்'' ஆய்வுக் கூடங்களும், 10 தரம் பிரிக்கும் மையங்களும், 15 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களும் நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது. இந்தத் தரம் பிரிக்கும் மையங்களின் வாயிலாக கூடுதலாக 1,29,000 குவிண்டால் பருத்தியைத் தரம் பிரிக்க உரிய முயற்சிகள் மேற் கொள்ளப்படும்.

# 1977-78-ஆம் ஆண்டுக்கான புதிய திட்டங்கள்

நடப்பு ஆண்டில் ரூ. 112.58 லட்சம் மதிப்பீட்டில் புதிய திட்டங்கள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன. இத்திட்டங்கள் பெரும்பான்மையாக, தரமான விதைகள் உற்பத்தி செய்யவும், உழவர்களுக்கு நல்ல வசதிகள் கிடைப்பதற்கும் வழிவகை செய்யும். மாநில விதைப் பண்ணைகளுக்குத்தேவையான அடிப்படை வசதிகள் அமைக்கப்படும். தரக் கட்டுப்பாட்டிற்கும், விதைகள் சான்றிதழ் செய்வதற்கும் தனியே ஒரு ஆய்வகம் நிறுவப் படும்.

'ரொபஸ்டா' வாழை பயிரிடுவதை அதிகரிக்க திருச்சி மற்றும் வடஆற்காடு மாவட்டங்களில் 200 ஏக்கர் பரப்பளவில் நல்ல தரமான கன்றுகளை உற்பத்தி செய்ய சிறப்புப் பண்ணைகள் நிறுவப்படும்.

நல்ல தரமான கரும்பு ரகங்களின் இனப்பெருக்கத்தை அதிகரிக்கும் பொருட்டு விதைக் கரணைகள் உற்பத்திக்காக 6 மண்டலப் பண்ணைகள் அமைக்கப்படும்.

நூல் புழு தாக்காத உருளைக் கிழங்கு விதைகள் தயார் செய்வதற்காக, ஹோசூரில் உருளைக் கிழங்கு விதை உற்பத்தி மையம் நிறுவப்படும்.

நிலத்தடி நீரை வெளிக் கொணர்ந்து பயன்படுத்துவதற்கு கூடுதல் துளைக்கருவிகள் வாங்கப்படும்.

திருநெல்வேலி மாவட்டத்தில் காற்றரிப்பு தடுப்பு முறைகள் மேற்கொள்ளப்படும்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் 10,000 ஏக்கரில்நீர் பராமரிப்பு பகுதிகள் நிறுவப்படும்.



## வேளாண்மைப் பொறியியல்

வேளாண்மைப் பொறியியல் பிரிவு, நிலத்தையும், நீரையும் நல்ல முறையாகப் பயன்படுத்துவதற்குரிய அனைத்துப் பணிகளையும் மேற்கொள்ளும்.

### (அ) நிலச் சீர்திருத்தம்

நிலத்தை சமப்படுத்துவதற்கும், உழவு வேலைகளுக்காகவும் 163 புல்டோசர்களும், 177 டிராக்டர்களும், இத்துறை வசம் உள்ளன. 1977-78-ஆம் ஆண்டில் 4,600 எக்டேர் நிலம் புல்டோசர்கள் மூலமாக சமப்படுத்தப்படும். 20,200 எக்டேர் பரப்பளவில் டிராக்டர் மூலம் உழவு வேலைகள் மேற்கொள்ளப் படும்.

### (ஆ) சிறுபாசனம்

விவசாயிகளுக்கு வாடகைக்கு விடுவதற்காக இத்துறை வசம் 147 விசைத் துளைப்பான்களும் மற்றும் பல கருவிகளும் உள்ளன. 6,000 குழாய்க் கிணறுகள் அமைக்கவும், ஏற்கெனவே உள்ள 2,300 கிணறுகளை ஆழப்படுத்தவும் திட்ட மிடப்பட்டுள்ளது. மேலும் 2,000 கிணறுகளில் துளைகள் இடவும் திட்டமிடப் பட்டுள்ளது.

### (இ) மண்வளப் பாதுகாப்பு

மண்வளப் பாதுகாப்பின் கீழ் சமதள வரப்புகள் அமைத்தல், படிப்பாத்திகள் அமைத்தல், நிலத்தைச் சமப்படுத்துதல் போன்ற முறைகள் 39,620 எக்டேர் பரப்பளவில் மேற்கொள்ளப்படும். தர்மபுரி, இராமநாதபுரம் மாவட்டங்களில் வறட்சி நிவாரணமாக 10,000 எக்டேர் பரப்பில் இதுபோன்ற திட்டங்கள் செயலாக்கப்படும். மதுரை மாவட்டத்தில் நடப்பு ஆண்டில் 4,000 எக்டேர் பரப்பளவில் ''காற்றரிப்புத் தடுப்பு முறைகள்'' மேற்கொள்ளப்படும்.



## புதிய முயற்சிகள்

(அ) நீர் பராமரிப்பு:—நமது மாநிலத்தில் வேளாண்மை வளர்ச்சிக்கு வேண்டிய அளவு பாசன நீர் இல்லாதது ஒரு பெரும் குறை. கிடைக்கின்ற நீரினின்று அதிக அளவு பயன் பெற்றிட வாய்க்கால் வழியாகவும், வயலிலும் நீர் வீணாவதைத் தடுக்கும் முறைகளைக் கண்டு பிடித்து குடியானவர்களிடம் பரப்பிட வேண்டும். இந்த லட்சியத்தைக் கருத்தில் கொண்டு நடப்பு ஆண்டில் வைகை ஆற்றுப் பகுதியில் சுமார் 1,000 ஏக்கரில் ''நீர் பராமரிப்பு'' பற்றிய முன்னோடித் திட்டம் செயல்படுத்தப்

படும். இத்திட்டத்திற்கான பூர்வாங்க ஆய்வுகள் செய்து முடிக்கப்பட்டுள்ளது. இது போன்ற ''நீர் பராமரிப்பு''த் திட்டங்கள் தஞ்சையிலும் மேற்கொள்ளப் படும்.

**(ஆ) மானாவாரி சாகுபடி :—** இதுகாறும் வேளாண்மைத் திட்டங்கள் பெருமளவு இறவைப் பகுதியிலேயே திட்டமிட்டு நிறைவேற்றப்பட்டு வந்துள்ளது. மானாவாரிப் பகுதிகளில், வேளாண் மக்களின் பொருளாதார நிலையை மேம்படுத்த தீவிர முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்படும். மானாவாரிக்கான உழவியல் முறைகளைப் பரப்புதல், உயர் விளைச்சல் ரக சிறுதானியங்கள், பயறு வகைகள், பருத்தி மற்றும் நிலக்கடலை ஆகியவற்றை அதிக அளவில் பயிரிடச் செய்தல், இருபயிர் சாகுபடி மூலம் உற்பத்தித் திறனை கூடுதலாக்குதல் ஆகிய முயற்சிகள் மேற்கொள்ளப்படும். இத்தகைய முறைகளை உழவர்களுக்கு விளக்க பெருவிளக்கப் பண்ணைகள் நிறுவ படும்.

**(இ) பெருவிளக்கப் பண்ணைகள்** விரிவாக்கப் பணியில் பெருவிளக்கப் பண்ணைகள் அமைப்பது ஒரு புதிய திட்டமாகும். இதன் குறிக்கோள் ஒவ்வொரு நீர் வரவுப் பகுதியிலும் நிலத்தையும், நீரையும் நல்ல முறையில் பயன்படுத்துவது ஆகும். நடப்பு ஆண்டில் சுமார் 2,000 விளக்கப்பண்ணைகள் குறைந்தது 60,000 விவசாயிகள் பங்கு கொள்ளும் வகையில் அமைக்கப்படும். சுமார் 25 விவசாயிகளுக்குச் சொந்தமான 20 ஏக்கருக்கு குறையாத நீர் வரவுப் பகுதியில் நிலம் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவை அளவீடு செய்யப்படும். மண்ணின் தரம் பரிசோதிக்கப்பட்டு, மண் மற்றும் நீர் ஆகியவைகள் சேதமாகாமல் பாதுகாக்க வழி முறைகள் வகுக்கப்படும். மண் பரிசோதனையின் முடிவுக்கு ஏற்ப, நிலச் சீர்திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படும். முறையாக இயற்கை உரங்களை பயன்படுத்தி மண்வளத்தைப் பாதுகாக்கும் நுட்பமுறைகள் செயல்விளக்கமுறையில் விளக்கிக் காட்டப்படும். இந்தப் பகுதிக்கு ஏற்பவும், விவசாயிகளுக்கு ஆதாயமானதாகவும் இருக்கும் பயிர்முறைகள், மற்றும் உழவியல் முறைகள் உருவாக்கப்பட்டு விவசாயிகளின் முழு ஒத்துழைப்புடன் செயல்படுத்தப்படும். இவ்விளக்கப் பண்ணைகள் அம் மாவட்டத்தில் பணிபுரியும் விஞ்ஞானிகள், விரிவாக்கப் பணியாளர்கள், தேர்தெடுக்கப்பட்ட பண்ணையின் விவசாயிகள் ஆகியோரின் கூட்டு முயற்சியாகும். இப்பண்ணைகளைக் காணும் பொருட்டு மற்ற விவசாயிகள் குழுவாகச் சேர்த்து அழைத்துச் செல்லப்படுவார்கள். இம்முயற்சி பாசனப்பகுதிகளிலும், மானாவாரிப் பகுதிகளிலும் நிலத்தையும் நீரையும் பயனுள்ள வகையில் பயன்படுத்துவதற்கு வழி வகுக்கும்.

*[1977-78-ஆம் ஆண்டிற்குரிய வேளாண்மைத்துறை மானியக் கோரிக்கையிலிருந்து தொகுக்கப் பெற்றது.]*



மாற்றிப் பயிரிடும் முறையினால் மகசூல் பெருகியது!

NSC BANK

# மாநிலக் கூட்டுறவு வங்கியின் மகத்தானப் பணிகள்!

மு. அகமது, ஐ.ஏ.எஸ்.
தனி அதிகாரி, நிருவாக இயக்குநர்,
தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி.

1905-ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் தொடங்கப்பட்டது தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி. இது 71 ஆண்டுகளாகச் செயல்பட்டு வருகிறது. சிறப்பான வகையில் தனது கூட்டுறவுப் பணிகளை நிறைவேற்றி வருகிறது.

விவசாயப் பெருங்குடி மக்களுக்குத் தேவையான பயிர்க் கடன் உதவிகளை வழங்கியதன் மூலம் தமிழ் நாட்டின் பசுமைப் புரட்சியை மலரச் செய்ததில் தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கிக்கு முக்கிய பங்கு உண்டு.

வங்கியின் அதிகாரம் பெற்ற பங்கு மூலதனம் ரூ. 500 இலட்சம். தமிழக அரசு ரூ. 126.00 இலட்சத்தை வங்கியின் பங்கு மூலதனத்துக்குச் செலுத்தியுள்ளது ; 16 மத்தியக் கூட்டுறவு வங்கிகளும் ரூ. 335.01 இலட்சம் செலுத்தியுள்ளன ; எஞ்சிய தொகையை தனி நபர்கள் வழங்கியுள்ளனர்.

### சேம நிதியும் இதர நிதிகளும்

30-6-77ல் வங்கியின் சேம நிதி ரூ. 185.50 இலட்சமாக இருந்தது. ஒவ்வொரு ஆண்டிலும் அடைந்து வந்த நிகர இலாபத்திலிருந்து 25 சதவிகிதத் தொகையை ஒதுக்கியதன் மூலம் இந் நிதி வளர்ந்து உயர்ந்துள்ளது. விவசாயக் கடன் நிலை நிறுத்த நிதியில் ரூ. 428.59 இலட்சம் சேர்ந்துள்ளது. வங்கியின் நிகர இலாபங்களிலிருந்து 15 சதவிகிதமும் அரசாங்கப் பங்குத் தொகையின் மீது 3 சதத்திற்கு அதிகமாகவுள்ள டிவிடெண்டு, வட்டி 3 சதம், அரசு மானியம் ஆகியவைகளின் கூடுதல் மூலம் சேர்க்கப்பட்ட தொகையும் கொண்ட இந் நிதியானது, இயற்கையின் விளைவு காரணமாக நாட்டில் வேளாண்மை பாதிக்கப்பட்ட சமயங்களில் மத்திய வங்கிகள் வாங்கிய குறுகிய கால விவசாயக் கடன்களை மத்திய காலக் கடன்களாக மாற்றிக் கொடுக்கப் பயன்படுத்தப்படுகிறது. விவசாயக் கடன் நிலை நிறுத்த நிதியை மேலும் வலுப்படுத்த தமிழக அரசு ரூ. 84.42 இலட்சம் கடன் உதவியையும் இந் நிதிக்கு வழங்கியுள்ளது. வங்கியின் இதர சேமிப்பு நிதிகள் ரூ. 133.67 இலட்சம் சேர்ந்துள்ளன.

### டிபாசிட்டுகள்

30-6-76ல் வங்கியில் ரூபாய் 3,988.08 இலட்சம் டிபாசிட்டுகள் நிலுவை இருந்தன. 30-6-77-ல் இவை ரூபாய் 5,607.10 இலட்சமாக உயர்ந்தன. இதில் ரூ. 500 இலட்சம் அரசு முதலீடு செய்த டிபாசிட் தொகையும் அடங்கும். 1976-77ஆம் ஆண்டில் டிபாசிட்டுகளின் வளர்ச்சி 40.6 சதவிகிதமாகும்.

### கடன்கள்

30-6-77ல் வங்கி வாங்கியிருந்த கடன்களின் மொத்தம் ரூ. 8,629.55 இலட்சம். கீழ்க் கண்ட வழி வகைகள் மூலம் இது



பெறப்பட்டதாகும்; இந்திய ரிசர்வ் வங்கி ரூ. 7,963.29 இலட்சம். தொழில் மேம்பாட்டு வங்கி ரூ. 1.4 இலட்சம், விவசாய மறுநிதி முதலீடு மேலும் மேம் பாட்டு நிறுவனம் ரூ. 62.26 இலட்சம், தமிழக அரசு ரூ. 500 இலட்சம். இந்திய ரிசர்வ் வங்கி யிலிருந்து பெற்றிருந்த கடன் ரூ. 7,963.29 இலட்சத்தில் ரூ. 4,506.18 இலட்சம் பருவ கால விவசாய நடவடிக்கைக்கு அவ்வங்கியால் வழங்கப்பட்ட கடனாகும். வறட்சியால் ஏற் பட்ட வேளாண்மை நட்டம் கார ணமாக குறுகிய காலக் கடனை மத்தியக் காலக் கடனாக மாற்ற வும், மத்தியக் காலக் கடனின் தவணைகளைத் திருத்தியமைக்கவும் ரூ. 3,216.10 இலட்சமும், கைத் தறி துணி உற்பத்தி விற்பனை நட வடிக்கைகளை ஊக்குவிக்க வழங்கப் பட்ட ரூ. 241.01 இலட்சமும் ரிசர்வ் வங்கியின் மற்ற கடன் களாகும்.

### முதலீடுகள்

மத்திய, மாநில அரசாங்கங் களின் கடன் பத்திரங்கள், நில வள வங்கியின் கடன் ஈட்டுப் பத்திரங்கள், தமிழ்நாடு மின் சார வாரியக் கடன் பத்திரங்கள், இதர ட்ரஸ்ட் பத்திரங்கள் ஆகிய வைகளில் வங்கி செய்திருந்த முதலீடு ரூ. 1,466.18 இலட்சம் ஆகும். வங்கிகள் ஒழுங்குமுறைப் படுத்தல் சம்பந்தமாக மத்திய அரசின் சட்டத்தின் நிபந்தனைக் கேற்ப, கூட்டுறவு வங்கிகள் கேட்பின்போதும் மேலும் கால வரையறையின் போதும் அவை கொடுக்க வேண்டிய பொறுப்பு களின் மொத்தத் தொகையில் 25 சதவிகிதத்தை அங்கீகரிக்கப் பெற்ற கடன் ஈட்டு பத்திரங் களில் முதலீடு செய்து வைக்க வேண்டியிருப்பதற்கிணங்க இந்த முதலீடுகள் செய்யப்பட்டன.

### இலாபம்

1976-77ஆம் ஆண்டில் வங்கி ரூ. 110 இலட்சம் நிகர இலாபம் அடையும் (இப்புள்ளி தணிக் கைக்கு உட்பட்டதாகும்). 1975—76 ஆண்டில் வங்கிபெற்றிருந்த நிகர இலாபம் ரூ. 73.93 இலட் சத்துக்கு இது கணிசமான உயர் வாகும். 1975-76 ஆண்டில் செலுத்தப்பட்ட பங்குத் தொகை யின் பேரில், கூட்டுறவுச் சட்டப் படி அனுமதிக்கப்பட்ட உச்ச அளவான, 9 சத டிவிடெண்டை வங்கி வழங்கியது.

### கிளைகள்

சென்னை நகரில் பல பகுதி களில் வங்கியின் கிளைகள் செயல் பட்டு வருகின்றன. கடந்த ஆண்டில் 23 கிளைகளாக இருந் தவை தற்போது 26 கிளைகளாக உயர்ந்துள்ளன. 1977 மார்ச்-ஏப்ரலில் 3 புதிய கிளைகள் துவக் கப்பட்டன. மக்கள் குடியிருப்புப் பகுதிகளில் நிறுவப் பெற்றுள்ள இக்கிளைகள் அனைத்தும் பொது மக்களின் வசதிக்கேற்ப காலையி லும் மாலையிலுமாக நாள்தோறும் இரண்டு முறை செயல்பட்டு வரு கின்றன. வாரம் முழுவதும் (7 நாட்களிலும்) 5 கிளைகள் செயல்பட்டு வருகின்றன. 4 கிளைகளிலும் தலைமை அலுவலகத் திலும் பாதுகாப்புப் பெட்டக வசதி நிறுவப்பட்டு பொதுமக்க ளுக்கு வாடகைக்கு வழங்கப்பட்டு வருகிறது.

### புதிய டிபாசிட் திட்டங்கள்

பொது மக்களை ஊக்குவித்து புதிய டிபாசிட்டுகளைத் திரட்டும் முயற்சியில் வங்கி வெற்றி முகம் கண்டுள்ளது. 33 புதிய டிபாசிட் திட்டங்களை வங்கி அறிமுகப்படுத் தியுள்ளது. வழக்கமாக நடை முறையிலுள்ள டிபாசிட்டுகளு டன், பென்ஷன் திட்டம், மாண வர்களின் கல்வி வசதிக்கு வழங் கும் டிபாசிட் திட்டம், திருமண டிபாசிட் திட்டம், வீடுகட்ட உதவும்டிபாசிட் திட்டம்போன்ற பல திட்டங்களுடன், இன்ஸ்யூ ரன்ஸ் பாதுகாப்பு இணைந்த நிரந் தர டிபாசிட், ரெக்கரிங் டிபா சிட் ஆகியவைகளும் வகுக்கப்பட் டுள்ளன. மேலும் ''உங்கள் விருப்ப திட்டம்'' என்ற பெயரில் அவரவர்களின் விருப்பம் போல் பணம் டிபாசிட் செய்து திரும்பப் பெற வாய்ப்பளிக்கும் ஓர் திட்ட மும் அறிமுகப்படுத்தப்பட்டது. இணைக்கப்பட்ட மத்திய கூட்டு றவு வங்கிகளுக்கும் சில கவர்ச்சி யான டிபாசிட் திட்டங்களைப் பற்றியும் வங்கி ஆலோசனை வழங்கியுள்ளது. அண்மையில் ஓர் புதிய முறைச் சேமிப்புக் கணக்கு ஏற்பாட்டை வங்கி பொது மக்களுக்கு அறிமுகப் படுத்தியுள்ளது. இந்த ஏற்பாட் டின் கீழ் இதற்காக உள்ள சிறப்பு வகை சேமிப்புக் கணக்கை ஒருவர் ஏதாவது ஒரு கிளையில் ஏற்படுத் தினால் போதும்; நகரிலுள்ள எந்த ஒரு கிளையிலும் மேற்படி கணக்கில் அவர் வரவு-செலவு செய்ய வசதி வழங்கப்படுவார்.

### நலிந்தோர்க்கு உதவி

தங்க நகைகள் மீது கடன் வழங்கும் ஏற்பாடு 1976ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் வங்கி யின் மூன்று கிளைகளில் முதன் முறையாகத் துவங்கப்பட்டது. நகரில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட 3 கிளைகளுக்கு இது மேலும் விரி வாக்கப்பட்டது. மற்றும் உள்ள இதர கிளைகளிலும் இத்திட்டத் தைச் செயல்படுத்த ஏற்பாடுகள் உள்ளன. 30-6-77ல் நகைக் கடன் நிலுவை ரூ. 14.91 இலட்ச மாகும். 2,352 கடன் கணக்கு களுக்குச் சம்பந்தப்பட்ட தொகை யாகும் இது. மத்திய கூட்டுறவு வங்கிகள் அவைகளின் கிளைகள் மூலமும், மத்திய வங்கிகளுக்கு இணைக்கப்பட்ட ஆரம்ப விவசாய நாணயச் சங்கங்கள், நகர வங்கி கள் ஆகியவைகள் மூலமும் வழங் கிய நகைக் கடன்களுக்கு உரிய மறு கடன் வசதியாக வங்கி மத்திய வங்கிகளுக்கு ரூ. 999 இலட்சம் உதவ ஏற்றுக்கொண் டது. 30-6-77ல் இந்த வகையில் மத்திய வங்கிகள் மீது ரூ, 651.28 இலட்சம் கடன் நிலுவை இருந் தது.

### நலிந்த பிரிவினருக்கு சுயதொழில் கடனுதவி

நலிந்த பிரிவினருக்குக் கடன் வழங்கும் பணியிலும் வங்கி ஈடு பட்டுள்ளது. சைக்கிள்கள், சைக் கிள் ரிக்ஷா, தையல் இயந்திரம், மாவு அரவை செய்யும் இயந் திரம், நடமாடும் 'இஸ்திரி' வண்டி முதலியன வாங்கி, அவை மூலம் சுயதொழில் செய்து தங் கள் பொருளாதார நிலையை வள மாக்கிக் கொள்ள 327 நபர் களுக்கு சென்னை நகரில் ரூ. 2.99 இலட்சம் கடன் உதவியை நேரடி யாக கிளைகள் மூலம் வங்கி வழங் கியது. தவிர, மத்திய வங்கி களுக்கும் இத்திட்டத்தின்கீழ் மறு நிதி வசதி அளிக்க வங்கி முன் வந்துள்ளது.

### அத்தியாவசியப் பொருள்கள் விநியோகம்

மக்களின் அவசியத் தேவை களின் விலை உயர்வைக் கட்டுப் படுத்தும் முயற்சியில் தமிழ்நாட் டில் கூட்டுறவு நிறுவனங்கள் அவற்றின் விநியோகத்தை மேற் கொண்டு வெற்றி கண்டு வருகின் றன. கிராம விவசாய சங்கங் களுக்கு இதன் தொடர்பாகத் தேவைப்படும் நிதி வசதியினை வழங்க கூட்டுறவு மத்திய வங்கி கள் முன் வந்துள்ளன. அந்த வங்கிகளுக்கு மாநில வங்கி மறு நிதி வசதியை வழங்கி ஊக்கப் படுத்தி வருகிறது. இதற்காக மத்திய வங்கிகளுக்கு ரூ. 207 இலட்சம் 'காசுக்கடன்' வசதியை மாநில வங்கி அனுமதித்தது. 30-6-77ல் இந்த வகையில் நிலு வையிருந்த தொகை ரூ. 70.22 இலட்சம்.

கோ-ஆப்டெக்ஸுக்கு உதவி !

தமிழகத்தில் கைத்தறி துணி விற்பனைப் பணியில் முன்னணியில் இருந்து செயலாற்றி வரும் 'கோ-ஆப்டெக்ஸ்' நிறுவனத்துக்கு வங்கி அவசியமான காசுக் கடன் வசதியை வழங்கி உதவி வருகிறது. இதற்கு இந்திய ரிசர்வ் வங்கியின் மறு நிதி உதவி மாநில வங்கிக்கு இருந்து வந்தபோதிலும் அந்த வசதி சில சமயங்களில் பற்றுமலிருந்தாலும் வங்கியானது அதன் சொந்த நிதி கொண்டு இந்த உதவியைத் தொடர்ந்து நீடித்து வந்துள்ளது. கோ-ஆப்டெக்ஸ் துணிகளைப் பொதுமக்கள் பெருமளவில் வாங்கி ஆதரிக்க 'வண்ணப் புதையல்' திட்டம் என்ற ஒரு புதிய டிபாசிட் திட்டத்தை வங்கி துவக்கியிருப்பது குறிப்பிடத் தக்கதாகும்.

சர்க்கரை ஆலைகளுக்குக் கடன் வசதி

சர்க்கரை ஆலைகளுக்கு மாநிலக் கூட்டுறவு வங்கி தேவையான முதற்பொருள் நிதி உதவியினை வழங்கி கூட்டுறவு சர்க்கரை உற்பத்தித் தொழில் வளர வகை செய்துள்ளது. 30-6-76ல் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கு இவ் வங்கி வழங்கிய உதவி ஒன்றும் இல்லை. 30-6-77ல் இந்த நிலை மாறி ரூ. 180 இலட்சமாக இக் கடன் வசதியில் நிலுவை இருந்தது. இதில் ரூ. 24 இலட்சம் தொழில் மேம்பாட்டு உதவி வங்கியிலிருந்து மறு நிதி உதவி மூலம் மாநில வங்கி பெற்றதாகும்.

உர விநியோகம்

தமிழ் நாடு கூட்டுறவு விற்பனை இணையம் இம் மாநிலத்தினுள்ள விவசாய மக்களுக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் உர விநியோகத்தை மேற்கொண்டுள்ளது. தஞ்சை, நீலகிரி மாவட்டங்கள் தவிர மற்ற எல்லா மாவட்டங்களிலும் இணையத்தின் இப் பணி நடைபெற்று வருகிறது. இந்த இரு மாவட்டங்களிலும் உள்ள மத்திய வங்கிகளுக்கும், தமிழ் நாடு கூட்டுறவு விற்பனை இணையத்துக்கும் உர விநியோகப் பணிக்காகத் தேவைப்படும் கடன் வசதி அனைத்தையும் மாநில வங்கி உதவி வருகிறது.

பயிற்சி

வங்கி அதிகாரிகள் அவர்களது பணியினை சிறப்புடன் செயலாற்ற அவர்களுக்கு பயிற்சித் திட்டத்தை மாநில வங்கி செயல்படுத்தி வருகிறது. வங்கி முறையின் பல்வேறு பிரிவுகளின் செயல் முறை விளக்கங்கள் அவர்களுக்கு வழங்கப்பெற்று, அவர்களின் திறன் சிறப்புற இந்தப் பயிற்சி முறை பெரிதும் உதவியுள்ளது. தவிர, இந்திய ரிசர்வ் வங்கி, பூனாவில் உள்ள வைகுந்தலால் மேத்தா பயிற்சிநிலையம் ஆகியவைகள் அவ்வப்போது நடத்தும் பயிற்சிக்கும் வங்கி அதிகாரிகள் அனுப்பப்படுகிறார்கள்.

# அரிசன-பழங்குடியினருக்குப் பயிற்சியும் வேலை வாய்ப்பும்

## தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் குழு நடத்தும் தேர்வு எழுதப் பயிற்சி அளித்தல்:

அரிசனங்கள் மற்றும் பழங்குடியினருக்கான வேலை வாய்ப்புகளைப் பெருக்கும் நோக்கத்துடன் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் குழுவால் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகின்ற 4வது தொகுதிப் பணிகளுக்கான போட்டித் தேர்வு எழுதுகின்றவர்களுக்குச் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகின்றது. நான்காவது தொகுதிப் பணியாளர்களுக்கான போட்டித் தேர்வு தொடங்குவதற்கு முந்திய ஐந்து திங்கள் கால அளவுக்கு இப் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சிக் காலத்தில் மாணவர்களுக்குத் திங்கள் ஒன்றுக்கு ரூ. 45 வீதம் உதவித் தொகை வழங்கப்படுகிறது. மாநிலத்தில் மொத்தம் 15 பயிற்சி நிலையங்கள் உள்ளன. 1977-78ஆம் ஆண்டில் ரூ. 1.55 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

## அகில இந்தியப் பணிகள் போட்டித் தேர்வுகள் எழுதும் அரிசன, பழங்குடி இனத்தவருக்கான தேர்வு முன் பயிற்சி நிலையம் :

ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். முதலிய அகில இந்தியப் பணிகளுக்கான போட்டித் தேர்வுகள் எழுதும் அரிசன, பழங்குடி இனத்தவருக்கு தனிப் பயிற்சி அளிப்பதற்கான, தேர்வு முன் பயிற்சி நிலையம் ( Pre Examination Training Centre) தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. 11வது பயிற்சி வகுப்பிற்காக இந்தியா முழுவதிலும் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஒவ்வொரு பயிற்சி நிலையத்திலும் ஒரு மாணவர் இல்லம் உண்டு. இந்தப் பயிற்சி நிலையத்தில் பயிலுகின்ற அனைவரும் இல்லத்தில் தங்கிப் பயில வேண்டும். உணவுச் செலவுக்காக ஒவ்வொருவருக்கும் திங்கள் ஒன்றுக்கு ரூ. 100 ஒதுக்கப்படுகிறது. 1977-78-ஆம் ஆண்டில் மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டத்தின் கீழ் ரூ. 2.70 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அனைத்திந்தியப் பணிகளுக்கான தேர்வுகளில் இறுதியாக வெற்றி பெற்று அப்பணிகளில் நியமிக்கப்படும் இப் பயிற்சி நிலையத்தின் தமிழ்நாட்டு மாணவர் ஒவ்வொருவருக்கும் ரூ. 1,000 மானியமாக வழங்கப்படுகிறது. இத் திட்டம் திறமையான மாணவர்கள் இப் பயிற்சி நிலையத்தில் சேர்வதற்கும் அவர்களது தேர்வினை ஊக்குவிக்கும் பொருட்டும் 1977-78ஆம் ஆண்டில் இருந்து செயல்படுகின்றது.

## ஊக்க உதவித் திட்டம்

ஒவ்வொரு மாவட்டத்திலும் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் முதலிரண்டு இடங்களைப் பெறுகின்ற 2 அரிசன மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்கள் கல்லூரிக் கல்வியைத் தொடர்வதற்கு உதவியளிக்கப்படுகிறது. அவர்கள் ஒவ்வொருவருக்கும் திங்கள் ஒன்றுக்கு ரூபாய் 80 சிறப்பு உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. இதற்கு வருமான வரம்பு எதுவுமில்லை. இத்திட்டத்தின் கீழ் பயன் பெறும் மாணவர்கள், அரிசன மாணவர் இல்லங்களில் தங்க வேண்டும் என்ற முன் நிபந்தனை எதுவும் விதிக்கப்படுவதில்லை.



தமிழகத்திற்கு வருகை தந்த மாண்புமிகு இந்திய விமானப்போக்குவரத்து-சுற்றுலாத் துறை அமைச்சர் திரு புருஷோத்தம் எல். கௌசிக் அவர்களுக்கு சென்னை தாஜ் கோரமண்டல் ஹோட்டலில், 24-9-1977 அன்று அளிக்கப்பட்ட விருந்தின்போது, மாண்புமிகு தமிழக செய்தி-சுற்றுலாத் துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்களால் நினைவுச் சின்னம் வழங்கப் பெற்றது.

மேஜர் ஜெனரல் திரு சுந்தரம் அவர்கள் 30-9-1977 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம். ஜி. ஆர். அவர்களைச் சந்தித்து உரையாடினர்.

# படமும் செய்தியும்





ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசின் சார்பாக இந்தியாவில் உள்ள தூதர் திரு திரிக் ஆன்கென் அவர்கள், 30-9-1977 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம். ஜி. ஆர். அவர்களைச் சந்தித்து உரையாடினர்.



சென்னை மாநகராட்சியின் பொதுமக்கள் குறைதீர்க்கும் திட்டத்தை மாண்புமிகு தமிழக உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு கா. காளிமுத்து அவர்கள், 30-9-'77 அன்று, சென்னை இராயபுரத்தில் துவக்கி வைத்து, பொதுமக்களின் குறைகளை நேரில் கேட்டறிந்தார்.



அண்ணல் காந்தியடிகளின் பிறந்த நாளை யொட்டி, 2-10-1977 அன்று, சென்னை காமராஜ் சாலையில் உள்ள காந்தியடிகள் சிலைக்கு, மேதகு தமிழக ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் மாலை அணிவித்தார்.



தேசத் தந்தை மகாத்மா காந்தியின் பிறந்த நாளை முன்னிட்டு, 2-10-1977 அன்று, சென்னை காமராஜ் சாலையில் உள்ள அண்ணல் காந்தியடிகள் சிலைக்கு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் மாலை அணிவித்தார்.



காந்தியடிகள் பிறந்தநாள் விழாவை யொட்டி, சென்னை குறளகத்தில் உள்ள 'காதி கிராப்ட்'டில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் 2-10-1977 அன்று கதர் விற்பனையைத் துவக்கி வைத்தார்.

காந்தியடிகள் பிறந்தநாள் விழாவை யொட்டி மேதகு தமிழக ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி அவர்கள், 2-10-1977 அன்று, சென்னையில் உள்ள அரசினர் பொது மருத்துவ மனையில் தொழுநோய்ப்பிணியாளர் பிரிவைத் துவக்கி வைத்துப் பார்வை யிட்டார். அவ்வமயம் தொழுநோய்ப் பிணியாளர் ஒருவருக்கு, ஆளுநர் அவர்கள் இனிப்பு வழங்குவதைப் படத்தில் காணலாம்.



அனைத்து இந்திய வானொலியின் சென்னை நிலைய ''வீடும் வயலும்'' என்னும் நிகழ்ச்சி ஒலிபரப்புத் திட்டத்தை, 2-10-1977 அன்று, சென்னை இராஜாஜி மண்டபத்தில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் துவக்கி வைத்து உரையாற்றினார். விழாவிற்கு மாண்புமிகு தமிழக வேளாண்மைத்துறை அமைச்சர் திரு ப. குழந்தைவேலு அவர்கள் தலைமை தாங்கினார். அவ்விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், செங்கற்பட்டு மாவட்ட சிறு உழவர்களுக்கு, சிறு உழவர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், வேளாண்மைக் கருவிகளை வழங்கினார்.



# செய்தித்துறை



சென்னை காந்தி மண்டபத்தில் 2-10-1977 அன்று நடைபெற்றகாந்தியடிகள் பிறந்தநாள் விழாவில் திரு ஆச்சாரிய கிருபளானி அவர்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம். ஜி. ஆர் அவர்களுக்குக் கதர் ஆடைகளை வழங்கினர்.



சென்னை கிராமோதயக் பவனில் 3-10-1977 அன்று நடைபெற்ற கதர் நாள் விழாவில், மேதகு தமிழக ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி அவர்களுக்கு, முதன் முதலாகக் கதர் துணிகள் விற்பனை செய்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம். ஜி. ஆர் அவர்கள் கதர் விற்பனையைத் துவக்கி வைத்தார்.





உலக உத்தமர் காந்தியடிகளின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு, சென்னை, சர்தார் வல்லபாய் பட்டேல் சாலையில் உள்ள காந்தி மண்டபத்தில் அமைக்கப்பட்டிருந்த பொருட்காட்சியை, 2 - 10 - 1977 அன்று, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் துவக்கி வைத்தார். மேதகு ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி அவர்களும், தமிழ்நாடு அரசின் செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு என். கிருஷ்ண மூர்த்தி அவர்களும் அருகில் உள்ளனர்.

அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாள் விழாவையொட்டி சென்னை காந்தி மண்டபத்தில் நடைபெற்ற நூற்புப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு மேதகு தமிழ்நாடு ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் 3-10-1977 அன்று பரிசுகள் வழங்கினார்.



தேசிய குடும்பநல இருவார விழாவை முன்னிட்டு, 4-10-1977 அன்று, சென்னையில் தொழிலாளர் நாள் விழா நடைபெற்றது. அவ்விழா வில் மாண்புமிகு தமிழக கைத்தறி அமைச்சர் திரு கே. இராஜாமுகமது அவர்கள் கலந்து கொண்டு சிறப் புரையாற்றினார்.





மாண்புமிகு தமிழக சமூக நலத்துறை அமைச்சர் செல்வி பி. டி. சரஸ்வதி அவர்கள் தலைமையில், 30-9-1977 அன்று சென்னை இராஜாஜி மண்டபத்தில் மாவட்ட சமூக நல அலுவலர்களின் மாநாடு நடைபெற்றது.

வனவிலங்கு வாரவிழாவை 3-10-'77 அன்று சென்னை கலைவாணர் அரங்கில் மாண்புமிகு தமிழக உணவு-வனத் துறை அமைச்சர் திரு ஜி. ஆர். எட்மண்ட் அவர்கள் தலைமையில், மேதகு தமிழக ஆளுநர் திரு பிரபு தாஸ் பட்வாரி அவர்கள் துவக்கி வைத்து உரையாற்றினார்.



# டான்சியின் புகழ்க்கோபுரம்!

டான்சியின் மொத்த உற்பத்தியில் 'பெரிய கட்டுமானத் தொழிற்சாலைகள்' (Structural Works) கால் பங்கு உற்பத்தியைச் செய்து விடுகின்றது.

இத் துறையில், இயங்கிவரும் மூன்று தொழிற்சாலைகள் சென்னை அம்பத்தூரிலும், சேலம் மாவட்டத்திலுள்ள மேட்டூர் அணையிலும், திருச்சியிலும் இயங்கி வருகின்றன.

சென்னை தொழிற்சாலை, விசாகப்பட்டினத்திலுள்ள இந்துஸ்தான் கப்பல் தளத்திற்கும், திருச்சியிலுள்ள பாரத கனரகத் தொழிற்சாலைக்கும் திறம்பட கட்டுமான வேலைகள் செய்து வருகின்றது.

மேட்டூர் அணையிலுள்ள தொழிற்சாலையில் கட்டுமான வேலைக்கான வசதிகளுடன், தென்னிந்தியாவிலேயே மிகப் பெரியதாக உள்ள முலாம் பூசும் அறையும் உள்ளது. இரயில்வேக்காக இந்தத் தொழிற்சாலையால் உற்பத்தி செய்து தரப்பட்ட 'மைக்ரோவேவ்' கம்பங்கள் அனைத்திந்தியப் பாராட்டைப் பெற்றுத் தந்திருக்கிறது. திருச்சியில் அமைந்திருக்கும் பாரத கனரகத் தொழிற்சாலைக்குத் தேவையான கட்டுமான வேலைகளைச் செய்து வ்ருகிறது.

தபால் தந்தி, இரயில்வேத் துறைக்குத் தேவையான கட்டுமான வேலைகளையும் இத்தொழிற்சாலை செய்துள்ளது.

'ஆர்ய பட்டா' செயற்கைக் கோளுக்குத் தேவையான 110 மீட்டர் கோபுரம், 'டான்சி' தான் தயாரித்து உள்ளது.

குடிநீர் வடிகால் வாரியத்திற்குத் தேவையான இரும்புக் குழாய்கள், வீட்டு வசதிவாரியம், நகராட்சிகளுக்குத் தேவையான பொருள்கள், ஆவடி டாங்க் தொழிற்சாலைக்குத் தேவையான உபகரணங்கள் முதலானவற்றை இந் நிறுவனம் தயாரித்து வழங்கி வருகின்றது.

'இயந்திரக் கருவிகள் செய்யும் தொழிற்சாலைகள்' கிண்டி, அம்பத்தூர், ஈரோடு ஆகிய இடங்களில் செயல்படுகின்றன. கிண்டிக் கூடம், இந்தத் துறையில் அனைத்திந்திய தொழிற்சாலைகளுள் சிறந்ததாகக் கருதப்படுகிறது. இதன் உற்பத்திகள், தும்பா ஏவுகணை நிலையம், சித்தரஞ்சன் லோகோ தொழிற்சாலை போன்ற பெரு நிலை தொழில் நிலையங்களுக்குப் பெரிதும் பயன்படுகின்றன.

'தோல் பதனிடும் தொழிற்சாலைகள்' உலகத் தோல் சந்தைகளில் ஒவ்வொரு ஆண்டும் பங்கு பெற்றதன் பயனாக, டான்சியின் தோல் பதனிடும் தொழிற்சாலை ( Tannery ) அனைத்துலகிற்கும் நன்கு அறிமுகமாகியிருக்கின்றது. வட ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள விண்ணமங்கலம் என்ற ஊரில் இயங்கி வரும் இந்தத் தொழிற்சாலை, பல்வேறு ஐரோப்பிய நாடுகளுக்கும் பதனிட்ட தோல்களை ஏற்றுமதி செய்து வருகின்றது.



**மத்திய இரயில்வேயினருக்காக 'ஜான்சி' என்ற இடத்தில், 'டான்சி' நிறுவியுள்ள 100 மீட்டர் உயரமுடைய 'மைக்ரோ வேவ்' கம்பங்கள்.**



# 'மோபெட்' மோட்டார் சைக்கிள்

காலை நேரம்!

அதோ! அந்தத் தொழிற்கூடத்தில் தொழிலாளர்கள் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருக்கின்றனர்.

அவர்கள் மத்தியில் இயந்திரங்கள் இயங்குகின்ற சத்தம் காதைத் துளைக்கிறது.

ஒரு பிரிவில், பல்வேறு இயந்திரங்களிலிருந்து வந்த பாகங்கள் எல்லாம் ஒரு சேர இணைக்கப்படுகின்றன. முடிவில் பார்க்கிறோம். அதுதான் 'மோபெட்'!

ஆம். 'மோபெட்' (MOPED) மோட்டார் சைக்கிள் தயாரிக்கும் தமிழ்நாடு 'மோபெட்' நிறுவனத்தின் தொழிற்கூடம் தான் அது!

சென்னைக் கிண்டித் தொழிற்பேட்டையில் உள்ள இந்தத் தொழிற்கூடம், நவீன வடிவமைப்புள்ள இந்த அழகிய சைக்கிளைக் கடந்த ஆறு மாதங்களாகத் தயாரித்து வருகிறது.

ஆமாம்! 'மோபெட்' என்றால் (MOPED) என்ன? MOTOR என்ற சொல்லும் PEDAL என்ற சொல் லும் சேர்ந்து 'MOPED' என்று ஆகிவிட்டது!

முழுவதும் சுதேசி பாகங்களைக் கொண்டே தயாரிக்கும் இந்த 'மோபெட்' 'மினி' மோட்டார் சைக்கிள் ஆமத்நகர் ஆராய்ச்சி நிலையத்தில் கடும் சோதனைக்கு உட்பட்டு வெற்றி கண்டிருக்கிறது.

இந்த 'மினி' மோட்டார் சைக்கிளுக்கான வடிவமைப்பு (Design) இங்கேயே உருவாக்கப்பட்டதாகும். இதற்கான பாகங்கள் அனைத்தும் இந்நிறுவனமே தயாரித்துக் கொள்கிறது.

தகடுகளை வடிவமைக்கும் இயந்திரம்.





ஆய்வுக்கூடத்தில் . . . .

'மோபெட்' எளிமையானது; ஆனால், எஃகுப் போன்று உறுதியானது. விலேயோ, நாம் எல்லோரும் வாங்கக் கூடிய அளவுக்குக் குறைவானது. ஆம். இதன் விலே வரிகள் நீங்கலாக ரூ. 2,200. 'பவர்' உள்ள வண்டிகளில் இதுதான் குறைந்த விலே என்றும் கூறப்படுகிறது.

கிண்டியில் உள்ள இந்தத் தொழிற்கூடத்தில் பல்வேறு பிரிவுகள் உள்ளன.

சைக்கிளின் பாகங்கள் எந்த உருவில் (Shape) வேண்டுமோ அந்த உருவில் பெற ஒரு பெரிய இயந்திரம் துணே செய்வதைப் பார்க்கிறோம்.

மிகுந்த அழுத்துந் திறனுள்ள ஒரு இயந்திரம் 'டை' (Dye) மூலம் பல பாகங்களேத் தயாரித்

கிண்டித் தொழிற்பேட்டையில் உள்ள இத்தொழிற்கூடத்தில் 250 பேர் பணியாற்றுகிறார்கள். 'மோபெட்'டுக்குப் பெரும் ஆதரவு இருப்பதால், அதனேப் பெருமளவில் தயாரிக்க இந்தத் தொழிற்கூடத்தில் போதிய இடமில்லே. எனவேதான், இத்தொழிற்கூடம் தற்போது உருவாகி வரும் மறைமலே நகருக்கு மாற்றலாகவிருக்கிறது. இன்னும் ஆறு மாதத்தில் இது அங்கு தன் உற்பத்தியைத் தொடங்கும். இதன் மூலம் வேலேவாய்ப்பும் கிடைக்கும்.

இந்த ஆண்டில் 4,000 'மோபெட்' தயாராகும். அடுத்த ஆண்டில் 10,000மும், அதற்கு அடுத்த ஆண்டு 15,000மும் இப்படிப் படிப்படியாகக் கூடுதலாகிக் கொண்டே இது தன் உற்பத்தி எண்ணிக்கையை அதிகரிக்கும்.

இந்த அழகிய 'மினி' மோட்டார் சைக்கிளுக்கு வெளியில் நல்ல வரவேற்பு இருந்து வருகிறது. இதற்குக் காரணம், தரமும், நல்ல உழைப்புமேயாகும்.

வண்டி ஓடிக்கொண்டிருக்கும் போது பெட்ரோல் தீர்ந்துவிட்டால், காலால் மிதித்து இதனே ஓட்டலாம்; ஒரு லிட்டர் பெட்ரோலில் 60—65 கிலோ மீட்டர் தூரம் வரை போக முடியும். எல்லாவற்றுக்கும் மேலாக இது உறுதியானது.

'மோபெட்'டில் 400 பாகங்கள் உள்ளன. இதில் 200 பாகங்கள் ஆன்ஸிலரி தொழில்களிடமிருந்து கிடைத்துள்ளன.



அழுத்துந் திறனுள்ள இயந்திரம்.

'மோபெட்'டின் பாகங்கள் பற்ற வைக்கப்படுகிறது.





சக்கரம் பரிசோதிக்கப்படுகிறது.

துத்தள்ளிக் கொண்டே இருக்கிறது.

இங்குத் தயாராகும் பாகங்கள் (Parts) எல்லாம் ஆய்வு செய்வதற்கென்றே ஒரு தனிப் பிரிவு (Inspection) உள்ளது. இந்தப் பிரிவில் அந்தப் பாகங்கள் ஆய்வு செய்யப்பட்ட பிறகே அவை இணைக்கும் பகுதிக்கு (Vehicle Assembly) அனுப்பப்படுகின்றன.

பாகங்களைப் பற்ற வைப்பதற்கும், அவற்றுக்கு வண்ணம் பூசுவதற்கும் தனித் தனிப் பிரிவுகள் உள்ளன.

'மோபெட்'டுக்குத் தேவையான எல்லாவிதக் கடைசல் சாமான்களைத் தயாரிப்பதற்கென்றே, தனியே ஒரு இடத்தில் ஒரு தொழிற்கூடம் (Machine Shop) இயங்கி வருகிறது.

காலத்துக்கு ஏற்ற வகையில் நவீன வடிவமைப்புடன் மோபெட்டைத் தயாரிக்கவும் இந் நிறுவனம் திட்டமிட்டிருக்கிறது. 'லைட்', 'சீட்' போன்றவற்றை மாற்றியமைக்கும் பணியிலும் இது இறங்கியிருக்கிறது. மாதிரிக்காகப் புது மாடல் 'மோபெட்' ஒன்றும் இங்கே தயாரிக்கப் பெற்று காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கிறது.

'டான்சி'யின் (TANSI) ஒரு பிரிவாக இயங்கி வந்த 'மோபெட்' தொழிற்சாலை 19—8—77 முதல் தனி நிறுவனமாகச் (Tamilnadu Mopeds Limited) செயல்படுகிறது. இது, தமிழகம் தவிர பிற மாநிலங்களிலும் 'மோபெட்'டுகளைப் பெருமளவில் விற்பனை செய்து வருகின்றது.

பாண்டிச்சேரி, ஆந்திரப்பிரதேசம், கர்நாடகம் இங்கெல்லாம் விற்பனை ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டு விட்டது. மகாராஷ்டிராவில் இப்போது விற்பனை துவக்கப்பட்டிருக்கிறது.

எனவே, 'மோபெட்' நிறுவனம் மேலும், மேலும் பலப்பல வடிவமைப்புகளில் வகை வகையான வண்டிகளைத் தயாரித்துத் துரிதப் போக்குவரத்துக்குத் துணை செய்யும் ஒரு தன்னிரகற்ற தனி நிறுவனமாகத் திகழும் என்பதில் ஐயமில்லை!

* *

—பி. வி. கிரி.

## டான்சி

தரமான பொருள்களைத் தயாரித்து, தமிழகத்தில் மட்டுமல்லாது, பிற மாநிலங்களிலும் நல்ல புகழை ஈட்டி வரும் 'டான்சி'யின் சார்பில் பல்வேறு தொழிற்கூடங்கள் இயங்கி வருகின்றன. அவை:

1. பெரியகட்டுமானத்தொழிற்சாலைகள் (Structural Works)

2. பொறியியல் தொழிற்சாலைகள் (Engineering Works)

3. தட்டுமுட்டுச் சாமான்கள் தொழிற்சாலை (Furniture Works)

4. மரத் தட்டுமுட்டுச் சாமான்கள் தொழிற்சாலைகள் (Wooden Furniture Works)

5. இயந்திரக் கருவி செய்யும் தொழிற்சாலைகள் (Tools Room)

6. இரும்பு வார்ப்படத் தொழிற்சாலைகள் (Foundry)

7. வேளாண்மை உபகரணங்கள் செய்யும் தொழிற்சாலைகள் (Farm Implements Units)

8. தோல் பதனிடும் தொழிற்சாலைகள் (Leather Works)

9. ஏனைய பிற தொழிற்கூடங்கள்.

'மோபெட்' விற்பனைக்குத் தயார்!



# அரிசனங்களுக்கும் பழங்குடி மக்களுக்கும் இடம் ஒதுக்குவதற்கான விதி

**1) மாணவர்களைக் கல்வி நிலையங்களில் சேர்த்தல் :-**

மருத்துவக் கல்வி, பொறியியல் கல்வி, ஏனைய தொழிற் கல்வி நிறுவனங்கள் உட்பட, கல்வி நிறுவனங்களில் அரிசனங்களுக்கும் பழங்குடி மக்களுக்கும் உரிய இடம் கொடுக்க 18 சதவீத இடங்கள் அரிசன மாணவர்களுக்கும் பழங்குடி மாணவர்களுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளன.

**2) அரசுப் பணிகளில் நியமனம் :-**

மாநில அரசுப் பணிகளில் 18 சதவீத இடங்கள் அரிசனங்களுக்கும் பழங்குடி மக்களுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளன. துறைத்தலைவர் ஒவ்வொருவரும் தலைமைச் செயலகத் துறைகளும் ஆண்டுதோறும் விவரக் கணக்கு ஒன்றை அனுப்ப வேண்டும் என்று வரையறுக்கப்பட்டுள்ளதன் மூலம் இட ஒதுக்கீடு குறித்த விதியை நியமன அதிகாரிகள் ஒழுங்காகப் பின்பற்றுகின்றனரா என்பது தொடர்ந்தாற்போல் கண்காணிக்கப்பட்டு வருகிறது. அரசுப் பணிகளில் அரிசனங்களுக்கு—பழங்குடி மக்களுக்கு அளிக்கப்பட்டுள்ள பிரதிநிதித்துவம் குறித்து ஆய்வு செய்ய தலைமைச் செயலாளரைத் தலைவராகக் கொண்ட உயர் மட்டக் குழுவொன்று செயல்பட்டு வருகிறது.

**3) கண்காணிப்பு குறித்த துணைக் குழு:-**

உயர்மட்டக் குழுவின் துணை நிலைக் குழுவாக, ''உயரதிகாரக் கண்காணிப்புக் குழு'' ஒன்று, பணியாளர்—நிர்வாகச் சீர்திருத்தத் துறைச் செயலாளரைத் தலைவராகக் கொண்டு அரசால் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு பதவி உயர்வு—பதவி மாற்றம் காரணமாகச் செய்யப்படவிருக்கும் எல்லா நியமனங்கள் தொடர்பாகவும், அரிசன—பழங்குடி மக்களுக்கான இட ஒதுக்கீடு விதியை நீட்டிக்கும் செயற்குறிப்பை பரிசீலனை செய்யும். மேலும் பல்வேறு நிலைகளில் செய்யப்பட்ட நியமனங்களை ஆய்வு செய்யும். அத்துடன் தற்போது உள்ள நிலைமையை மதிப்பீடு செய்து, அரசுப் பணிகளில் அரிசனங்களுக்கும் பழங்குடி மக்களுக்கும் போதிய பிரதிநிதித்துவம் அளிக்கும் ஏற்பாட்டை விரைவுபடுத்துவதற்கான நடவடிக்கைகள் பற்றியும் இக் குழு ஆலோசனை கூறும்.

**

## குழந்தைகளுக்கு காந்தி எழுதிய கடிதம் !

ஏரவாடா சிறைச்சாலையில் இருந்தபோது காந்தியடிகள் ஒருமுறை பின்வரும் கடிதத்தை ஆசிரமக் குழந்தைகளுக்கு அனுப்பி வைத்தார்.

''பறவைகளுக்குச் சிறகுகள் இல்லாவிடின் அவற்றினால் பறக்க முடியாது; சிறகுகள் இருப்பின் நம் எல்லோராலும் பறக்க இயலும். சிறகுகள் இன்றி நீங்கள் பறக்கக் கற்றுக் கொண்டால் உங்கள் பிரச்சினைகள் அனைத்தும் தீர்ந்து விடும். நான் உங்களுக்கு போதிப்பேன். எனக்குச் சிறகுகள் இல்லை. ஆனால் தினந்தோறும் சிந்தனையிலே உங்களிடம் பறந்து வருகிறேன்.

''இங்கு பாருங்கள் ; அதோ குட்டி வனமாலா நிற்கிறாள். இங்கு ஹரி நிற்கிறான் ; அதோ தர்மகுமார் நின்று கொண்டிருக்கிறான். நீங்கள் கூட சிந்தனையின் மூலம் என்னிடம் பறந்து வர முடியும். சிந்திக்கத் தெரிந்தவர்களுக்கு ஆசிரியர் எவரும் தேவையில்லை. ஆசிரியர் நமக்கு வழிகாட்டியாகத்தான் இருக்க முடியும். நமக்குச் சிந்தனா சக்தியை அவர் அளிக்க முடியாது. சிந்தனா சக்தி நமது உள்ளிடையே இருக்கிறது. ஞானமுள்ளவர்களுக்கு நற்சிந்தனைகள் எளிதில் உதிக்கும்.''

* * * *

## சிறு காகிதமும் பெரும் பயன் தரும்!....

காந்தியடிகள் ஒரு சிறு காகிதத்தைக் கூட வீணாக்கமாட்டார். உதாரணமாக, அவர் ஒரு பக்கம் மட்டிலுமே எழுதப்பட்ட காகிதங்களைத் தூர எறிந்துவிடாமல் பாதுகாத்து வந்தார். வெற்றுப் பக்கத்தை வீணாக்காமல் கடிதங்களை எழுதுவதற்கு அவற்றைப் பயன்படுத்திக் கொள்வார். அவருக்குக் கிடைத்த கடிதங்களில் எழுதாமல் விடப்பட்டிருந்த கீழ்ப்பகுதிகளைக் கிழித்துத் தனியே வைத்துக் கொள்வார்.

சிறு சிறு காகிதங்களைக் கூட சிறு குறிப்புகளையோ அசல் குறிப்புக்களையோ எழுதுவதற்குப் பயன்படுத்திக் கொள்வார். முகவரி எழுதப்பட்டு ஏற்கெனவே உபயோகிக்கப்பட்ட கவர்களைக் கூட அவர் விடுவதில்லை. அவற்றைப் பிரித்துப் பின்பக்கத்தை எழுதுவதற்குப் பயன்படுத்திக் கொள்வார்.

அவர் ஆசிரமத்துக்கு வெளியே இருக்குங் காலையில், ஆசிரமவாசிகளுக்கு எழுதும் கடிதங்கள் அனைத்தையும் ஒரே கவரில் போட்டு அனுப்புவார். காகிதங்களுடன் குண்டூசிகளையும், பின்களையும் எறிந்துவிடாமல் அவற்றைத் தனியே எடுத்து ஜாக்கிரதையாகச் சேர்த்து வைப்பதும் அவரது வழக்கமாக இருந்து வந்தது.

ஆதாரம் : நாம் அறிந்த காந்திஜி.
பப்ளிகேஷன்ஸ் டிவிஷன்.



காற்று நிகர் மென்மை
வண்ணத்துப் பூச்சியின்
எழில் வண்ணம்
கோ-ஆப்டெக்ஸ்
அச்சிட்ட நூல் சேலைகள்
உண்மைதான்! மென்மையான
அச்சிட்ட நூல் சேலைகள்—நவீன
டிசைன்கள்—யமுனு, அஜந்தா,
சாமுண்டி-உள்ளங்கவர்
வகைகள்—பரவசமூட்டும்
வண்ணங்கள். கோ-ஆப்டெக்ஸ்
அச்சிட்ட சேலைகள் இன்றைய
நாகரீகமாகத் திகழ்பவை!
கைத்தறியே
வண்ணத்துப்பூச்சி

சேலத்தில் ஆதிநாராயணன் செட்டியார் மகாத்மாவைத் தம்முடைய வீட்டில் வரவேற்று உபசரித்தார். தமக்கு மணமாகி இருபது வருடங்களுக்குப் பிறகு பிறந்த அருமைக் குழந்தையை மகாத்மாவிடம் கொடுத்து ஆசீர்வதிக்கச் சொன்னார்.

காந்தி குழந்தையைக் கைகளில் எடுத்துக் கொண்டு, எடை போடுவது போல மேலும் கீழும் ஆட்டினார். குழந்தை பொக்கை வாயைத் திறந்து சிரித்தது. காந்தியும் பெற்றோர்களும் அதைக் கண்டு ஆனந்தித்தார்கள். உடனே ''எனக்கு இந்தக் குழந்தையின் எடைக்குச் சரியாக நூல் கொடுத்தால் எப்படிச் சந்தோஷப்படுவேன், தெரியுமா?'' என்று கேட்டார் மகாத்மா.

சுற்றித் தீபாலங்காரமும் அமைக்கப்பட்டிருந்தன. கூட்டத்துக்கு வந்ததுமே காந்திஜி மேடையையும் அலங்காரத்தையுந்தான் கவனித்தார். உடனே டாக்டர் ராஜனைக் கூப்பிட்டு, ''ஹரிஜன நிதிக்காக வசூலான பணத்திலிருந்துதானே இந்த அலங்காரங்களுக்குச் செலவு செய்யப்பட்டிருக்கும்?'' என்று கேட்டார்.

தமிழ்நாடு ஹரிஜன சேவா சங்கத்தின் தலைவரும் காந்தியின் சுற்றுப் பிரயாண ஏற்பாடுகளுக்குப் பொறுப்பாளருமான டாக்டர் ராஜன் உள்ளூர்ப் பிரமுகர்களைக் கூப்பிட்டு விசாரித்தார். பொதுப் பணத்திலிருந்து ஒரு பைசாக்கூடச் செலவாகவில்லை என்றும், உற்சாகமுள்ள ஒருவரால் மேடையும் அலங்காரமும் அமைக்கப்பட்டன என்றும் தெரிந்தது. காந்திஜி திருப்தியடையாமல், ''அந்த மனிதர் இங்கே இருந்தால் கூப்பிடுங்கள்'' என்றார்.

நல்ல வேளையாக, மேடையிலேயே அந்த மனிதர் இருந்தார். தம்முடைய சொந்தச் செலவில்தான் மேடை நிர்மாணம் செய்ததாக அவர் நேரில் ஒப்புக்கொண்டார். அதன் பிறகுதான் கூட்டத்தில் பேசக் காந்தி எழுந்தார்.



# தமிழ் நாட்டில் காந்தியடிகள்

செட்டியார் திகைத்துப் போனார். குழந்தையைத் துலாபாரமிட்டுப் பொன் கொடுக்கச் சொன்னாலும் தயாராக இருக்கும் அவருக்கு நூல் கொடுப்பது பெரிதல்ல.

அதற்குள் காந்தி சொன்னார் ''பல வருஷங்களுக்குப் பிறகு உங்களுடைய வீட்டில் குழந்தை பிறந்திருக்கிறது. குழந்தை அருமை உங்களுக்குத் தெரியும். நானும் பல வருஷங்களுக்குப் பிறகு ஒரு குழந்தையைப் பெற்றிருக்கிறேன். சர்க்கா நம்முடைய நாட்டுக்குப் புதிதல்ல. ஆனால் என்னுடைய அருமைக் குழந்தை கதர். குழந்தை அருமை தெரிந்த நீங்கள், உங்களுடைய குழந்தையின் எடைக்குச் சரியாகக் கதர் நூலைக் கொடுத்தால் எத்தனை குடும்பங்களின் வயிறு நிரம்பும்?''

* * * *

தூத்துக்குடியில் விஸ்தாரமான மேடையும், மேடையைச் (continued above)

## திருவெண்ணெய் நல்லூரில் காந்தியடிகள்!

திருவெண்ணெய் நல்லூரிலிருக்கும் கிருபா ஆசிரமத்துக்குச் சொந்தக் கட்டடம் கட்ட நிச்சயித்த நிர்வாகிகள், அதற்குக் காந்திஜியே அஸ்திவாரம் போட வேண்டும் என்று விரும்பினார்கள். காந்திஜி ஒப்புக்கொள்ளவே, நிர்வாகிகள் ஊருக்கு வெளியே ஓர் இடத்தினை விலைபேசி முடிவு செய்தார்கள். ஆனால் பத்திரம் பதிவு செய்து, கிரயத்தைப் பூர்த்தி செய்ய அவகாசம் இல்லை. நிலத்தை விற்பனை செய்ய முன் வந்தவருடைய பெயர் சடையக் கவுண்டர். தம்முடைய சொந்த உழைப்பினால் பத்துக் காணி பூஸ்திதியுடையவர். அவர் எழுத்தறிவில்லாத விவசாயி. அவருக்குக் காந்திஜியைப் பற்றியோ ஹரிஜன இயக்கத்தைப் பற்றியோ தெரியாது. உள்ளூரிலுள்ள குர்ஜாலி ஹரிஜனங்களுக்காகப் பள்ளிக்கூடம் நடத்தத் துவங்கியதும், சாதி இந்துக்கள் அதை எதிர்த்ததுந்தான் அவருக்குத் தெரியும். காந்திஜியின் விஜயத்துக்குப் பிறகு பத்திரப் பதிவு செய்து கொள்ளலாம் என்று முடிவு செய்து, தக்க சாட்சிகளை வைத்துக் கொண்டு ஒரு சிறு தொகையை அச்சாரமாகக் கொடுத்து விற்பனையை ஊர்ஜிதம் செய்து கொண்டார்கள்.

காந்திஜி அந்தக் கிராமத்துக்கு விஜயம் செய்யப் போகிறார் என்பது ஜனங்களுக்குத் தெரியுமே தவிர, சடையக் கவுண்டரின் நிலத்தில் வித்தியாலயத்துக்காக அஸ்திவார விழா நடக்கப் போகிறது என்ற செய்தி பலருக்குத் தெரியாது. காந்திஜி விஜயம் செய்யும் தினத்தன்று சடையக் கவுண்டரின் தூரபந்துவும் தேசபக்தருமான அரசூர்ப் படையாச்சி என்பவர் திருவெண்ணெய் நல்லூருக்கு வந்தார். தம்முடைய தூரபந்து ஒருவருடைய நிலத்தில் காந்திஜி அடியெடுத்து வைத்துப் புனிதமாக்கப் போகிறார் என்ற செய்தி அவரை ஆனந்தத்திலாழ்த்தியது. அவர் கவுண்டரிடம் ஓடோடிச் சென்றார். ''உன்னுடைய பாக்கியமே பாக்கியம்'' என்று கூறி அவரைத் தழுவிக் கொண்டார்.

கவுண்டர் திகைத்துப்போனுர். காந்திஜியைப் பற்றி மிகவும் சுருக்கமாகப் படையாச்சி எடுத்துச் சொல்லி விட்டு, 'நம்முடைய கிராமத்துக்கு அடிகள் விஜயம் செய்வதே பெரும் பாக்கியம். அந்தக் காலத்தில் கம்பனுக்கு உதவி, சடையன் பெருமைப்பட்டு விட்டான். இன்று நிலத்தை விற்று விட்டாலும், அடிகள் கால் பட்டுப் புனிதமான நிலத்திஞல் உன்னுடைய பெயரும் பிரசித்தமாகிவிடும்' என்ருர்.

சடையக் கவுண்டர் சிறிது நேரம் சிந்தித்தார். 'என்னை அடிகளுக்கு அறிமுகம் செய்து வையுங்கள். கிரயத்தை மாற்றி, அந்த நிலத்தை அடிகளுக்கு தானமாகக் கொடுத்து விடுகிறேன்' என்ருர்.

''நீ மகா பாக்கியசாலி, அடிகளுடைய பாததூளி படுவதால் பெருமையென்றதைக் கேட்டு நீ அவசரமான முடிவுக்கு வந்து விடாதே. ஆனல் உன்னுடைய முடிவு போற்றத்தக்கது' என்ருர் நண்பர்.

சடையக் கவுண்டர் சொல் தவருதவர். ''நான் தானம் செய்ய முடிவு செய்துவிட்டேன்'' என்ருர் உறுதி வாய்ந்த குரலில்.

படையாச்சி வித்தியாலய நிர்வாகிகளிடம் ஒடிவந்து செய்தியைச் சொன்ஞர். இது எப்படிச் சாத்தியம்? சடையக் கவுண்டர் பேரம் பேசுவதில் நிபுணர் என்பதும், காசில் கரிசனம் உள்ளவர் என்பதும், நிலத்தை விலே பேசும் போது அவர்கள் அநுபவித்தறிந்த உண்மையாயிற்றே! படையாச்சியின் செய்தியையும் ஒதுக்கிவிட முடியாது. சிந்தித்துக் கொண்டிருக்கவோ நேரம் இல்லே. எல்லாரும் விழா நடக்க வேண்டிய இடத்தில் கூடிஞர்கள். அங்கு சடையக் கவுண்டரும், அவருடைய குமாரர்களும் இருந்தார்கள். குர்ஜாலி கவுண்டரைச் சந்தித்ததும், ''ஸ்வாமி நான் கிரயத்தை மாற்றிவிட்டேன். மகாத்மாவுக்குத் தானமாக இந்த நிலத்தைக் கொடுக்க நிச்சயித்து விட்டேன். இது என்னுடைய சொந்தச் சம்பாத்தியம். ஆனுலும், நான் செய்த முடிவை, என்னுடைய குமாரர்களும் ஏற்றுக்கொண்டு விட்டார்கள்'' என்ருர் சடையக் கவுண்டர், மலர்ந்த முகத்துடன்.

டாக்டர் ராஜனும், ராஜாஜியும் மற்ற ஊழியர்களும் சூழ்ந்து நிற்கக் காந்திஜி சடையக் கவுண்டரைச் சந்தித்தார். விழா துவங்குவதற்கு முன்பு மிகவும் சுருக்கமாகக் கவுண்டரின் மனமாறுதலைப்பற்றி குர்ஜாலி காந்திஜியிடம் கூறிஞர். காந்திஜி கவுண்டரை ஏற இறங்கப் பார்த்து விட்டு, ''நல்லது, எது எப்படி நடக்க வேண்டுமோ, அப்படியே நடக்கிறது. உத்தமமான தானம் தான்' என்ருர். காந்திஜியின் கையில் மாவிலேக் கொத்தை வைத்து, நீர்வார்த்துத் தானம் செய்தார் கவுண்டர். அவருடைய குமாரர்கள் சாட்சியாக நின்ருர்கள். காந்திஜி ஏற்றுக் கொண்டதும் மூவரும் அவருடைய பாதங்களைத் தொட்டு வணங்கிஞர்கள்.

விழா முடிந்ததும், காந்திஜி வித்தியாலயத்துக்குச் சென்று ஓய்வு எடுத்துக் கொண்டார். திடீரென அவர் குர்ஜாலியைக் கூப்பிட்டு ''நான் கவுண்டரைப் பார்க்க வேண்டும்'' என்ருர்.

கவுண்டரை அழைத்து வந்தார்கள். வந்ததும் காந்திஜியை வணங்கி விட்டு ஒதுங்கி நின்ருர் கவுண்டர். ''இப்படி உட்காருங்கள்'' என்று பக்கத்தில் இடம் காட்டிவிட்டு, காந்திஜி கேட்டார். ''கவுண்டரே, காலேயில் எனக்குத் தானம் கொடுத்தீர்களே, அந்த நிலத்தை என்ன செய்வது? நான் இங்கு தங்குவது முடியாத காரியம். உள் ளூரில் இருப்பவர்களிடம் கொடுத்தால் உங்களுடைய ஆசை நிறைவேறுமா என்று சந்தேகிக்கிறேன். ஹரிஜன சேவை செய்வதால் இந்த ஊரில் குர்ஜாலியும் மற்ற ஊழியர்களும் சாதி இந்துக்களுடைய கோபத்துக்கு ஆளாகி விட்டார்கள். காங்கிரஸ் ஊழியர்களுக்கு அனுதாபம் காட்டிஞல் உங்களுக்கும் போலீஸ் தொந்தரவு ஏற்படும்''

''நீங்கள் மகாத்மா. இதை எப்படிச் செய்ய வேண்டுமோ அதன்படிச் செய்யுங்கள். நான் இந்த இடத்தை விற்கவே விரும்பினேன். திடீரென என் மனத்தில் மாறுதல் ஏற்பட்டது. உங்களுடைய ஆசி பெற்று இந்த இடத்தில் வித்தியாலயம் நடக்கும் என்ற நம்பிக்கை தோன்றவே என்னுடைய பங்குக்கு நிலத்தைத் தானம் செய்துவிட்டேன். இது சம்பந்தமாக எவ்விதத் துன்பம் வந்தாலும் ஏற்கத் தயார்'' என்ருர் கவுண்டர்.

''இந்த நிலத்தைக் குர்ஜாலிடயிடம் ஒப்படைத்து விடுவதில் உங்களுக்கு ஆட்சேபணையுண்டா? நான் சர்க்காருக்கு விரோதி. குர்ஜாலியும் சர்க்காருக்கு விரோதி தான். எங்களால் உங்களுக்குத் தொந்தரவு நேரக்கூடும். நன்ருக யோசித்துக் கூறுங்கள். நான் இருக்கும்பொழுதே உங்களிடம் நிலத்தைத் திருப்பிக் கொடுத்து விடலாம் என்று எண்ணுகின்றேன்'' என்ருர் மகாத்மா.

சடையக் கவுண்டர் கண்களில் நீர்மல்க எழுந்து மகாத்மாவின் பாதங்களைப் பிடித்துக் கொண்டார். ''என்ன அபச்சாரம்; ஸ்வாமி, என்ன வார்த்தை சொல்லி விட்டீர்கள்? நீங்கள் மகாத்மா! நல்லதும் கெட்டதும் உங்களுக்கு ஒன்றுதான், கொடுத்ததை நீங்கள் மறுக்கலாமா? நீங்கள் சொன்ன வார்த்தைகளே மாற்றும் வரையில் உங்களுடைய பாதங்களே விடமாட்டேன். பல பேர் அறிய நான், நீர் வார்த்துத் தானம் செய்தேன். அதை எப்படித் திரும்பப் பெறுவேன்?'' என்ருர்.

காந்திஜி மனம் நெகிழ்ந்து விட்டார். இரு கைகளாலும் கவுண்டரைத் தூக்கி நிறுத்திஞர். ''என்னுடைய ஆயுளில் நடந்த நற்சம்பவங்களில் இதுவும் ஒன்று. சட்டமும் தஸ்தாவேஜூம் குறுக்கிடாத மகத்தான சம்பவம் இது'' என்ருர்.

காந்திஜிக்குத் தானம் கொடுத்த நிலத்தைக் குர்ஜாலி நிர்வகித்து வர வேண்டும் என்று தான சாசனம் எழுதிப் பத்திரப் பதிவு செய்தார் சடையக் கவுண்டர். அதன் பிறகு பதினைந்து வருஷம் வாழ்ந்து தம்முடைய எண்பத்தைந்தாவது வயதில் அவர் காலமாஞர். அந்தப் பதினைந்து வருஷங்களிலும் அவருக்குக் காந்திஜி தான் பேசுந் தெய்வமாக விளங்கிஞர்.

**[திரு. கே. எஸ். ஜம்புநாதன் எழுதிய 'காந்தி கதைகள்' என்னும் நூலிலிருந்து]**



அம்பத்தூருக்கு 1946-ல் வருகை தந்த அண்ணல் காந்தியடிகளை, திரு. காமராஜ், வரவேற்று அழைத்துச் சென்ருர்.

# கிராமங்கள் புத்துயிர் பெற உதவுவது ராட்டையே!



—மகாத்மா காந்தி

**ரா**ட்டை, கிராமங்கள் புத்துயிர் பெறுவதற்குள்ள சாதனமென்பது என் கருத்து. ராட்டை என்று தொலைந்ததோ அன்றே நம் மக்கள் பெயரளவிலேனும் இருந்து வந்த தம் சுதந்தரத்தைப் பறிகொடுத்து விட்டார்கள். ராட்டை கிராமத்தாரின் விவசாயத் தொழிலுக்குப் பக்க பலமாயிருந்து அதற்குப் பெருமையளித்து வந்தது; கணவனை இழந்து தவித்த பெண்ணுக்கு நண்பனாய், ஆதரவாய் இருந்தது; கிராமத்தாரின் சோம்பலைப் போக்க உதவிற்று. எப்படியெனில், ராட்டையென் கையில் வெறும் நூல் நூற்பதோடு நில்லாது, அதற்கு முன்பும் பின்பும் பருத்தி அரைத்தல், பஞ்சு வெட்டிப் பட்டை போடுதல், பாவுதோய்தல், தறியில் பூட்டி நெய்தல், சாயமிடுதல் ஆகியவையும் நடந்து வந்தன.

இவையெல்லாம் நடக்கையில் கிராமத் தச்சனுக்கும் கிராமக் கொல்லனுக்கும் நல்ல வேலை இருந்தது. ராட்டை நம் ஏழு லட்சம் கிராமங்களும் உடை என்ற ஒரு முக்கியமான தேவையின் விஷயத்தில் பிறர் கை பாராது வாழ உதவிற்று. ராட்டை சுற்றுதல் நின்றதுமே கிராமத்தில் நடந்து வந்த எண்ணெய் ஆட்டுதல் போன்ற தொழில்களும் நின்று போயின. இவை போனது போனதுதான். வேறு தொழில்களும் தோன்றவில்லை. இவ்வாறு கிராமங்களின் பல்வேறு தொழில்களும், கிராமத்தாரின் தொழில் திறனும், அவர்களுக்குக் கிடைத்து வந்த நாலு காசும் பறிபோயின.

எனவே கிராம மக்கள் மீண்டும் தம் பழைய நிலையை எய்த வேண்டுமென்றால் அதற்கு இயல்பாக உதவக்கூடியது ராட்டைத் தொழிலும் அதோடு இணைந்த பிற தொழில்களுமேயாகும்.

இவ்வாறு ராட்டையை மீண்டும் கிராமங்களில் புகுத்துவது என்பது, சிறந்த அறிவும் நாட்டுப் பற்றுமுள்ள சுயநலமற்ற ஊழியர்களின் பெரும்படையொன்று கருமமே கண்ணாய் ராட்டைத் தத்துவத்தை கிராமங்களெங்கும் பரப்பி ஒளி இழந்த கிராம மக்களின் கண்களில் மீண்டும் ஒளி தோன்றுமாறு செய்தாலல்லது சாத்தியமல்ல. இது நடந்தால் இது பிரம்மாண்டமானதொரு சிறந்த கூட்டுறவு முயற்சியாயும், முதியோர் கல்வித் திட்டமாயும் இருக்கும். சந்தடியின்றிச் சுற்றும் ராட்டை மக்களுக்கு உறுதியான பிழைப்பு அளிப்பதே போன்று, இதுவும் அமைதியான முறையில் மக்கள் வாழ்க்கையை உருத்தெரியாமல் மாற்றிவிடும்.

எனது இருபது ஆண்டு ராட்டை அனுபவத்திலிருந்து என் இந்த வாதம் மிகவும் சரியானது என்பதை உணருகிறேன். ராட்டை ஏழை முஸ்லீம்களுக்கும், இந்துக்களுக்கும் அநேகமாய் ஒரே வகையில் உதவியிருக்கிறது; சிறிதும் ஆடம்பரமின்றி இலட்சக்கணக்கான இந்தக் கிராமத் தொழிலாளர் கைக்குச் சுமார் ஐந்து கோடி ரூபாய் போய்ச் சேருமாறு செய்திருக்கிறது.

இதனாலேயே சமய வேறுபாடின்றிப் பொதுமக்கள் அனைவருக்குமே சுய ராஜ்யம் கிடைக்க ராட்டை உதவுமென்று நான் சிறிதும் தயங்காது சொல்லுகிறேன். ராட்டை, கிராமங்களுக்கு அவைகளுக்கு உரிய பழைய அந்தஸ்தை மீண்டும் அளித்து, உயர்வு தாழ்வு என்ற வேற்றுமைகளை அகற்றும்.

இப்பொழுது பெரும்பாலான கிராமங்கள் தம் தேவைக்கான உணவு தானியங்களைத் தாமே உற்பத்தி செய்து கொள்வதைப் போல, அவற்றைத் தம் உடைத் தேவைக்கு வேண்டிய நூலையும் நூற்று, நெய்து கொள்ளச் செய்தல் நல் இலட்சியம் என்பதில் ஐயமில்லை. தன் தேவைக்கு வேண்டிய உணவு தானியங்கள் முழுவதையும் ஒவ்வொரு கிராமமும் விளைவிப்பதைவிட, தன் தேவைக்கு வேண்டிய நூலை நூற்றலும் நெய்து கொள்ளலும் சுலபம். ஒவ்வொரு கிராமமும் தனக்கு வேண்டிய பருத்தியைச் சேமித்து வைத்துக் கொண்டு அதைச் சிரமமின்றி நூற்று நெய்து கொள்ளலாம்.



## கைராட்டை பிறந்த விதம்

காந்தியடிகள் சிறைவாசத்தின்போது நூல்களைப் படிப்பது வழக்கம். ஒருமுறை சிறையில் இருந்தபோது கத்தேயின் ‘ஃபாஸ்ட்’ என்னும் நூலை அவர் படிக்க நேர்ந்தது.

அந்நூலில் வரும் கதாநாயகி, கணவனை இழந்து சோகத்தின் உருவமாகக் காட்சி தருகிறாள். அவளது மனம் அமைதியை இழந்து விடுகிறது. ஏராளமான நூல்கள் அவளிடம் இருக்கின்றன; அவற்றில் ஒன்றைக்கூட அவள் படிக்க விரும்பவில்லை. வாசிப்பதற்கு அநேக இசைக் கருவிகள் தன்னிடமிருந்தும் இசைத் திறமை பெற்ற அவள், அவற்றை வாசித்து மன அமைதிபெற முயலவில்லை. ஆனால் சர்க்காவில் நூற்பதன் மூலம் மன அமைதி பெறுகிறாள்—உளச் சாந்தி அடைகிறாள்.

இந்தக் கதாபாத்திரமும் அவளது செயலும் காந்தியடிகளின் மனத்தைக் கவர்ந்து விட்டன. மன அமைதி தரும் சாதனமாக ‘ஃபாஸ்ட்’ என்னும் நூலில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள கைராட்டையை ஏழைகளின் வாழ்வு மேம்படுவதற்காகப் பயன்படுத்தலாம் என்ற எண்ணம் அடிகளுக்குத் தோன்றியது. அதன் பின் சர்க்காவை அறிமுகம் செய்தார் காந்தியடிகள்.

இக் கழகம் 23 மீட்டர் நீளம் உள்ள இரண்டு 'மெக்சிகன் டிராலர்' களைப் பெறவிருக்கிறது. இந்த டிராலர்களின் மதிப்பு ரூ. 80.00 இலட்சமாகும். இந்த டிராலர்கள் தமிழ் நாட்டிற்கு 1977 அக்டோபரில் வரக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த டிராலர்கள் வந்தவுடன் ஆழ்கடல் மீன் வளம் பயனடைவதற்குச் செயல்படுத்தப்படும். இதே மாதிரியான இரண்டு டிராலர்களை உள் நாட்டிலேயே கட்டுவதற்கும் கழகம் திட்டமிட்டு உள்ளது.

தமிழ் நாடு மீன் அபிவிருத்திக் கழகம் விற்பனையில் தன் செயல்பாடுகளை விரிவுபடுத்துவதற்கு உதவியாக கீழ்க்கண்ட 5 பெரிய நீர்த் தேக்கங்களிலுள்ள மீன்பிடி உரிமத்தை 1-7-77 முதல் இக்கழகத்திற்கு மாற்ற அரசு ஆணையிட்டுள்ளது.

1. மேட்டூர் அணை—சேலம் மாவட்டம்.

2. சாத்தனூர் அணை—வட ஆர்க்காடு மாவட்டம்.

3. அமராவதி.

4. ஆளியார்.

5. திருமூர்த்தி.

6. பவானி சாகர்—கோயம்புத்தூர் மாவட்டம்.

## அளவாய்வு

கீழ்க்கண்ட இடங்களில் அமைந்துள்ள அண்மைக் கடல் மீன் பிடிப்பு நிலையங்கள், அண்மைக் கடலில் மீன் வளத்தைக் கண்டறிய அளவாய்வு செய்து கொண்டிருக்கின்றன :

1. சென்னை.

2. கடலூர்.

3. மல்லிபட்டிணம்.

4. இராமேசுவரம்.

5. கன்னியாகுமரி.

இந் நிலையங்களில் சிறிய மீன் பிடி விசைப் படகுகளே உள்ளன. ஒரு சில 43.5 அடி படகுகள் மட்டுமே, சில நிலையங்களுக்கு கொடுக்கப்பட்டிருந்தன. 1977-78ல் மல்லிப்பட்டிணம் நிலையத்திற்கு மேலும் ஒரு 43.5 அடி படகு வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

நமது எல்லையைச் சார்ந்த ஆழ்கடல் பரப்பில் உள்ள மீன் வளத்தைப் பற்றிய போதுமான விவரங்கள் நம்மிடம் இல்லை. ஆழ்கடல் மீன் வள ஆய்வு நடத்துவது மத்திய அரசின் பொறுப்பாகும். உலக நாடுகள் அபிவிருத்தித்திட்டத்தின் கூட்டோடு, இவ்வளவாய்வினை மேற்கொள்ளுமாறு மத்திய அரசினை மாநில அரசு கடந்த காலங்களில் வலியுறுத்தி வந்தும் குறிப்பிடத்தக்க விளைவுகள் இல்லை. தகுந்த கலன்களும், கருவிகளும் இல்லாதது இவ்வளவாய்வு தாமதமாவதற்கு மற்றொரு காரணம். மீன் பிடிப்பினைப் பெருக்குவதற்கும், மீன் பொருள்களை ஏற்றுமதி அபிவிருத்தி செய்வதற்கும் ஆழ்கடல் மீன் வளத்தைப் பற்றிய விவரங்கள் மாநில அரசுக்குப் பேருதவி செய்யும் என்பதால், ஆழ்கடல் மீன் வள ஆய்வினை மேலும் காலந்தாழ்த்தாது விரைந்து நடத்துவது அவசியம். 100 பெரிய மீன்பிடிக் கலன்களை இறக்குமதி செய்ய மத்திய அரசு சமீபத்தில் அனுமதியளிப்பதை யொட்டியும் இவ்வளவாய்வு செய்வது அவசியம். எனவே, இவ்வளவாய்வினை விரைந்து மேற்கொள்ளுமாறு மத்திய அரசினை வற்புறுத்த மாநிலஅரசு எண்ணியுள்ளது. அவ்வாறு மீன் வளத்தைக் கண்டு அறிந்தபின், ஆறுவது ஐந்தாண்டு திட்டக் காலத்திலாவது ஆழ்கடல் மீன் வளத்தினைத் துய்க்க தகுந்த திட்டங்கள் தீட்டமுடியும்.

## பனிக்கட்டி நிலையங்களும் குளிர் அறை நிலையங்களும்

கடந்த காலத்தில் மீனவர்களின் நன்மைக்காகவும், மீன் பிடித்தொழில் முன்னேற்றத்திற்கும் கடலோரப் பகுதிகளில் 36 பனிக்கட்டி தயாரிக்கும் பொறிகளையும், குளிர் அறைகளையும் மீன் துறை நிறுவி இருக்கிறது.

மீனவர்களின் நன்மைக்காக, இத்துறை சிறிய அளவுள்ள வசதிகளைத் தொடர்ந்து ஏற்படுத்தும். அதே சமயத்தில் மீன் அபிவிருத்திக் கழகம் வியாபார நோக்கமுள்ள பெரிய அளவில் உள்ள வசதிகளை சென்னையிலும், தூத்துக்குடியிலும் மீன் பிடித்துறை முகங்களில் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கும். செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள உய்யாலிக்குப்பத்திலும், திருநெல்வேலி மாவட்டத்திலுள்ளபெரியதாழையிலும், கோவை மாவட்டத்தில் உள்ள பவானிசாகரிலும் ஏற்கனவே அனுமதிக்கப்பட்டுள்ள பனிக்கட்டி நிலையங்கள் நடப்பு

## மீனவர்களைக் காப்பாற்ற மீட்புக் கலன்கள்

அநேக நாட்களாக அத்தியாவசியமாகத் தேவைப்பட்டதும், மீனவர்களுக்கு நன்மை பயக்கக் கூடியதுமான இரு "மீட்புக்கலன்கள்" (Rescue Vessels) எனக் கூறப்படும் கலன்களைத் தயாரிக்கும் பொருட்டு, அரசு இப்பணிக்காக ரூ. 10 இலட்சம் ஒதுக்க உள்ளது. இந்தக் கலன்கள் மீனவர்களுக்குக் கடலில் ஏற்படும் ஆபத்துக்களின் போது உதவுவதற்கென்றே பயன்படுத்தப்படும்.

## உவர்நீர் மீன்வளம்

உவர்நீர் மீன்வள அபிவிருத்திக்கு ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில்தான் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. இத்துறையில் செயல்படுத்தப்பட்ட ஒரு சில மாதிரித் திட்டங்கள் இலாப நோக்கோடு உவர்நீர் மீன் வளர்ப்பை மேற்கொள்ளலாம் என உணர்த்தியுள்ளன. தமிழகத்திலுள்ள 80,000 எக்டேர் பரப்புள்ள காயல்கள், உப்பங்கழிகள் இவைகளில் 27,000 எக்டேர் பரப்பில் இருல், கல் இருல், நண்டு, ஆளிகள், மீன்கள் வளர்ப்புக்குப் பயன்படுத்தலாம். இவ்வகைகளில் பலவற்றை உள்நாட்டுத் தேவைக்கு மட்டுமின்றி, அயல்நாட்டுக்கு ஏற்றுமதி செய்யவும் முடியும். மாதிரித் திட்டங்களை அடுத்து கோவளம், பழவேற்காடு, கிள்ளை முதலிய இடங்களில் வணிக நோக்கோடு செயல்படக்கூடிய பெரிய பண்ணைகளை அமைக்க மீன் துறை திட்டமிட்டுள்ளது. அம்மாதிரிப் பண்ணை ஒன்று 1977-78-ல் மாநில அரசுத் திட்டத்தின் கீழ் கோவளத்திலும், மத்திய அரசு பிணையாயிருக்கும் திட்டத்தின்கீழ் கிள்ளையிலும் ஏற்படுத்த திட்டமுள்ளது. இது தவிர இத்தகைய சுமார் ஒரு எக்டேர் பரப்புள்ள சிறு பண்ணைகளை அமைத்து மீனவர்கள் நடத்த, தொழில் நுட்ப உதவி மற்றும் பண உதவி வழங்கும் திட்டம் பரிசீலனையில் உள்ளது. இத்திட்டங்களும் மற்றும் உவர்நீர் மீன்வளத்தைப் பாதுகாக்க எடுக்கப்படும் திட்டங்களும் உவர்நீர் மீன் பிடிப்பை மேலும் 2 அல்லது 3 மடங்கு பெருக்க உதவும் என்பது உறுதி.

# மீன்வளம் பெருக்குவோம்! மீனவர் நலங் காப்போம்!




**மாண்புமிகு உணவமைச்சர்**
**திரு ஜி. ஆர். எட்மண்ட்**



**மீ**ன்பிடித் தொழில் தொன்மையான தொன்றுகும். உலகில் மற்றைய தொழில்களைப்போலவே மீன்பிடித் தொழிலும் நவீனமாக்கப்பட்டு முன்னேற்றம் அடைந்து வருகிறது. சமீப காலத்தில் உலகில் அநேக நாடுகள் தங்கள் நாடுகளை ஒட்டியுள்ள கடலில் மீன் வளத்தை மட்டுமின்றி, எண்ணெய், கனிப் பொருள் முதலியவற்றைப் பயன் படுத்திக் கொள்வதில் பெரும் அளவு அக்கறை காட்டி வருகின்றன. அதுவும் குறிப்பாக நம் இந்திய நாடு தனது நாட்டெல்லையைச் சார்ந்த கடல் எல்லையிலிருந்து 200 கல் தொலைவினை நம் நாட்டின் தனி உரிமைப் பட்ட பொருளாதார எல்லையாக பறை சாற்றியுள்ள நிலையில், நாட்டின் நலனுக்காக கடல் வளப் பயனைப் பெருக்குவதில் தமிழ் நாடும் தன் பங்கினைச் செய்ய, தமிழ் நாட்டில் மீன் பிடித் தொழில்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பது இன்றியமையாததாகும்.

வங்காள விரிகுடா, இந்து மகா சமுத்திரம் மற்றும் அரபிக் கடல் ஆகிய மூன்று கடல்களைத் தொட்டுச் செல்கின்ற நமது தமிழகத்தின் 1,000 கிலோ மீட்டர் நீளமுள்ள நெடுகிய கடற்கரை மீன்பிடித் தொழிலையும், அதனைச் சார்ந்த மற்றைய தொழில்களையும் பெருக்குவதற்குப் பெருமளவு வாய்ப்பினைக் கொண்டுள்ளது. இம்மாநிலத்திலுள்ள ஆறுகள், துணை ஆறுகள், கிளையாறுகள், அணைக்கட்டுகள் ; பாசன நீர்த் தேக்கங்கள், கழிமுகங்கள், காயல்கள், உப்பங்கழிகள் முதலியன 3.51 இலட்சம் எக்டேர் அளவுள்ள இயற்கையான உள் நாட்டு மீனவள அபிவிருத்திக் களமாக அமைந்துள்ளது. இவைகளில் முனைப்புடன் தரமான மீன் குஞ்சுகளை நீர்நிலைகளில் விட்டு அறிவியல் அடிப்படையில் மீன்களை வளர்த்தல், நிர்வகித்தல் போன்ற பணிகளை மீன் துறை மேற்கொண்டு உள்நாட்டு மீன் வளத்தை உயர்த்தி வருகிறது.

தமிழ் நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் மீன்பிடித் தொழில் ஒரு சிறந்த இடத்தைப் பெற்று இருக்கிறது. தமிழ் நாட்டின் ஒட்டு மொத்த மாநில வருமானத்தில் மீன் வளப் பகுதி மூலம் கிடைக்கும் வருமானம் 0.83 சதவிகிதமாகும் (1975-76). இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாகும் கடல் மீன் பொருள்களின் மொத்த மதிப்பில், தமிழ் நாட்டிலிருந்து மட்டும் 13.43 சதவிகிதம் (1976) ஏற்றுமதியாகின்றது. மீன் பிடித் தொழிலின் இப்புள்ளி விவரங்கள் தமிழ் நாட்டில் இத்தொழில் வளர்ச்சி பெற வேண்டிய முக்கி



மீனவர்களின் சமூகப் பொருளாதார நிலையினை மேம்படுத்துதல்.

## தமிழ் நாட்டு மீன் அபிவிருத்திக் கழகம்

தேவையான நிதி உதவியை வணிக வங்கிகளிலிருந்து பெற்று மீன் துறையின் வணிக நோக்குப் பிரிவுகளான படகு கட்டும் நிலையங்கள், பதன நிலையங்கள் ஆகியவற்றின் செயல்பாடுகளைப் பெருக்குவதற்காகவே, தமிழ் நாடு மீன் அபிவிருத்திக் கழகம் துவக்கப்பட்டது. இக் கழகம் சென்னையில் 2-ம், நாகப்பட்டினத்தில் ஒன்றும், மண்டபத்தில் ஒன்றுமாக நான்கு படகு கட்டும் நிலையங்களை நடத்தி வருகிறது.

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவிற்குள் இக்கழகம் 750 படகுகளை வழங்க இயலும் என எதிர்பார்க்கலாம். முதலாவதாக வழங்கும் 500 படகுகளுக்கு 100 சதவிகிதம் வட்டி மான்யமும் அடுத்த இரண்டாண்டுகளுக்கு முறையே 66.7 சதவிகிதம், 33.3 சதவிகிதம் வட்டி மான்யம் கொடுக்க அரசு ஒப்புக் கொண்டுள்ளது.

எண்ணூர், மண்டபம், தூத்துக்குடி முதலிய இடங்களிலுள்ள பதன நிலையங்கள், தனியார் நிறுவனங்களுக்குக் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. மண்டபத்தில் உள்ள மீன் தூள் நிலையமும் முதலில் குத்தகைக்கு விடப்பட்டு மறுபடியும் கழகமே எடுத்துக் கொண்டு, 1-4-77 முதல் கழகமே நடத்தி வருகிறது. சென்னை, தூத்துக்குடி மீன்பிடித் துறை முகங்களில் பெரிய மீன் பதன நிலையங்களை ஏற்படுத்த தமிழ் நாடு மீன் அபிவிருத்திக் கழகம் திட்டமிட்டுள்ளது.

யத்தையும், அதன் பங்கினையும் தெள்ளென விளக்குகின்றன. முதலாவது ஐந்தாண்டுத் திட்டக் கால ஆரம்பத்தில் 0.45 இலட்சம் டன்னாக இருந்த கடல் மீன் உற்பத்தி, 1975-76-ல் 2.20 இலட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. அதே போல உள் நாட்டு மீன் உற்பத்தி 0.34 இலட்சம் டன்னிலிருந்து 1.50 இலட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. ஐந்தாவது ஐந்தாண்டு திட்டக் கால இறுதியில் கடல் மீன் பிடிப்பை 4.00 இலட்சம் டன்னாகவும், உள் நாட்டு மீன் பிடிப்பை 2.30 இலட்சம் டன்னாகவும் உயர்த்துவதே ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் குறியீட்டு எண்ணாகும் (Target). அனைத்து மேம்பாட்டு நடவடிக்கைகளிலும், மீனவர்களும் ஒரு முக்கிய அங்கம் வகிக்கிறார்கள். இந்த இலக்கினை அடைய, மீன் துறையின் நோக்கங்கள் கீழே சுருக்கமாகக் கொடுக்கப்பட்டு உள்ளன :

(1) தொன்று தொட்டுப் பயன்பட்டு வரும் கலன்களையும், கருவிகளையும் மேம்படுத்தி மீன் பிடித் திறனை அதிகரித்தல்.

(2) சிறிய மீன்பிடி விசைப் படகுகள் மூலம் அண்மைக் கடல் மீன் பிடிப்பை அதிகரித்தல்.

(3) பெரிய மீன்பிடி டிராலர்களைக் கொண்டு ஆழ்கடல் மீன் பிடிப்பைப் பெருக்குதல்.

(4) வெவ்வேறு பருவங்களில் கூட்டமாக வரும் மேல் மட்ட மீன்களைப் பிடிக்க பலவகைப் படுத்திய மீன்பிடி முறைகளைக் கையாளுதல்.

(5) உப்பங்கழிகள், கழிமுகங்கள், காயல்களில் மீன் உற்பத்தியைப் பெருக்க உவர்நீர் மீன் வளர்ப்பு முறையைப் புகுத்துதல்.

(6) மீன் வளர்ப்புக்கு உகந்த அனைத்து உள்நாட்டு நீர்நிலைப் பரப்புகளில் மீன் குஞ்சுகளை விட்டு வளர்த்து, தற்கால மீன் வளர்ப்பு தொழில் நுட்ப முறையைக் கடைப்பிடித்து உள்நாட்டு மீன்பிடிப்பை உயர்த்துதல்.

(7) மீன் பிடிப்பும், அதனைச் சார்ந்த தொழில்களும் விரைந்து முன்னேற மீன்பிடித் துறைமுகங்கள், பனிக்கட்டி நிலையங்கள், பராமரிப்பு நிலையங்கள் முதலிய வசதிகளை ஏற்படுத்துதல்.

(8) வீட்டு வசதி, இணைப்புச் சாலை வசதி, நிவாரணங்கள் மூலம்





ஆண்டில் கட்டி முடிக்கப்பட்டுத் துவங்கியிருக்கின்றன. அதோடு இராமேசுவரத்திலுள்ள இரண்டு டன் உற்பத்தி செய்யும் பனிக் கட்டி நிலையத்தை ஐந்து டன் உற்பத்தி செய்யும் நிலையமாக நடப்பு ஆண்டில் விரிவாக்கப் படும்.

### மீன் பிடிப்பை அடிப்படையாகக் கொண்ட தொழிற்பேட்டை !

பல தரப்பட்ட மீன் பிடித் தொழில்களை ஆரம்பிக்கவும், தமிழ் நாட்டிலுள்ள தனியார் நிறுவனங்களை ஊக்கப்படுத்தும் பொருட்டும், முக்கியமான மீன் இறங்கும் இடங்களில் உள்ள, மீன் துறைக்குச் சொந்தமான சீர் படுத்தப்பட்ட நிலங்களை அவர் களுக்கு ஒதுக்க தீர்மானிக்கப்பட் டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், எண்ணூர், கடலூர், மண்டபம், தூத்துக்குடி ஆகிய இடங்களில் இத்துறையின் நிலங்கள் ஒதுக்கப் பட்டுள்ளன. சென்னையிலுள்ள மீன்பிடி துறைமுகம் கட்டி முடிந் ததும், மேம்படுத்தப்பட்ட நிலங் களைப் பிரித்து மீன்பிடித் தொழில் களை நிறுவ முன்வரும் நிறுவனங் களுக்கு ஒதுக்கப்படும்.

### மீன்பிடித் துறைமுகங்கள்— இறங்கு துறை வசதிகள்

இயந்திர மீன் பிடிப் படகு களுக்குத் தேவையான இறங்கு துறை, தங்கு துறை வசதிகள், மத்திய அரசினால் உருவாக்கப் பட்ட திட்டங்களின் கீழ், ஏற் கனவே கீழ்க்கண்ட இடங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

1. கடலூர்—சிறு மீன்பிடித் துறைமுகம்.

2. நாகப்பட்டிணம்—இறங்கு வசதிச் சுவர்.

3. மண்டபம்—கரை குடா.

4. இராமேஸ்வரம்—'டி' வடிவ கடல் முகப்பு ஜெட்டி.

5. தூத்துக்குடி—பெரிய மீன் பிடித் துறைமுகம் (9 அடி மிதப்பு வசதி).

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள சின்ன முட்டத்தில், ரூ.200 இலட்சம் செலவில் ஒரு பெரிய மீன்பிடித் துறைமுகத்தைஅமைக் கும் செயல் திட்டம் இந்திய அரசின் ஏற்புக்காகக் காத்திருக் கிறது.

கீழ்க்கண்ட இரண்டு இடங் களில் படகு தங்கும் துறைகளை ஏற்படுத்துவதற்கான திட்டம், உத்தேச செலவு விவரங்களை நடப்பு ஆண்டில் பெங்களூரில் உள்ள முன் முதலீட்டு திட்ட அளவாய்வு இயக்குநர் தயாரித்து முடிப்பார் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

(1) வாலி நோக்கம்—இராம நாதபுரம் மாவட்டம்.

(2) பழையாறு — தஞ்சாவூர் மாவட்டம்.

மேலும் படகுகளுக்குத் தங்கு துறை, இறங்கு துறை வசதிகளை மேற் கொள்ளுவதற்குரியனவாக 15 இடங்கள் தமிழ்நாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. நிதி வசதிக்கு ஏற்பவும் திட்டம், உத்தேச செலவு ஆகியன தயா ரிக்கப்பட்டு இந்திய அரசின் ஒப்புதல் கிடைத்த பின் இவ் விடங்களிலும் மேற்சொன்ன பணிகள் வரும் ஆண்டுகளில் மேற்கொள்ளப்படும்.

### உள்நாட்டு மீன் வளம்

தற்போது ஆண்டொன்றுக்கு 1.50 இலட்சம் டன்னாக உள் நாட்டு மீன் உற்பத்தி இருந்து வருகிறது. இந்த உற்பத்தி அளவை 2.30 இலட்சம் டன்னாக உயர்த்துவது ஐந்தாவது ஐந் தாண்டுத் திட்டத்தின் இலட்சிய மாகும். வற்றாத நீர் வளம் இன்மையால் இயற்கை நீர்நிலை களிலிருந்து மீன் குஞ்சுகள் உற் பத்தி செய்யக் கூடிய வாய்ப்பு குறைவாக உள்ளது.



முக்கிய மீன் குஞ்சு சேகரிப் புக்கு வழிகோலும் காவிரி நதியில் குறைவாகவும் தடைப்பட்டும் நீர் ஓட்டம் இருந்ததன் விளை வாக இயற்கையாகக் கிடைக்கும் மீன் குஞ்சுகளின் எண்ணிக்கை குறைவுபட்டிருக்கிறது. மேற் கண்ட நிலையின் விளைவாக மீன் குஞ்சுகள் உற்பத்தியைப் பெருக்க மாநிலத்தில், 12 இடங்களில் தூண்டும் முறை மீன் குஞ்சு நிலையங்களை படிப்படியாகப் மீன் துறை உருவாக்கியுள்ளது. நீர்

நிலைகளில் விரைவாக வளர்ந்து பலன் தரக் கூடிய போதுமான மீன் குஞ்சுகளை இருப்புச் செய்வனால் மட்டுமே, உள் நாட்டு மீன் உற்பத்தி பெருகக் கூடுமாதலால் தகுந்த எல்லா இடங்களிலும் தேவையான அளவிற்கு மீன் குஞ்சுகளை உற்பத்தி செய்வதற்கான வசதிகளை ஏற்படுத்துவது இன்றியமையாத தாகும்.

பராமரிப்புக் குட்டைகள் வசதியைப் பெருக்க வேண்டி மேலும் புதிய மீன் நர்சரிக் குட்டைகளை 1977-78ல் ஆளியாறு, திருமூர்த்தி, சாத்தனூர் அணை, பாலார்—பொறந்தலாறு, பேச்சிப்பாறை ஆகிய இடங்களில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஐந்தாவது திட்டத்தின் இறுதியில் மீன் குஞ்சுகளின் உற்பத்தி 750இலட்சம் என்ற அளவை எய்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது ; இந்த முயற்சி ஆறுவது திட்டத்தில் தன்னிறைவு பெறும் என்பதும் தெளிவு.



சினை மீனுக்கு இனவிருத்திக்கான ஊசி போடுதல்.

தமிழகத்திலுள்ள மீன் வளர்ப்பிற்குத் தகுந்த எல்லா நீர்ப்பரப்புகளிலும் இருப்புச் செய்ய 1,050 இலட்சம் மீன் குஞ்சுகள் தேவை என்று கணக்கிடப்பட்டுள்ளது. இலாபகரமான மீன் இனக் குஞ்சுகளின் உற்பத்தியை அதிகரிக்க வேண்டி தற்போதுள்ள நிலையங்களை அபிவிருத்தி செய்வதோடு மேலும் 5 புதிய தூண்டும் முறை மீன் குஞ்சுகள் உற்பத்தி நிலையங்களை ஐந்தாவது திட்டத்தில் உருவாக்க மீன் துறை திட்டமிட்டுள்ளது. ஏற்கெனவே செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள செம்பரம்பாக்கத்தில் ஒரு தூண்டும் முறை மீன் குஞ்சுகள் உற்பத்தி நிலையம் அமைக்க அனுமதிக்கப்பட்டுள்ளது. 1977-78ஆம் ஆண்டில் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள பேச்சிப் பாறையிலும், மதுரை மாவட்டத்திலுள்ள பாலார் — பொறந்தலாறிலும் மற்றும் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள திருக்காட்டுப்பள்ளியிலும் ஒவ்வொரு நிலையம் அனுமதிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மீன் குஞ்சு



பால் கெண்டை

### நீர்த்தேக்கங்களில் மீன் வள வளர்ச்சி

முறையாக மீன் குஞ்சுகளை இருப்புச் செய்து, வளர்த்து, பாதுகாத்து, அவற்றைப் பிடித்து —மீன் வர்த்தகம் மேற்கொள்ளவும் பொதுப் பணித் துறையினால் அமைக்கப்பட்டுள்ள நீர்த் தேக்கங்களை மீன் துறை மேற்கொண்டுள்ளது. இதுவரை 36 பெரிய நீர்த் தேக்கங்கள் மீன் வள மேம்பாட்டிற்காக மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. 1976-77ஆம் ஆண்டின் இறுதியில் இந் நீர்த் தேக்கங்களிலிருந்து ஆண்டொன்றுக்கு 1,200 டன் மீன்கள் பிடிக்கப்பட்டுள்ளன. 1977-78ஆம் ஆண்டில் இந்த நீர்த் தேக்கங்களிலிருந்து பிடிக்கப்படும் மீன்கள் அளவின் இலக்கு 1,652 டன்னாகும்.

1977-78ஆம் ஆண்டில் திருச்சி மாவட்டத்திலுள்ள பொன்னணி ஆறு அணையை மீன் வளர்ப்பதற்கு மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மீன் துறை வசமுள்ள 36 நீர்த் தேக்கங்களில் 5 நீர்த் தேக்கங்கள் 1-7-1977 முதல் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

### மீன் பண்ணையாளர் வளர்ச்சி நிறுவனம் !

தனியார்கள் உள் நாட்டு மீன் வளர்ப்பிலும், நவீன மீன் வளர்ப்புத் தொழில் நுட்ப முறைகளிலும் ஆர்வம் கொள்ள வேண்டி தஞ்சாவூரில் 26-3-76ல் ஒரு மீன் பண்ணையாளர் வளர்ச்சி நிறுவனம் அமைக்கப்பட்டுள்ளது. மத்திய அரசினரால் உருவாக்கப்பட்ட இத்திட்டத்திற்கு அவர்களால் ரூ. 4.50 இலட்சம் நிதி உதவி அனுமதிக்கப்பட்டுள்ளது. (ரூ. 3.90 இலட்சம் மானியம்— 0.60 இலட்சம் கடன்). 1976-77ஆம் ஆண்டில் இந்த நிறுவனம் தஞ்சை மாவட்டத்திலுள்ள 60 எக்டேர் நீர்ப் பரப்பினை மீன் வளர்ப்பிற்காகத் தேர்ந்தெடுத்து 61 அங்கத்தினர்களுக்குக் குத்த



கைக்கு விடுத்துள்ளது. இந்த அங்கத்தினர்கள் மீன் வளர்ப்புத் தொழில் நுட்பத்தில் 15 நாட்கள் பயிற்சியளிக்கப்பட்டார்கள். தற்போது ஒரு எக்டேருக்கு 300 கிலோ கிராமாக இருக்கும் இந் நீர்ப் பரப்பின் மீன் உற்பத்தி, கூட்டு இன மீன் வளர்ப்பினால் ஆண்டொன்றுக்கு 1,500 கிலோ கிராமாக உயரும் என எதிர் பார்க்கப்படுகிறது. நடப்பு ஆண்டில் மேலும் 140 அங்கத்தினர்களை ஈடுபடுத்தி மேலும் 140 எக்டேர் நீர்ப் பரப்பினை தஞ்சை மாவட்டத்தில் இந்த நிறுவனம் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதுபோன்ற மீன் பண்ணையாளர் வளர்ச்சி நிறுவனங்களை தர்மபுரி, மதுரை மாவட்டங்களில் ஏற்படுத்துவதற்கான செயல் திட்டங்கள் பரிசீலனையில் உள்ளன.

## பயிற்சி

இயந்திரப் படகுகளையும், நவீன மீன் பிடி கருவிகளையும் இயக்கும் தொழில் நுட்பத்திறம் படைத்தவர்கள் கிடைக்க வேண்டி மீன் துறை 6 கடல் மீனவர் பயிற்சி நிலையங்களையும், 1 உள்நாட்டு மீனவர் பயிற்சி நிலையத்தையும் உருவாக்கியது. இந்நாள் வரை இந்நிலையங்களில் 4,153 கடல் மீனவர்களும், 838 உள்நாட்டு மீனவர்களும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளனர்.

சில விசேஷத் துறைகளில் பயிற்சி அளிக்கும் மத்திய அரசு நிறுவனங்களும் உள்ளன. மீன் துறை அலுவலர்களை இந்த நிறுவனங்களுக்கு அனுப்பி, இந்தப் பயிற்சி வசதிகளை மீன் துறை பெற்று வருகிறது. இந்நோக்கத்திற்காக நடப்பு ஆண்டில் ரூ. 0.50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## சமூக நலத் திட்டம்

(1) வீட்டு வசதி—தமிழகக் கடலோரப் பகுதியில் பரவிக் கிடக்கும் 331 மீனவர் குப்பங்களில் 3.92 இலட்சம் கடல் மீனவர்கள் வாழ்கிறார்கள். மேலும், உள் நாட்டு மீனவர் கிராமங்களில் 1.20 இலட்சம் மீனவர்கள் வசிக்கின்றார்கள். 'தீ' 'புயல்', 'கடலரிப்பு' ஆகிய ஆபத்துக்களின் நடுவே அவர்கள் பெரும்பாலும் குடிசைகளின் வாழ்கின்றார்கள். அவர்களுக்குத் தகுந்த வீட்டு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க இந்த ஆண்டு 1,692 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டிலும் இத்திட்டத்தைத் தொடர்வதற்காக ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் படிப்படியாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. நாளாவட்டத்தில் எல்லாக் குடும்பங்களும், இத் திட்டத்தின் கீழ் பயன்பெறும்.

## கூட்டுறவுக் கடன் வசதி

மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம், மீனவர்களுக்கு, மீன்பிடி கருவிகள், வலைகள் வாங்குவதற்குக் கடன் வசதி செய்து கொடுக்கப்பட்டு வருகின்றது. 1977-78ல் தமிழ்நாடு மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம், மீனவர்களுக்குப் பல விதமான கடன் வசதிக்காக ஒரு இலட்சம் ரூபாய் வழங்க உள்ளது. மேலும், இந்திய ரிசர்வ் வங்கியின் மூலமும், புது டெல்லியில் உள்ள தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் மூலமும், மீன் பிடிப்பு, மீன் பதனிடுதல், மீன் விற்பனை ஆகியவைகளுக்கு நிதி உதவி பெறுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.



## ஆபத்து உதவி நிவாரணம்

கடலில் மீன் பிடிக்கச் செல்லுகையில் மீனவர்கள் உயிர் இழந்தால் அவர்கள் குடும்பத்திற்கு ரூபாய் ஆயிரம் வழங்கப்படுகின்றது. இது வரை பாதிக்கப்பட்ட மீனவர் குடும்பங்களுக்கு ரூபாய் 2,89,000 இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டிலிருந்து இவ்வுதவித் தொகையை 1,000 ரூபாயிலிருந்து ரூ. 5,000 ஆக உயர்த்தத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

இனி, மேற்கொள்ளவிருக்கும் செயல் திட்டங்கள் மூலம், நமது மாநிலம் கடல், மற்றும் உள் நாட்டு மீன் உற்பத்தியில், முன்னோக்கிச் செல்லும் என்பது என்னுடைய சீரிய எண்ணமும், நம்பிக்கையும் ஆகும். பெரிய மீன் பிடி டிராலர்களை அறிமுகப்படுத்துவது மூலம் ஆழ்கடல் மீன் வளத்தைப் பயன்பெறச் செய்ய முடியும் என்று ஆக்கப் பூர்வமாக எதிர்பார்க்கப்படுகின்றது. இயந்திர மயமாக்குதல், மீன் பதப்படுத்துதல் ஆழ்கடல் மீன் பிடிப்பு, மீன் வர்த்தகம் ஆகிய துறைகளில் தமிழ்நாடு மீன் அபிவிருத்திக் கழகத்தின் ஒருங்கிணைந்த முயற்சியோடு இந்த நாட்டில் நமது மாநிலம் மீன் உற்பத்தியில் சிறந்த ஓர் இடத்தை அடைய முடியும் என்று நான் கருதுகின்றேன். **

[1977—78-ஆம் ஆண்டுக்கான மீன்வளத்துறை மானியத்திலிருந்து தொகுக்கப்பட்டது].



# சாணத்திலிருந்து சக்தி!

—எஸ். கணபதி.

'சாணம்தானே' என்று ஒரு காலத்தில் அலட்சியமாக ஒதுக்கிய நிலை போய், இன்று 'சாணத்திற்கும் சக்தி உண்டு' என்ற நிலை ஏற்பட்டுள்ளது. சாணத்திலிருந்து 'மீத்தேன்' என்ற எரிவாயுவை உற்பத்தி செய்யலாம். இவ்வாயு, விலைமலிவாகக் கிடைக்கும் சிறந்த எரிபொருளாகப் (Energy) பயன்படுகிறது. இவ்வாயு அடுப்பெரிக்கவும், விளக்கு எரிக்கவும் பயன்படும் என்றிருந்த நிலையுடன், இன்று 'டீசல்' எண்ணெய் இயந்திரத்தைச் சிக்கனமாக இயக்கிடவும் பயன்படும் என்ற அளவுக்கு அறிவியல் வளர்ந்துள்ளது. அந்த அறிவியல் நுட்பத்தைக் கேள்விப்பட்ட திரு. எஸ். கணபதி என்ற முன்னோடி உழவர் பெருமகன் (தோட்டப்பாடி கிராமம், சின்னசேலம் ஊராட்சி ஒன்றியம், தென்ஆர்க்காடு மாவட்டம்) சாணத்திலிருந்து கிடைக்கும் சக்தியைப் பயன்படுத்தி, தன் 'டீசல்' என்ஜினை இயக்கித் தண்ணீர் இறைத்துச் சாகுபடி செய்து வருகிறார்.

டீசலையும், சாண எரிவாயுவையும் கலந்து இஞ்ஜினை இயக்குவது பற்றிய தன் அனுபவத்தை, அவர் இக்கட்டுரையில் விளக்கியுள்ளார். இம்முறையினால் அவருக்கு ஆண்டொன்றுக்கு 'டீசல்' வகையில் செலவாகும் ரூபாய் 2,000 மீதமாகிறது என்று கூறுகிறார். அவரைப்போல் மற்ற உழவர் பெருமக்களும் இம்முயற்சியில் ஈடுபட்டால், உழவர்களின் 'டீசல்' செலவு குறைவதுடன், 'டீசல்' இறக்குமதி செய்யும் வகையில் வீணாகும் நம் நாட்டின் அந்நியச் செலாவணியும் மீதமாகும்.

'டீசல்' எண்ணெய் இயந்திரங்களைப் பயன்படுத்தித் தண்ணீர் இறைத்து, வேளாண்மை செய்து வரும் எண்ணற்ற உழவர்கள், 'டீசல்' விலை உயர்ந்துவிட்டதால் சாகுபடி செலவு அதிகமாகிறது என்று முறையிடுகிறார்கள். மின் இணைப்புப் பெற்று மோட்டார் பொருத்தித் தண்ணீர் இறைக்கலாம் என்றால், மின்சாரப் பற்றாக் குறையும் அவ்வப்போது தோன்றி, உழவர் பெருமக்களை அச்சுறுத்துகிறது.

"இப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியாதா?" என்று ஏங்குகின்றார்கள் பல உழவர் பெருமக்கள். இப்படி ஏங்கும் உழவர் பெருமக்களுக்கு இக்கட்டுரை நல்வழி காட்டும்.

தென்னார்க்காடு மாவட்டம் சின்னசேலம் ஊராட்சி ஒன்றியம் தோட்டப்பாடி கிராமத்தில் 7.00 ஏக்கர் சாகுபடி நிலப்பரப்பில் ஒரு பாசனக் கிணற்றுடன் பண்ணைத் தொழில் செய்து வரும் எனக்கு மோட்டார் அமைக்க மின்சாரம் தேவைப்பட்டது. அதற்காக 1973—ஆம் ஆண்டு மின்சார வாரியத்தோடு பம்புசெட்டுக்கு மின் இணைப்புக் கோரி ஒப்பந்தம் செய்தும், மதிப்பீட்டுத் தொகை அதிகமாவதைத் தான் காரணம் காட்டி, காலந் தாழ்த்துவதைத்தான் நான் இதுவரையில் காண முடிந்தது. ஆகவே, இதற்கு மாற்று வழி ஆயில் இஞ்சின் அமைத்து பண்ணையை நடத்துவது என முடிவு செய்தேன்.

ஆயில் இஞ்சின் அமைத்துப் பண்ணையை நடத்தி வரும் எனக்கு டீசல் எண்ணெய்

பெரும் பிரச்சினையாகிவிட்டது. எண்ணெய் வாங்கி ஊற்றிப் பண்ணையை நடத்தி வர முடியவில்லை. ஏனெனில் நாளுக்கு நாள் டீசலின் விலை ஏறிக்கொண்டே இருக்கும் இந்த நாளில் பண்ணையிலிருந்து நஷ்டமே அதிகமாயிற்று.

இந்த அவல நிலையிலிருந்து எப்பொழுது நாம் விடுபடுவோம் என ஏங்கிக் கொண்டு இருந்த நான் ஒரு நாள்வானொலியில், ''சாணத்திலிருந்து உற்பத்தியாகும் சாண எரிவாயுவைக் கொண்டு விவசாயிகள் 5 எச்.பி. ஆயில் இஞ்சினை இயக்கலாம்' என்ற கோவை வேளாண் பல்கலைக் கழக அறிவிப்பைக் கேட்டேன்.

ஆகவே, இது சம்பந்தமான விளக்கங்களை அறிந்து கொள்ள கதர் கிராமக் கைத்தொழில் வாரியத்தின் அலுவலர்களை அணுகி சில விளக்கங்களைப் பெற்றேன். நிதி வசதியற்ற எனக்கு சாண எரிவாயு தயாரிப்பதற்குச் சாதன அமைப்புப் பொறியை அமைப்பதற்கான ஒத்துழைப்பும், நிதி உதவியும் தேவைப்பட்டன. ஆதலால் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் சென்று ஆவன செய்யக் கோரினேன். அவர்கள் எங்களிடம் இந்தத் திட்டத்தைப் பற்றிய விளக்கம் எதுவும் இல்லை என்றும் கடன் வழங்க இயலாது என்றும் கூறி அது சம்பந்தமாக அரசிடமிருந்து ஆணைகள் பிறப்பிக்கப்பட்டால் உங்களுக்கு ஆவன செய்கிறோம் என்று கூறிவிட்டார்கள்.

இவ்வளவு முயற்சி செய்யும் எட்டாக் கனியாக இருந்தது இந்தத் திட்டம். என்ன செய்வது என்று இருந்த எனது இல்லந் தேடி கிராம நல ஊழியர் அவர்கள் வந்தார். சாண எரிவாயுத் திட்டம் பற்றி கூறி அதற்கான விண்ணப்ப நமூனாவையும் பூர்த்தி செய்து கொடுத்து இது அமைப்பதற்கான நிதி வசதியை தேசிய மயமாக்கப்பட்ட வங்கியின் மூலம் பெறலாம் என்ற நம்பிக்கையையும் ஊட்டினார்.

''முயற்சி உடையார் இகழ்ச்சி யடையார்'' என்பதற்கொப்ப அதற்கான முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டேன். இரண்டு திங்களில் சின்ன சேலத்திலிருக்கும் 'இந்தியன் ஓவர்சீஸ் வங்கி'யின் கிளை அலுவலகம் எனக்கு ரூ. 4,000 நிதி உதவி அளிக்க முன் வந்தது.

எரி வாயுவின் இஞ்சினை இயக்க ஆசைப்பட்ட நான் அவ்வாறு இயங்குவதைக் காண வேண்டும் என ஆசைப்பட்டேன். அப்போது, ஆத்தூர் நண்பர் திரு ராமகிருஷ்ணன் அவர்கள் என் இல்லத்திற்கு வந்தார். என் ஆவலை அவரிடம் தெரிவித்தேன். இதில் சிறிது அனுபவம் உள்ள அவர் 'இஞ்சினை இயக்க முடியும்' என உறுதி கூறியதுடன், திருச்சி மாவட்டம் மலையாளப்பட்டியில் சாண எரிவாயுவினால் 6 எச்.பி. லிஸ்டர் இஞ்சின் இயங்கி வருகிறது என்றும் கூறினார். இதைக் கேட்ட நான் மறுநாளே மலையாளப்பட்டி சென்றேன். இஞ்சின் இயக்குபவரைக் கண்டேன். முறையை அறிந்தேன். அவர்கள் 100 மில்லி லிட்டர் டீசல் எண்ணெயுடன், எரிவாயுவையும் சேர்த்து இயக்கினால் இஞ்சின் 1.00 மணி நேரம் இயங்கும் என்று கூறினார்கள். இதனால் மனம் தெளிவு பெற்றது. திடமான நம்பிக்கையுடன் ஒரு முடிவுக்கு வந்தேன்.

ஊராட்சி ஒன்றிய அலுவலர்கள், வங்கி அலுவலர் இவர்களின் ஒத்துழைப்போடு



8 எச். பி. இஞ்சினுக்குள் சாண எரிவாயு செலுத்தப்பட்டு இஞ்சின் இயக்கப்படுகிறது.

தொழில் தெரிந்தவரைக் கொண்டு ரூ. 6,200 மதிப்பீட்டில் 10 அடி விட்டமுள்ள வாயுக் கொள்கலன் (Gas Holder) 350 கன சதுர அடி திறன் கொண்ட சாண எரிவாயு சாதன அமைப்பு கட்டடத் தொழிலாளரின் ஒத்துழைப்புடன் உருவாக்கப்பட்டது. 1977ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 6ஆம் நாள் முதல் டீசல் எண்ணெயுடன் எரிவாயு உட்செலுத்தப்பட்டு இஞ்சின் இயங்க ஆரம்பித்தது.

'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்பதற்கொப்ப என் போன்ற ஏழை எளிய நடுத்தர விவசாயிகள் பயனடைய வேண்டுமென்பதற்காக, சாண எரிவாயு மூலம் இஞ்சின் இயங்கும் விதம், இதனால் ஏற்படும் நன்மைகள் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன்.

எளிய வாழ்வினை மேற்கொண்டிருக்கும் சமுதாயத்திற்கு எளிதில் கிடைப்பது சாணம். நமது அன்றாடத் தேவையைப் பூர்த்தி செய்வதில் பெரும் வங்கு வகிப்பது சாணம். வளர்ந்து வரும் சமுதாயத்திற்கு சக்தி மிக மிகத் தேவை என்பதை யாவரும் அறிவர். அந்தச் சக்தியை, நமது கால்நடைகளின் மூலம் எளிதில் கிடைக்கும் சாணத்திலிருந்தே எளிதில் பெற முடியும். சாணத்திலிருந்து உற்பத்தியாகும் 'மீத்தேன்' என்ற எரிவாயு, விவசாயப் பெருங்குடி மக்களுக்குக் கீழ்க்கண்ட முறைகளில் பயன்படுகிறது.

1. சாண எரிவாயுவைக் கொண்டு அடுப்பு எரிக்கலாம். இதனால் நமக்கு விறகோ, மண்ணெண்ணெயோ தேவையில்லை. பெண்கள் புகையினின்றும், 'ஸ்டவ்'களிலிருந்தும் தங்களைக் காப்பாற்றிக் கொள்ள முடியும்.

2. சாண எரிவாயுவைக் கொண்டு விளக்கு எரிக்க முடியும். இதனால் திடீர் திடீர் என்று அணைந்து போகும் மின்சாரத்தை நம்பியோ, மறைந்திருக்கும் மண்ணெண்ணெயை நம்பியோ இருக்க வேண்டியதில்லை.

3. எரி வாயு தயாரிக்கப்பட்ட பின்பு வெளிவரும் சாணக் கரைசல், நன்கு தயாரிக்கப்பட்டு மக்கு உரமாக—பயிர்களுக்குத் தேவையான ஊட்டச் சத்துள்ள உரமாக — பயன்படுகிறது.

4. 'டீசல்' எண்ணெய் மூலம் இயங்கும் நீரேற்று இயந்திரத்தையும் எரிவாயு மூலம் இயக்கலாம்.

மேலே குறிப்பிட்டுள்ள மூன்று பயன்களையும், அவ்வப்போது வானொலி மூலமும், செய்தித் தாள்கள் மூலமும் அறிந்திருக்கலாம். ஆனால் நான்காவதாக குறிப்பிட்டுள்ள ஆயில் இஞ்சினுக்கு பயன்படுத்துவது பற்றிய விளக்கங்கள் இன்னும் சரியாக வெளிவரவில்லை.



**சாண எரிவாயுவின் உதவியால் இயங்கும் எண்ணெய் இயந்திரத்தை சின்னசேலம் ஊராட்சி ஒன்றிய அலுவலர்களும், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி அலுவலர்களும் பார்வையிட்டனர்.**

இதுபற்றிய விளக்கங்கள் விவசாயிகளுக்குக் கிடைத்தால், அவர்கள் வாழ்வு வளம் பெறும் என்பதில் ஐயமில்லை. ஆகவே, 75 சதவிகிதம் விவசாயிகளைத் தன்னகத்தே கொண்டுள்ள இந்திய துணைக்கண்டப் பொருளாதார மேம்பாட்டிற்கு, 'சாண எரிவாயுத் திட்டம்' ஒரு வரப்பிரசாதம் என்றே கூறலாம். இதன் மூலம் எரி பொருளுக்கென்று அரபு நாடுகளுக்கு நாம் தரும் அன்னியச் செலாவணியை மீதப் படுத்தலாம்.

'கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை' என்பதைப் போல, கிணற்றில் தண்ணீர் இருந்தும் இஞ்சினுக்கு எண்ணெய் வாங்கி ஊற்றி தண்ணீரை இறைக்க முடியாமல் தவித்து வரும் ஏழை விவசாயிகளும், மின் இணைப்புப் பெற்று பம்பு செட் அமைத்துத் தண்ணீர் பாய்ச்ச முடியாத நடுத்தர விவசாயிகளும் இனி கவலையுற வேண்டியதில்லை.

சாதாரணமாகக் கிடைக்கும் சாணத்தைக் கொண்டு எரி வாயுவை உற்பத்தி செய்து அவற்றைப் பயன்படுத்தி இஞ்சினை இயக்கி தண்ணீரை இறைத்துப் பாய்ச்சிப் பயன் அடையலாம்.

## எரிவாயுவினால் இஞ்சினை எப்படி இயக்குவது ?

வாயுக் கொள்கலனிலிருந்து அடைப்பான் பொறுத்தப்பட்ட 1 அங்குல விட்டமுள்ள குழாய் மூலம் எரிவாயு வெளியே எடுக்கப்படுகிறது. அக்குழாயுடன் $\frac{3}{4}$ அங்குல விட்டமுள்ள குழாய் பொறுத்தப்பட்டு இஞ்சினுக்கு அருகில் கொண்டு வரப்படுகிறது. அங்கு மீண்டும் $\frac{1}{2}$ அங்குல விட்டமுள்ள குழாயுடன் அடைப்பான் பொறுத்தப்பட்டு இணைக்கப்படுகிறது. பிறகு இன்னும் சிறிது விட்டம் குறைவாய் உள்ள ரப்பர்க் குழாயுடன் இணைத்து மறு முனையை டீசல் இஞ்சினின் காற்று உட்செல்லும் குழாய்க்குள் (Air Filter Pipe) சிறிய குழாயைப் பொறுத்தி, வால்வு (Inlet Valve) அருகாமையில் எரிவாயு செல்லுமாறு அமைக்கப்படுகிறது. எரிவாயுச் சாதனத் தொட்டியின் அருகாமையில் (சுமார் 5 அடி தூரம்) வாயு செல்லும் குழாயோடு நீர் வடிகட்டி (Water Filter) ஒன்று அவசியம் பொறுத்தப்படல் வேண்டும். இதனால் அவ்வப்போது கொள்கலனிலிருந்து வாயுவுடன் வரும் நீராவி குளிர்ந்து வடிகட்டியில் தங்கிவிட ஏதுவாகும். இஞ்சினின் தொடர் ஓட்டத்தில் தொல்லை இராது.

வழக்கம் போல் இஞ்சினை டீசலில் இயக்கிவிட (Start) வேண்டும். சிறிது நேரம் கழித்து (5 நிமிடம்) $\frac{1}{2}$ அங்குல வாயு அடைப்பானைச் (Cock near the oil Engine) சிறிது சிறிதாகத் திறக்க, எரிவாயு உட்செல்லும். டீசல் எடுத்துக் கொள்ளும் அளவை Fuel Pump-ல் குறைத்துக் கொள்ளலாம். டீசல் அளவு துல்லியமாக கணக்கெடுக்கும்பொருட்டு 'மில்லி லிட்டர்' அளவு குறிக்கப்பட்ட பாட்டிலில் டீசலை ஊற்றி அத்துடன் Fuel Pump-ல் டீசல் செல்லும் குழாயை இணைக்கலாம்). ஓட்டத்தில் இருக்கும் இஞ்சினில் எரிவாயு உட் சென்றவுடன், Fuel Pump —ல் இருக்கும் Governor Rod தன்னிச்சையாக டீசல் செலுத்துவதைக் குறைப்பதைக் காணலாம். இந்த நிலையில், இஞ்சின் புகைபோக்கியில், புகை கூடச் சரியாகத் தெரியாது. (தனி டீசல் ஓட்டத்தில் இருப்பது போல் புகை இருக்காது). இஞ்சின் ஓட்டம், நீர் ஏற்றத் திறன் ஆகியவைகளுக்கொப்ப வாயு உட்செலுத்துவதைக் கூட்டவோ, குறைக்கவோ அடைப்பானைத் திருகுவதன் மூலம் சரி செய்து கொள்ளலாம். ஆனால் டீசலைப் போல், எரிவாயு (Gas) உட்செல்லும் அளவைக் கணக்கிடத் தனிக் கருவியைப் பொருத்தினால்தான் முடியும். அப்படியொரு அமைப்பு இருந்தால் இன்னும் பேருதவியாக இருக்கும்.

நான் பார்த்து வந்த இஞ்சினுக்கும், என்னிடம் இயங்கும் 8 'எச்.பி.' இஞ்சினுக்கும்

உள்ள மாறுபட்ட விவரங்களைக் கீழ்க்கண்ட அட்டவணை மூலம் அறியலாம்.

| குதிரை திறன் (H.P.) | ஓட்டம் மணிக்கு (R.P.M.) | குழாய்கள் நீளம், பொறியின் | | | | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| | | நீரேற்றும் உயரம் (Lift) | உறிஞ்சும் உயரம் (Suction) | டீசல் மட்டும் மணிக்கு | எரிவாயு+ டீசல் 1 மணிக்கு | |
| 6 | 650 | 25 அடி | 25அடி | 1.000 முதல் 1.150 லிட்டர் வரை | 0.100 முதல் 0.150 லிட்டர் வரை | மணிக்கு மீதப்படுவது 1 லிட்டர் டீசல் |
| 8 | 1,200 | 45 அடி | 27அடி | 1.150 முதல் 1.350 லிட்டர் வரை | 0.250 முதல் 0.350 லிட்டர் வரை | 1 லிட்டர் டீசல் |

முதல் வகைப் பொறியை விட, இரண்டாம் பொறியின் பம்புக்கு நீர் உறிஞ்சும் ஆழங்கூடச் சற்று அதிகம். ஆகவே மேற்கூறிய அட்டவணையிலிருந்து பொறியின் இயங்கும் சக்தி, ஓட்டத் திறன், நீரை உறிஞ்சி தள்ளும் திறன் அதிகமாவதைப் போல், மணிக்கு எடுத்துக் கொள்ளும் டீசலின் அளவும் அதிகமாகிறது என்ற உண்மை புலப்படுகிறது.

தினசரி எனது பண்ணையிலிருந்து கிடைக்கும் சாணத்தைக் கரைத்து எரிவாயு தயாரிக்கும் சாதனத்தில் ஊற்றப்படுகிறது. அதனுல் தற்போது உற்பத்தியாகும் எரிவாயு 8 எச்.பி. இஞ்சினுக்கு 3.25 மணி நேரம் (காலையில் மட்டும்) இயக்கப் போதுமானதாக இருக்கிறது. தனி டீசலில் இயங்கும்பொழுது கிணற்று நீரை வடிக்க 4 மணி நேரம் பிடித்தது. தற்போது எரிவாயுவும் சேர்ந்துச் செல்வதால் தண்ணீரின் வேகம் சற்று அதிகரிப்பதோடு, 0.5 மணி நேரம் முன்னதாகவே நீரை வடித்து விடுகிறது. மீதி நேரங்களில் எரி வாயு, சமையல் செய்யப் பயன்படுத்தப் படுகிறது.

## அன்றாடச் செலவில் சிக்கனம்

| | அன்றாடம் இயங்கும் நேரம் | தேவைப் படும் டீசல் | செலவு (ரூபாய்) |
|---|---|---|---|
| டீசல் மட்டும் | 4 மணி | 5.5 லிட்டர் | 7.70 |
| டீசல் மற்றும் எரி வாயு | 3.5 மணி | 1.5 லிட்டர் | 2.10 |
| சேமிப்பு | | 4 லிட்டர் | 5.60 |

ஆகவே, டீசலுடன், சாண எரிவாயுவைச் செலுத்தி, இஞ்சினை இயக்குவதால் நாள் தோறும் எனக்கு 4 லிட்டர் டீசல் செலவு அதாவது ரூபாய் 5.60 மீதமாகிறது.

சமையல் செய்யவும், விளக்கு எரிக்கவும் ஆகும் செலவு ரூ. 1.50-ம், சாண எரிவாயு மூலம் மீதமாகிறது. ஆகவே அன்றாடம் எனக்கு 7.10 மீதமாகிறது.

எனவே ஆண்டுச் சேமிப்பு 7.10X365= ரூ. 2,555. மழைக்காலங்களில் பாசனம் குறைவதால் அதற்கென்று ரூ. 550 குறைத் தாலும், ஆண்டொன்றுக்கு ரூ. 2,000 நிகர சேமிப்பு உண்டு.

8 எச்.பி. இஞ்சின் இயக்கச் செலவு, [1 மணிக்கு 300 மில்லி லிட்டர் வீதம்] =

$$\frac{300X14}{100} = 42 \text{ பைசா மட்டுமே.}$$

இதிலிருந்து ஒரு மணி நேரம் 5 எச்.பி. மின்சார மோட்டாரை இயக்க ஆகும் செல





வைவிட, 8 எச்.பி. ஆயில் இஞ்சினில் செலவு குறைவதைக் காணலாம்.

சாதாரண வேளாண் குடிமகனுகிய என்னுல் அன்ருடம் 4 லிட்டர் டீசல் சேமிக்க முடிகிற தென்ருல், 75 சத விவசாயிகளைக் கொண்ட இந்திய நாட்டில் உள்ள கோடிக் கணக்கான விவசாயிகளும் சாண எரிவாயு தயாரித்து டீசல் இஞ்சினை இயக்கினுல், எவ்வளவு டீசலைக் குறைக்க முடியும் என்பதையும், அதன் மூலம் எவ்வளவு அன்னியச் செலாவணியை மீதப் படுத்த முடியும் என்பதையும் சிந்தித்துப் பார்த்தால் இத்திட்டம் எவ்வளவு பயனுள்ளது என்பது தெளிவாகும்.

வருங்காலத்திற்கு வேண்டிய சக்தியைக் கருத்தில் கொண்டு சம்பந்தப்பட்ட தொழில் நுணுக்க அறிஞர்கள் பொறியியல் மற்றும் வேளாண்மைத் துறைகளில் மேலும் மேலும் ஆய்வு செய்து பல துறைகளிலும் இச்சக்தியைப் புகுத்துவார்களேயானுல் இந்தியப் பொருளாதார வளர்ச்சியில் இத்திட்டம் ஒரு மறுமலர்ச்சியை உண்டாக்கும் என்பதில் ஐயமில்லை.

எண்ணெய் இயந்திரம் இயங்காத நேரத்தில் சாண எரிவாயு சமையல் செய்வதற்குப் பயன் படுத்தப்படுகிறது.

இத்திட்டம், பட்டி தொட்டிகளெல்லாம் பரவுமேயானுல் அண்ணல் காந்தி அடிகள் கண்ட 'சுய தேவைப் பூர்த்தி' கனவு நனவாகும். அதுதான் நமது பொற்காலம்.

# டாக்டரிடமே 'ஃபீஸ்' வாங்கியவர்!



1933-ஆம் ஆண்டு.

காந்தியடிகள், சுற்றுப்பயணத்தின் போது மிகவும் களைப்பாகக் காணப்பட்டார். அப்போது அவர் லாகூரில் தங்கியிருந்தார். காந்தியின் உடல் நிலையை உணர்ந்துகொண்ட ஒரு புகழ்பெற்ற டாக்டர், அவரிடம் வந்து, "மகாத்மாஜி! நான் உங்களை வைத்தியப் பரிசோதனை செய்து பார்க்க விரும்புகிறேன்!" என்ருர்.

"சரி! செய்யுங்கள்! எனக்கு உடம்பு அப்படியொன்றும் மோசமாக இல்லை!" -காந்தி பதில் கூறினுர்.

"பரிசோதித்துப் பார்க்காத வரையிலும் எங்களுக்குச் சமாதான மாயிராது" -டாக்டர் சொன்னுர்.

"சமாதானத்திற்கென்ருல் சரி! ஆனுல் எனக்கு 'ஃபீஸ்' கொடுக்காமல் யாரையும் நான் பரிசோதிக்க விடுவதில்லை. என்னைப் பார்க்க வந்தவர்கள் எத்தனையோ பேர் காத்துக்கொண்டிருக்கும் போது, உங்களுக்காக எதற்காக நேரத்தை வீணுகச் செலவிடுவது?" -காந்தியடிகள் கேட்டார்.

டாக்டர் அசந்துபோய்விட்டார். நோயாளி, டாக்டருக்கு ஃபீஸ் கொடுப்பது போக, மகாத்மா என்னும் நோயாளி, டாக்டரிடமே 'ஃபீஸ்' கேட்கிருரே! என்று வியந்த டாக்டர், காந்தியின் விருப்பத்திற்குச் சம்மதம் தெரிவித்து, தன் பையில் அப்போதிருந்த 16 ரூபாயை எடுத்து காந்தியின் முன்னே வைத்து, "ஒரு நோயாளியைப் பார்க்கப் போயிருந்தேன்; அவர் எனக்குக் கொடுத்த 'ஃபீஸை' உங்கள் முன் வைத்துவிட்டேன்" என்ருர்.

காந்தியடிகள் அந்தப் பணத்தை மிகுந்த திருப்தியுடன் எடுத்துக் கொண்டார். அரிஜன நிதியில் சேர்த்து விட்டார்.

# அண்ணல் காந்தியடிகள் அரைத் துண்டை ஆடையாக அணிந்தது ஏன்?



''அரைத் துண்டை நான் என்னுடைய பிரதான உடையாக மேற்கொண்டது என்னுடைய வாழ்க்கை வரலாற்றில் ஏற்பட்ட உடுப்பு மாறுதல்களில் மிகவும் முக்கியமானதொரு கட்டமாகும்'' என்று காந்தியடிகள் தமது ''யங் இந்தியா'' பத்திரிகையில் ஒரு முறை எழுதியிருந்தார். அரைத்துண்டை அவர் எவ்வாறு தமது இறுதி உடையாக மேற்கொள்ள நேரிட்டது?

மாணவர் வாழ்க்கைக் காலத்தில் லண்டனில் தாம் இருந்து வந்தபோது, அவர் ஐரோப்பிய பாணியில் அமைந்த ஆடைகளையே உடுத்தி வந்தார். பிறகு சுமார் இருபதாண்டுக் காலம் வரை அத்தகைய ஆடைகளையே அவர் அணிந்து வந்தார். தென்னுப்பிரிக்காவில் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட இந்தியர்கள் சிலர் போலீசாரால் சுட்டுக் கொல்லப்பட்ட சமயத்தில்தான் அவர் உடுப்பு மாற்றத்தின் அவசியம் பற்றி முதன் முதலில் சிந்திக்கலாயினுர். அச்சம்பவத்திற்குத் துக்கம் தெரிவிக்கும் வகையிலாக அவர் தமது ஐரோப்பிய உடைகளைக் களைந்தெறிந்துவிட்டு இந்திய ஒப்பந்தத் தொழிலாளிகள் அணியும் எளிய உடுப்பையே தானும் மேற்கொண்டார். 1913-ஆம் வருடத்துப் படங்களில் காந்தியடிகள் அத்தகைய உடைகளைப் பூண்டு சத்தியாகிரகி ரூபத்தில் காணப்படுவதைப் பார்க்கலாம்.

ஆனுல், 1921 செப்டம்பர் மாதத்தில் தான் அவர் உண்மையிலேயே உடையில் பெரும் மாறுதல்களைச் செய்து கொண்டார். அக்காலம் முதலாக இறுதி வரையில் அரைத் துண்டு ஒன்றை மட்டிலுமே அவர் உடுத்தி வந்தார். அம் மாறுதல் பற்றிய வரலாற்றை காந்தியடிகளே வர்ணித்திருக்கிருர்.

காந்தியடிகள் மதுரை வரை தென்னிந்தியாவில் சுற்றுப் பிரயாணம் ஒன்றை மேற்கொண்டிருந்த சமயம் அது. அவர் எப்பொழுதும் ரயில் வண்டியில்தான் பிரயாணம் செய்வது வழக்கம். ஜன நெரிசல் மிகுந்த ரயில் பெட்டிகளில் பயணம் செய்து வந்த அனைவரும் அந்நியத் துணியில் தைக்கப்பட்ட உடைகளை அணிந்திருந்ததைக் கண்டார். அவர்களிடம் காதியின் உபயோகம் பற்றிப் பேச்சுக் கொடுக்கலாயினுர். அவர்கள் தங்கள் தலைகளை அசைத்து, ''காதியின் விலை மிகவும் அதிகமாக உள்ளது; நாங்கள் மிகவும் ஏழைகள் ஆதலால் எங்களால் அதை வாங்குவது சாத்தியமில்லை'' என்று பதிலளித்தனர்.

அவர்கள் பதிலைக் கேட்டு காந்தியடிகள் சிந்தனையில் ஆழ்ந்தார். அவர்கள் கூறுவதிலும் ஓரளவு உண்மை உள்ளது என்பதையும் அவர் உணர்ந்தார். ஆனுல் பிற்பாடு ஒரு சமயத்தில் அவருக்கு ஏற்பட்ட ஓர் அனுபவம் அவ்வுண்மையின் முழு பிரபாவத்தையும் அவர் பரிபூரணமாக உணர்வதற்குக் காரணமாக இருந்தது.

நாட்டில் இலட்சக்கணக்கான மக்கள் தங்களுடைய வறுமை காரணமாக கோவணம் ஒன்றையே தங்களது ஆடையாக அணிந்து வந்ததையும் அவர் கண்டார். அவர்களுக்கு தாம் என்ன பதிலளிக்க முடியும் என்று காந்தி சிந்தனை செய்யலானுர். தாமும் அவர்கள் போலவே எளிய உடையை உடுத்துவதன் மூலமே அவர்களுடைய நிலையைத் தாம் பூரணமாக உணர்ந்திருப்பதை எடுத்துக் காட்ட முடியும் என்ற முடிவுக்கும் அவர் வந்தார்.

அதுவரை அரையங்கியும், காந்திக் குல்லாயும், முழு வேஷ்டியும் அணிந்து வந்த

அவர், அவற்றைக் களைந்தெறிந்து விட்டு, இனி அரைத் துண்டு ஒன்றையே தமது ஆடையாக மேற்கொள்வது என்றும் தீர்மானித்தார். அதன் மூலமாகத்தான் தாமும் ஏழ்மைக் கோல ஆடையுடைகளை யணிந்து பாமர மக்களிடம் நெருங்கிப் பழக முடியும் என்ற முடிவுக்கும் அவர் வந்தார்.

மறுநாட் காலை அவர் தம் தலையை மொட்டையடித்துக் கொண்டார். தம்முடைய குல்லாயையும், அரையங்கியையும் களைந்து எறிந்தார். தம்முடைய மாமூலான வேஷ்டிக்குப் பதிலாக ஒரு முழமே அகலமுள்ள கதரினாலான அரைத் துண்டு ஒன்றைத் தம் இடையில் சுற்றிக் கொண்டார். இந்த அரைத் துண்டு தான் வரலாற்றுப் பிரசித்தம் பெற்று, அவரது கடைசி நாள் வரை அவருடைய வழக்கமான அன்றாட உடையாக அமைந்திருந்தது.

பல ஆண்டுகள் கழித்து, லண்டனில் அவர் அரைகுறையாக ஏன் ஆடையுடுத்தியுள்ளார் என்று கேட்கப்பட்டதற்கு பதிலளிக்கையில்: ''இந்தியாவில் இலட்சக் கணக்கான மக்கள் இவ்வாறு அரைத் துண்டு ஒன்றைத் தான் உடுத்தி வருகின்றனர். அதனால்தான் நானும் அதை உடையாக மேற்கொண்டேன். என்னை 'அரை நிர்வாணப் பக்கிரி' என்று கூடச் சிலர் கூறுகின்றனர். இந்தியாவில் உ[illegible]ள ஏழைகளுள் ஏழைகளான மக்களுடன் எ[illegible]னை ஐக்கியப்படுத்திக் கொள்ளும் பொருட்டே நான் இவ்வாறு உடுத்தி வருகிறேன்'' என்று கூறினார்.

—'நாம் அறிந்த காந்திஜி',

'பப்ளிகேஷன்ஸ் டிவிஷன்'

## விதிக்கு அளித்த மதிப்பு!

கதர் ஆடைகளை அணிவதிலும், அந்நிய நாட்டுத் துணியால் ஆகிய ஆடைகளை வெறுப்பதிலும் காந்தியடிகளுக்கு இணை காந்தியடிகளே தான்! அப்படி இருந்தும் அவரே அந்நிய நாட்டுத் துணியால் ஆன ஆடையை ஒருமுறை அணிய நேர்ந்தது. அரசாங்க விதியை மீறுவது கூடாது என்ற உணர்வில்தான் அதனை அணிந்திருந்தார். அந்த நிகழ்ச்சி இது...

1921—ஆம் ஆண்டு, ஆறு வருடத் தண்டனை அளிக்கப்பெற்று எரவாடா சிறையில் வைக்கப்பெற்றிருந்தார் காந்திஜி. அப்போது அவருக்கு 'குடல்வால் அழற்சி' நோய் ஏற்பட்டதால் மருத்துமனையில் சேர்க்கப்பெற்றிருந்தார். அங்கே, அந்நிய நாட்டுத் துணியால் ஆகிய உடையை அவருக்கு வழங்கியிருந்தார்கள். மருத்துவ மனையில் நோயாளி சொந்த ஆடைகளை உடுத்தக்கூடாது; மருத்துவமனை கொடுக்கும் ஆடையையே உடுத்த வேண்டும் என்பது விதி. மருத்துவமனையின் விதிகளினின்றும் விலக விரும்பவில்லை காந்தியடிகள்; அதனால் அந்நிய நாட்டுத் துணியால் ஆன ஆடையை அணிந்து கொண்டார்.

காந்தியடிகளுக்கு அறுவைச் சிகிச்சை நடைபெற்றது. அவர் மிகவும் பலவீனமாகக் காணப்பட்டார். ஒரு நாள் ஓர் அதிகாரி அவரிடம் வந்து, ''உங்களுக்கு விடுதலை அளிக்கப்பட்டுள்ளதாக அரசாங்கத்திடமிருந்து உத்தரவு வந்துள்ளது. இனி உங்கள் விருப்பம் போல் செய்யலாம்; மருத்துவமனையில் இருக்க நினைத்தால் இருக்கலாம்; வெளியே போக நினைத்தால் போய் விடலாம்! ஆனாலும் நீங்கள் மருத்துவ மனையில் இன்னும் சில நாட்கள் இருப்பது நல்லது என்பது டாக்டர்களின் ஆலோசனை'' என்று கூறினார்.

காந்தியடிகள் அதற்குச் சம்மதம் தெரி[illegible] தார்; ஆனால் மறுநிமிடமே, பக்கத்திலிரு[illegible] தனது சகாவிடம் அவர் சொல்லிய வாசகம் என்ன தெரியுமா?

''என் இந்த (அந்நியநாட்டு) ஆடைகளைக் கழற்றிவிடு; என் சொந்தத் துணிகளைக் கொண்டு வா. இனி ஒரு கணம் கூட இ[illegible] ஆடைகளை என்னால் சகித்துக் கொள்ள மு[illegible]யாது'' என்பதுதான்!

அரசாங்கத்தின் கைதியாக இருந்தபோ[illegible] தான், அரசாங்க விதிக்குக் கட்டுப்பட்டிருக்க வேண்டும். விடுதலை கிடைத்தபிறகு ஏன் விதிக்கு அடிமையாக வேண்டும் என்ற எண்ண[illegible] காந்தியடிகளுக்கு ஏற்பட்டது.

அந்நிய நாட்டு ஆடையைக் களைந்துவிட்டு கதர் ஆடை அணிந்த பின்னரே அவரது மனம் அமைதியடைந்தது.

''கிராமங்களில் ஒரே குளத்தின் நீர் வரைமுறையின்றி குளிக்கவும், துணி துவைக்கவும், குடி தண்ணீருக்கும், சமைக்கவும் பயன்படுத்தப்படுகிறது. பல கிராமங்களில் மாடுகளையு[illegible] இவற்றிலேயே குளிப்பாட்டுகிறார்கள். இந்[illegible] நிலைகளில் எருமைகள் விழுந்து புரண்டு கொண்டிருப்பது நாம் அங்கே சாதாரணமாகக் காண[illegible] கூடிய காட்சியாகும். இம்மாதிரி அக்கிரம[illegible] செய்தும் கிராமங்கள் கொள்ளை நோய்களுக்கு இரையாகி, இன்னும் அழிந்து போகாதிருப்பது ஆச்சரியமே! கிராமத்தாரை வதைத்து வரு[illegible] பெரும்பாலான நோய்களுக்கு கிராமங்களி[illegible] சுத்தமான குடி தண்ணீருக்கு வசதி செய்வதில் போதிய கவனம் செலுத்தப்படாமையே முக்கிய காரணமென்பது வைத்தியர்களின் ஏகோபித்த அபிப்பிராயம்''.

—அண்ணல் காந்தியடிகள்

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

பதிவு எண். M. 8676



# மதுவை ஒழித்து மகிழ்ச்சி நிலவச் செய்வோம்!



"சாராயம் நம் உடலையும்,
நடத்தையையும், அறிவையும்
பாழாக்குகிறது!"

"மலேரியா முதலிய நோய்கள் உடலை
மட்டுமே பாதிக்கும்; மது பானங்களும்,
கஞ்சாவும் உடலோடு ஆன்மாவையும்
பாதிக்கும்."

— அண்ணல் காந்தியடிகள்

"மதுவிலக்கு இல்லையேல்
அரிசனங்களுக்கும்,
விவசாயத் தொழிலாளர்களுக்கும்
விமோசனம் இல்லை!"

— பேரறிஞர் அண்ணா



வெளியீடு :—
இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத்துறை.
தமிழ்நாடு அரசு.

# தீண்டாமையை ஒழிப்போம்!

"இந்தியாவில் அரிசனங்களை ஒதுக்கித் தனியே விடப்பட்டுள்ள பெருங்கொடுமையைப் பார்த்தால், இதற்குச் சமமான கொடுமை உலகத்தில் எங்குமே இருந்ததில்லை என்று சொல்லத் தோன்றுகிறது."

—அண்ணல் காந்தியடிகள்.



இக்கொடுமையை
ஒழிக்கப் பாடுபடுவதே
அண்ணல் காந்தியடிகளுக்கு
நாம் செய்யும்
நன்றிக் கடனாகும்!

ஜெய்—

வெளியீடு :— இயக்குநர், செய்தி, மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.